# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 16 புதன்கிழமை (30.03.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 124





02

இலங்கை நுழைந்தது இறுதி ஆட்டத்துக்கு





16

ராஜீப் புலி வாலைப் பிடித்தார்





21

நந்தி அப்பாலுக்கு அப்பால்



உள்ளே சங்கக்காரவின் வர்ணப்படம் இணைப்பு



உங்கள் உதயனுடன் தொடர்ச்சியாய் வீரர்களின் வர்ணப் படங்களை எதிர்பாருங்கள்

# நகரில் திடீர்த் தீ; கடைகள் நாசம்

## முனீஸ்வரன் வீதியில் அழிவு



யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ். நகரின் பஸ் நிலையத்துக்கு எதிர்ப்புறமாகவுள்ள முனீஸ்வரன் வீதியில் நேற்றிரவு 7.20 மணியளவில் திடீரெனத் தீப்பற்றிக்கொண்டதில் மூன்று கடைகள் முற்றாக எரிந்து நாசமாகின. இதில் பல லட்சம் ரூபா பெறுமதியான புடைவைகள் எரிந்து அழிந்தன என்று வியாபாரிகள் கூறினர்.

இராணுவத்தினரதும் மக்களதும் பெரும் பிரயத்தனத்தால் தீ ஏனைய தொடர்ச்சியாக உள்ள கடைகளுக்கும் பரவாது சுமார் ஒரு மணி நேரத்துக்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

(29 ஆம் பக்கம் பார்க்க)

# உரிமைகளைப் பெறவே அரசுடன் பேச்சு அதை பலவீனமாகக் கருதுவது முட்டாள் தனம்

## கூட்டமைப்பை விமர்சிப்போருக்கு செல்வம் எம்.பி. சாட்டை



மன்னார், மார்ச் 30

நாம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இன்றைய ஆட்சியாளர்களுடனும் ஏனைய பல்வேறு தரப்பினருடனும் தமிழ் மக்கள் இழந்த அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றோம். அதனை எமது அரசியல் பலவீனம் என்று கருதினால் அது ஓர் முட்டாள்தனமான அரசியல் சிந்தனை.

-இப்படி தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் (ரெலோ) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

(29 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய துணைவேந்தராக வசந்தி நேற்று நியமனம்

### இந்தப் பதவியை ஏற்கும் முதல் பெண்



யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணை வேந்தராக மருத்துவ பீடபேராசிரியர் வசந்தி அரசரட்ணம் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பல்கலைக்கழகத்தில் பதவியேற்கின்ற முதல் பெண் துணைவேந்தர் இவரே. இவரது நியமனத்தின் மூலம் இனிவரும் காலங்களில் யாழ். பல்கலைக்கழகம் கல்வி மற்றும் வளங்களில் முன்னோக்கிச் செயற்பட வேண்டும் என்று குடாநாட்டின் கற்றறிந்தோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அவர் துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கும் கடிதம் நேற்று மாலை

(29 ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் குறைக்கப் பணிப்பு

கொழும்பு, மார்ச் 30

தமிழ் - சிங்கள புதுவருட காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை மக்கள் குறைந்த விலைக்குப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப் படவேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் மாலை தெரிவித்தார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருள் பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழு நேற்றுமுன்தினம் மாலை அலரி மாளிகையில் ஜனாதிபதி தலைமையில் கூடியது.

கடந்த மாதத்தில் சந்தையின் விலைப் போக்குகள் தொடர்பில் இங்கு விசேடமாக கவனம் செலுத்தப்பட்டது. தற்பொழுது காய்கறி விலை குறைவடைவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அதேநேரத்தில் முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலைகள் கணிசமான

(29 ஆம் பக்கம் பார்க்க)

## கல்வியியற் கல்லூரியில் பகிடிவதை 15 மாணவர்களுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 30

பகிடிவதையில் ஈடுபட்ட யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் 15 பேர் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர். இவர்களால் பாதிக்கப்பட்ட முதலாமாண்டு மாணவர்கள் 11 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுச் சேர்க்கப்பட்டனர்.

ஆங்கில மொழிப் பாடக் கற்கைக்கான முகிழ்நிலை ஆசிரியர்களுக்கு நேற்று முன்தினம் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் புதிய மாணவர்கள் தேனீர் அருந்துவதற்காகக் கன்ரீனுக்குச் சென்றுள்ளனர். அப்போது மூத்த மாணவர்களால் அவர்கள் தாக்கப்பட்டனர்.

''அங்கிருந்த 2ஆம் வருட மாணவர்கள் எம்மீது கண்மூடித்

(29 ஆம் பக்கம் பார்க்க)

# வீடுகளை பறித்தெடுத்தது கடற்படை அநாதரவாக நின்ற மக்களுக்கு காணி

## மன்னார் ஆயர் இராயப்பு யோசப் வழங்கினார்



மன்னார், மார்ச் 30

கடற்படையினரால் சொந்த வீடுகளும் நிலங்களும் பறிக்கப்பட்டதால் அநாதரவாக நின்ற மன்னார், முள்ளிக்குளம் கிராம மக்கள் தற்காலிக இருப்பிடங்களை ஏற்படுத்திக்கொள்ள மன்னார் ஆயர் இராயப்பு யோசப் காணிகளை வழங்கி உள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

முள்ளிக்குளம் கிராமத்தில் சுமார் 200 வருடங்களுக்கு மேலாக பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த மக்களின் நிலங்கள், வீடுகள் ஆகியவை கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதன்போது, அவர்களுக்கு வேறு இடத்தில் காணிகள் மற்றும் வீடுகள் வழங்கப்படும் என அரசு உறுதி அளித்திருந்தது.

இவர்கள் மீன்பிடியையும், பயிர்ச்செய்கையையுமே தமது வாழ்வாதாரத் தொழிலாக மேற்கொண்டு வந்தனர். இடம்பெயர்ந்த நிலையில் உள்ள இவர்கள் தம்மால் தொழிலை மேற்கொள்ளவோ தேவாலயங்களுக்குச் சென்று வரவோ முடியவில்லை என என்னிடம் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து, நான் பாதுகாப்பு அமைச்சுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தேன். நல்லிணக்க ஆணைக்குழுவிடம் இது குறித்து விளக்கமளித்தேன். ஆனால், இதுவரையில் எவ்வித நடவடிக்கையும்

(29 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே

வடமாகாண முகாமை உதவியாளர்களாக நியமனம் பெறும் 297 பேரின் விவரங்கள் 25 ஆம் பக்கத்தில்.

## அரசியல் தஞ்சம் கோருவோர் குறைவு

கொழும்பு, மார்ச் 30

வெளிநாடுகளில் தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்துள்ளது என ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதரகம் தெரிவிக்கின்றது.

கடந்த 10 வருடங்களுடன் ஒப்பிடும்போது இத்தொகை பாதியால் குறைவடைந்துள்ளது. கடந்த வருடம் இலங்கை உட்பட 44 நாடுகளிடம் இருந்து 3 லட்

(32 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரபரப்பான அரையிறுதி ஆட்டம் நடந்தது நேற்று கொழும்பில். புது வரலாறு படைப்பதாய்ச் சொல்லி தோற்றது நியூஸி. இலங்கை விரட்டிவிட்டது நியூஸியை. மீண்டும் இலங்கை தொடர்ச்சியாய் இரண்டாவது தடவையும் இறுதி ஆட்டத்தை எட்டிப் பார்த்தது. 2007 இல் இலங்கையிடம் அரையிறுதியில் வாங்கிய அடி போதாதென்று நேற்றும் வாங்கியது நியூஸி அடி.

நாணயச் சுழற்சியில் நேற்றும் இலங்கைக்கு தோல்வி. நியூஸிலாந்து துடுப்பெடுத்தாட வந்தது களத்துக்கு. குப்தில்-பிரன்டன் மக்கலம் ஆரம்பித்தது அதிரடியாய் நியூஸியின் கணக்கை. அதிரடி ஆட்டம் சிறிது நேரத்தில் அடக்கம். நிதான ஆட்டத்தை மாற்ற பிரன்டன் மக்கலம் அதிரடிக்கு ஹேரத்தின் பந்தில் முனைப்பு. பிடுங்கியது மக்கலம் விக்கெட். ஆரம்பச் சரிவால் நியூஸிக்கு அதிர்ச்சியில்லை. ரைடர் வந்து தொடர்ந்தார் ஆட்டம். குப்தில் ஆட்டம் சீராய் நகர்வு. ஓட்டங்கள் மெல்ல ஏற்றம். அழைக்கப்பட்டார் சுழல் மாயாவி முரளி. ரைடரை அனுப்பினார் பவிலியனுக்கு.

கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது நியூஸியின் ஆட்டம். இருந்தும் கட்டையும் மீறி ஆடினார் குப்தில். வேகத்தில் வீறு கொண்டு மலிங்க வீசினார் பந்தை. வீழ்த்தப்பட்டது குப்தில் விக்கெட். நியூஸியின் ஆட்டம் பாதாளம் நோக்கி நகர்வு. ரெய்லர் - ஸ்ரைரீஸ் ஆடினர் நிதானமாய். ஒற்றை, இரட்டை ஓட்டங்களாய் ஏற்றிக் கொண்டனர் ஓட்டத்தை. நிர்ணயிக்க வேண்டும் பெரிய தொரு இலக்கு. இதற்காய் இவர்களது போராட்டம் கடுமை. உடைந்தது இலங்கையின் களத்தடுப்பு வியூகங்கள். பிடியெடுப்புக்கள் தவறவில்லை. இருந்தும் பந்துகள் தவறி ஓட்டங்களை எதிரணிக்கு வழங்கியது. ரெய்லருக்கு எமனாய் மென்டிஸ் வருகை. அழைக்கப்பட்டவர் நிறைவேற்றினார் தன் பணிதன்னை. ரெய்லருக்கு கொடுக்கப்பட்டது பிரியாவிடை. இளமைத் துடிப்புடன் களத்துக்குள் வில்லம்ஸன் நுழைவு. மறுமுனையில் அரைச்சதம் பூர்த்தி செய்தார் ஸ்ரைரீஸ். அதிரடிக்கு ஆசை. எடுக்கப்பட்டது 'பட்டிங் பவர்பிளே'. வீழத் தொடங்கியது விக்கெட்டுக்கள். சரிந்தது நியூஸியின் வேகம். வேகம் கொண்டது இலங்கை அணி. விரைவாய் சரித்தது நியூஸியின் பின் வரிசை விக்கெட்டுக்களை. 217 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது நியூஸியின் உலகக் கிண்ணப் பயணம். மலிங்க வேகத்தில் நியூஸியின் மூன்று விக்கெட்டுக்கள் பிடுங்கி எடுப்பு. மென்டிஸ் சுழலில் மூன்று விக்கெட்டுக்கள் சாய்வு. முரளிக்கு கிடைத்தது இரண்டு விக்கெட்டுக்கள்.

இங்கிலாந்தை வீழ்த்திய இலங்கைக்கு இதுவொன்றும் பெரிய இலக்கல்ல. இருந்தும் இறுதி வரை இதற்காய் போராடியது.

தரங்க-டில்ஷான் இலங்கையின் அதிரடி ஆரம்ப ஆட்டக்காரர்கள். நதன் மக்கலம் வீசினார் முதலாவது ஓவர். முதல் பந்து சம்பிரதாயத்துக்கு தடுத்தார் தரங்க. மூன்றாவது பந்தே சென்றது சிக்ஸருக்கு. ஆட்டத்தின் போக்கு விளங்கியது நியூஸிக்கு. ஆரம்ப ஜோடியை சினமேற்றியது நியூஸியின் பந்து வீச்சுக் கூட்டணி. நதன் மக்கலம், சவுத்தீ இந்தக் கூட்டணி அங்கத்தவர்கள். தண்டம் விதித்தும் திருந்தவில்லை நியூஸி. சின மேற்றியும் பலனில்லை. துடுப்பாட்ட வீரர்கள் மனம் தடுமாறவில்லை. மாறா பறந்தது பந்துகள் எல்லைக் கோட்டுக்கு. டில்ஷான் அடக்கி வாசிக்க தரங்க முழக்கம். 40 ஓட்டங்கள் முதல் விக்கெட்டுக்காய் பகிரப்பட்டது. சவுத்தீ வெளியேற்றினார் தரங்கவை. அபாரமாய் பிடியெடுத்தார் ரைடர்.

சங்கா இணைந்தார் டில்ஷானுடன். இருவரும் அமைதியாய் தொடங்கி ஆக்ரோஷத்தை அடைந்தனர். சிறப்பாய் நியூஸியின் ப்ந்துகளைச் சிதறடித்தனர். திக்குமுக்காடி பந்துகளை கோட்டை விட்டது நியூஸி. அதிஷ்டத்தால் தென்னாபிரிக்காவை வென்ற அணியென்று நிரூபித்தது. டில்ஷான், சங்கா இருவரும் கடந்தனர் அரைச் சதம். இதனால் இலங்கை தாண்டியது 150 ஓட்டங்களை.

சவுத்தீயின் பந்தில் பவுண்டரிக்கு ஆசைப்பட்டு டில்ஷான் சதம் தவறியது. புதிதாய் வந்த மஹேல சொதப்பினார். வெளியேறினார் ஓர் ஓட்டத்துடன். சரிவுகள் அடுத்தடுத்து நடந்ததால் ஆட்டம் பரபரப்பானது. சோர்ந்திருந்த நியூஸிலாந்து துள்ளிக்குதித்தது. 'டெஸ்ட்' ஆட்டம் போல் நகர்ந்தது. 169 ஓட்டங்களில் 4 விக்கெட்டுக்கள். நம்பியிருந்த சங்காவும் கைவிட்டுப் போய்விட்டார். வாடியது இலங்கை ரசிகர்களின் முகம். சில்வா-சமரவீர தடுப்பாட்டம். ஓவர்கள் கடந்தன. ஓட்டங்கள் பெறப்படவில்லை. ஆட்டத்தின் போக்கு மாறியது. 41 ஓவரை வீசினார் ரைடர். ஒற்றை ஓட்டங்களைக் கட்டுப்படுத்த உள்ளே களத்தடுப்பில் நின்றனர் நியூஸிலாந்துக்காரர்கள். இரண்டு பவுண்டரிகள் அடுத்தடுத்து சென்றதால் துள்ளிக் குதித்தனர் இலங்கை ரசிகர் கள். மீண்டும் சவுத்தீ தன் வித்தையை காட்டினார். 185 ஓட்டங்களில் வெளியேறினார் சில்வா. மத்தியூஸ் களத்துக்கு உப ஓட்டக்காரர் மஹேலவுடன் வருகை. எடுக்கப்பட்டது 'பட்டிங் பவர்பிளே'. இறுகிய நேரத்தில் மக்கே வழங்கினார் அகலப் பந்துடன் ஒரு பவுண்டரி. ஆட்டத்தின் சூடு மெல்ல தணிவு. அடுத்து ஓவர் வீசினார் சவுத்தீ. மத்தியூஸ் அடித்தார் சிக்ஸர். தொடர்ந்து சென்றது பவுண்டரி. இலங்கையின் வெற்றி 47 ஓவரில் உறுதியானது. சங்கா ஆட்ட நாயகனாய்த் தெரிவு.

-டிலீப்-

## சாதனை நாயகன் முரளி



முரளி விடை கொடுத்தார் இலங்கை மண்ணுக்கு. அவருக்கு இந்த மண்ணில் நேற்று இறுதியாட்டம். ரசிகர்களின் உணர்வுகள் அவரின் பிரிவுக்கு கண்ணீராய் வெளிப்பாடு.

# கர்ஜித்தன இலங்கை சிங்கங்கள் நுழைந்தன இறுதி ஆட்டத்துக்குள்

## ஆசிய நாடுகளின் கட்டுப்பாட்டில் உலகக் கிண்ணம்



யாழ். நகர் மத்தியில் திரையில் ஆட்டத்தைப் பா[illegible] கூட்டம்

### 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண முதலாவது அரையிறுதி ஆட்டம்

ஆட்டம்: இலங்கை Vs நியூஸிலாந்து
நாணயச் சுழற்சி: நியூஸிலாந்து
முடிவு: 05 விக்கெட்டுக்களால் இலங்கை வெற்றி
ஆட்டநாயகன்: சங்கக்கார

நியூஸிலாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| குப்தில் | b மலிங்க | 39 | 65 | 3 | 0 |
| பிரன்டன் மக்கலம் | b ஹேரத் | 13 | 21 | 1 | 1 |
| ரைடர் | c சங்கக்கார b முரளிதரன் | 19 | 34 | 2 | 0 |
| ரெய்லர் | c தரங்க b மென்டிஸ் | 36 | 55 | 1 | 0 |
| ஸ்ரைரீஸ் | lbw b முரளிதரன் | 57 | 77 | 5 | 0 |
| வில்லம்ஸன் | lbw b மலிங்க | 22 | 16 | 3 | 0 |
| நதன் மக்கலம் | c சங்கக்கார b மலிங்க | 09 | 09 | 0 | 1 |
| ஓரம் | c ஜெயவர்த்தன b டில்ஷான் | 07 | 09 | 1 | 0 |
| வெற்றோரி | ஆட்டமிழப்பில்லை | 03 | 03 | 0 | 0 |
| சவுத்தீ | c சங்கக்கார b மென்டிஸ் | 00 | 03 | 0 | 0 |
| மக்கே | b மென்டிஸ் | 00 | 02 | 0 | 0 |
| உதிரிகள் | (lb 5,w 6, nb 1) | 12 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| மலிங்க | 09 | 55 | 3 | 0 |
| ஹேரத் | 09 | 31 | 1 | 1 |
| மத்தியூஸ் | 06 | 27 | 0 | 0 |
| மென்டிஸ் | 9.5 | 35 | 3 | 0 |
| முரளிதரன் | 10 | 42 | 2 | 1 |
| டில்ஷான் | 05 | 22 | 1 | 0 |

TOTAL - 217/10 (48.5)

1-32 (பிரன்டன் மக்கலம்), 2-69 (ரைடர்), 3-84 (குப்தில்), 4-161 (ரெய்லர்), 5-192 (வில்லம்ஸன்), 6-204 (நதன்மக்கலம்), 7-213 (ஸ்ரைரீஸ்), 8-215 (ஓரம்), 9-217 (சவுத்தீ), 10-217 (மக்கே)

இலங்கை

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| தரங்க | c ரைடர் b சவுத்தீ | 30 | 31 | 04 | 1 |
| டில்ஷான் | c ரைடர் b சவுத்தீ | 73 | 93 | 10 | 1 |
| சங்கக்கார | c ஸ்ரைரீஸ் b மக்கே | 54 | 79 | 07 | 1 |
| ஜெயவர்த்தன | lbw b வெற்றோரி | 01 | 03 | 00 | 0 |
| சமரவீர | ஆட்டமிழப்பில்லை | 23 | 38 | 02 | 0 |
| சாமரசில்வா | b சவுத்தீ | 13 | 25 | 02 | 0 |
| மத்தியூஸ் | ஆட்டமிழப்பில்லை | 14 | 18 | 01 | 1 |
| ஹேரத் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மென்டிஸ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மலிங்க | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| முரளிதரன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 10, lb 2) | 12 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| நதன் மக்கலம் | 06 | 33 | 00 | 0 |
| சவுத்தீ | 10 | 57 | 03 | 2 |
| வெற்றோரி | 10 | 36 | 01 | 0 |
| ஓரம் | 08 | 29 | 00 | 1 |
| மக்கே | 9.5 | 37 | 01 | 1 |
| ஸ்ரைரீஸ் | 2 | 12 | 00 | 0 |
| ரைடர் | 2 | 14 | 00 | 0 |

TOTAL - 220/5(47.5)

1-40 (தரங்க), 2-160 (டில்ஷான்), 3-161 (ஜெயவர்த்தன), 4-169 (சங்கக்கார), 5-185 (சில்வா)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

VACANCY IN JAFFNA
At M & E Company
- Retired Electrical and Civil Engineer
- Retired Technical Officer
- Plumber with Experience

Walk in Interview in Jaffna
Please Contact: 0759329893, 0759329909

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் வெற்றி தொடருமா?

இதுவரை நடைபெற்ற 9 உலகக் கிண்ணத் தொடர்களில் இந்தியாவும், பாகிஸ்தானும் நான்கு முறை மோதியுள்ளன. நான்கு முறையும் இந்தியாவே வெற்றி பெற்றுள்ளது. இப்போது, 5 ஆவது முறையாக மொஹாலியில் இன்று புதன்கிழமை இரு அணிகளும் பலப் பரீட்சை நடத்துகின்றன.

1975 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற முதலாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் வெவ்வேறு பிரிவுகளில் இடம்பெற்றிருந்த இந்தியாவும், பாகிஸ்தானும் முதல் சுற்றிலேயே வெளியேறியதால் சந்தித்துக் கொள்ள முடியவில்லை.

1979 இல் இங்கிலாந்தில் நடைபெற்ற இரண்டாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் ''பி' பிரிவில் இடம்பெற்றிருந்த இந்திய அணி ஒரு வெற்றியைக் கூட பெறாமல் நாடு திரும்பியது. இந்தத் தொடரில் பாகிஸ்தான் அணி ''ஏ' பிரிவில் இடம்பெற்றிருந்ததால் இந்தியாவுடன் மோத வாய்ப்பு அமையவில்லை.

1983 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் நடைபெற்ற மூன்றாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் சிறப்பாக ஆடிய இந்திய அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது. இருப்பினும், அரையிறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியிடம் பாகிஸ்தான் தோற்றதால் இந்தத் தொடரிலும் இந்தியா - பாகிஸ்தான் மோதும் வாய்ப்பு அமையவில்லை.

1987இல் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறிய இந்திய அணி இங்கிலாந்திடமும், பாகிஸ்தான் அணி ஆஸ்திரேலியாவிடமும் தோற்றுத் தொடரில் இருந்து வெளியேறின.

இந்தியாவும், பாகிஸ்தானும் முதல் நான்கு உலகக் கிண்ணப் போட்டியிலும் எந்த ஆட்டத்திலும் எதிர்த்து விளையாடாதது இருநாட்டு ரசிகர்களுக்கும் ஏமாற்றமாகவே இருந்தது.

### முதல் வெற்றி

1992 இல் ஆஸ்திரேலியா, நியூசிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் பலத்த எதிர்பார்ப்புகளுக்கு இடையே 1992 மார்ச் 4 ஆம் திகதி சிட்னி நகரில் நடைபெற்ற லீக் சுற்று ஆட்டத்தில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 49 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 216 ஓட்டங்களை எடுத்தது. டெண்டுல்கார் 54 ஓட்டங்களும், அஜய் ஜடேஜா 46 ஓட்டங்களும் எடுத்தனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 48.1 ஓவர்களில் 173 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வி கண்டது.

இருப்பினும், இந்தியாவிடம் தோல்வி கண்ட பாகிஸ்தான் அரையிறுதியில் நியூசிலாந்தையும், இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்தையும் வீழ்த்தி முதன் முதலாக கிண்ணத்தைக் கைப்பற்றியது.



### பரபரப்பான காலிறுதி

இதேபோல, 1996 இல் நடைபெற்ற உலகக் கிண்ண போட்டித் தொடரில் காலிறுதிச் சுற்றில் இந்தியாவும், பாகிஸ்தானும் மோதின. பெங்களூரில் மார்ச் 9 ஆம் திகதி நடைபெற்ற இந்த ஆட்டம் அதிக எதிர்பார்ப்புகளுக்கிடையே நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 287 ஓட்டங்களை குவித்தது. சித்து சிறப்பாக ஆடி 93 ஓட்டங்கள் எடுத்தார். ஜடேஜா அதிரடியாக 25 பந்துகளில் 45 ஓட்டங்கள் குவித்தார். ஒரு ஓவர் குறைக்கப்பட்ட நிலையில், தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 49 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 248 ஓட்டங்களை மட்டுமே எடுத்துத் தோல்வியைத் தழுவியது.

இந்தத் தொடரில் இந்திய அணி அரையிறுதி வரை முன்னேறியது.

1999 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் 'சூப்பர் சிக்ஸ்' சுற்றில் இந்தியாவும், பாகிஸ்தானும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 227 ஓட்டங்கள் எடுத்தது. டிராவிட் அதிகபட்சமாக 61 ஓட்டங்களைக் குவித்தார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 45.3 ஓவரில் 180 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியைத் தழுவியது. இந்த ஆட்டத்தில் சிறப்பாக பந்துவீசிய வெங்கடேஷ் பிரசாத் 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

### 4ஆவது முறையாக...

2003 இல் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் 'ஏ' பிரிவில் இடம்பெற்றிருந்த இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மார்ச் 1 ஆம் திகதி சந்தித்தன.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 273 ஓட்டங்களை குவித்தது. சயிட் அன்வர் சிறப்பாக ஆடி 101 ஓட்டங்கள் குவித்தார்.

பாகிஸ்தானுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சிறப்பாக ஆடிய இந்திய அணி 45.4 ஓவரில் 4 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து 276 ஓட்டங்களை எடுத்து உலகக் கிண்ணத்தில் 4ஆவது முறையாக பாகிஸ்தானை வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் இந்தியாவின் நட்சத்திர வீரர் டெண்டுல்கார் 98 ஓட்டங்கள் எடுத்தார். இந்தத் தொடரில் இறுதி ஆட்டத்துக்கு முன்னேறிய இந்திய அணி ஆஸ்திரேலியாவிடம் தோல்வியைத் தழுவியது.

2007 இல் மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெற்ற 9 ஆவது உலகக் கிண்ணத் தொடரில் பங்களாதேஷ், இலங்கையுடனான ஆட்டங்களில் தோல்வியைத் தழுவியதால் முதல் சுற்றிலேயே இந்திய அணி வெளியேறியது.

### 8 ஆண்டுகளுக்குப் பிறகு....

உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தானும், இந்தியாவும் மொஹாலியில் நடைபெறும் 2 ஆவது அரையிறுதி ஆட்டத்தில் புதன்கிழமை சந்திக்கின்றன. உலகக் கிண்ணத்தில் 8 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது இந்திய அணி பாகிஸ்தானை எதிர்கொள்கின்றது. இது தான் இறுதி ஆட்டம் என்பது போன்று ரசிகர்கள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தியாவும், பாகிஸ்தானும் சம பலத்துடனே காணப்படுகின்றன. சுழல்பந்து வீச்சை இந்திய வீரர்கள் சிறப்பாக எதிர்கொள்வார்கள் என்பதால் இதுவரை மற்ற அணிகளை அச்சுறுத்திய அப்ரிடியின் பந்து வீச்சு பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது என்றே நம்பலாம். துடுப்பாட்டத்தில் இந்திய அணி பலம் வாய்ந்ததாக இருந்தாலும், துல்லியமான பந்துவீச்சு, சிறப்பான களத்தடுப்பு இல்லாதது இந்திய அணியின் பலவீனம். இருப்பினும், இதுவரை உலகக் கிண்ணத் தொடரில் நான்கு முறை பாகிஸ்தானை எதிர் கொண்ட இந்திய அணி இதுவரை தோற்றதில்லை.

எனினும் இந்திய வீரர்கள் தங்களது முழுப் பலத்தையும் இந்த ஆட்டத்தில் காண்பித்தால் மட்டுமே உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தானிடம் தோற்றதில்லை என்ற வரலாற்றைக் காலாவதியாகாமல் பார்த்துக் கொள்ள முடியும்.

(15)

# டோனி எப்போது கூட்டணியில் இணையப் போகிறார்





உலகக் கிண்ணத்தை வென்ற இரண்டாவது இந்திய அணித்தலைவர் என்ற பெருமையை டோனி பெற வாய்ப்பு உள்ளது. இந்தப் பட்டியலில் நான் மட்டும் 28 ஆண்டுகளாக தனிமையில் இருக்கிறேன். என்னோடு டோனியும் சேர வேண்டும். இவ்வாறு கிரிக்கெட் ஜாம்பவான் கபில் தேவ் விருப்பம் தெரிவித்துள்ளார்.

கடந்த 1983 இல் கபில் தேவ் தலைமையிலான இந்திய அணி, உலகக் கிண்ணத்தை வென்று, வரலாறு படைத்தது. தற்போது 'டோனியின் படை' சாதிக்கும் என்ற எதிர்பார்ப்புக் காணப்படுகின்றது. இது குறித்து கபில் தேவ் கூறியதாவது:

இந்திய அணி இரண்டாவது முறையாக உலகக் கிண்ணத்தை வெல்லும் நேரம் நெருங்கி விட்டது. இதற்கான திறமை டோனி தலைமையிலான அணியிடம் உள்ளது. அவர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். கடந்த 28 ஆண்டுகளாக உலகக் கிண்ணத்தை வென்ற இந்தியஅணித் தலைவர் என்ற பெருமையுடன், நான் மட்டும் தனிமையில் இருக்கிறேன். என்னோடு யாராவது சேர வேண்டும் என விரும்புகிறேன். இதற்கேற்ப, உலகக் கிண்ணத்தை வென்ற இரண்டாவது இந்திய அணித்தலைவர் என்ற பெருமையை டோனி பெறலாம். இந்த முறை நல்லதே நடக்கும் என நம்புவோம். வெற்றி பெற வேண்டும் என்ற உணர்வுடன் தான் ஒவ்வொருவரும் மைதானத்தில் களமிறங்குகிறோம். தற்போதைய இந்திய அணி சாதித்துக் காட்டும் என்ற நம்பிக்கை உள்ளது.

### பந்து வீச்சு பலவீனம்

இந்திய அணியின் பந்து வீச்சு பலவீனமாக உள்ளது என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள இயலாது. இதே பந்து வீச்சாளர்களுடன்தான் லீக் சுற்று முதல் காலிறுதி வரை வென்றுள்ளோம். இவர்களது சிறப்பான செயற்பாடு காரணமாக தான் அரையிறுதியை எட்டியுள்ளோம். மிக முக்கியமான அரையிறுதியில் துடுப்பாட்ட வீரர்கள் கூடுதல் பொறுப்புடன் ஆட வேண்டும்.

மொஹாலியில் இன்று நடக்கும் இந்தியா, பாகிஸ்தான் இடையிலான அரையிறுதி மிகவும் 'டென்ஷனாக' இருக்கும். இதில், இரு அணி வீரர்களும் வார்த்தைப் போரில் ஈடுபட வாய்ப்பு இல்லை. இந்த விடயத்தில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் மிகவும் கண்டிப்பாக உள்ளது. சம்பந்தப்பட்ட வீரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும். 'மைக்ரோபோன்' போன்ற நவீன தொழில்நுட்பம் இருப்பதால், வீரர்களின் தவறை எளிதில் கண்டுபிடித்து விடலாம். எனவே, எந்த ஒரு வீரரும் தனது கிரிக்கெட் வாழ்க்கைக்கு ஆபத்து ஏற்படும் செயல்களில் ஈடுபடமாட்டார். தற்போது களத்திற்கு வெளியே தான் அதிகளவில் வார்த்தைப் போர் நடக்கிறது - என்றார். (15)

உங்கள் இல்லங்களுக்குத்
தேவையான
அனைத்துவகையான
இலத்திரனியல் சாதனங்களை
குறைந்த விலையில் பெற்றிட
இன்றே நாடுங்கள்



Midea
Electro Mart
No: 1-1, 1-H,
Stanley Road,
Jaffna, SriLanka.
T.P: 021 222 4566,
Fax:021 222 1646,
Authorized Dealer for Abans Ltd.
e-mail: midea21@gmail.com
(48,19,26)

# இயல்பாக ஆடவும் 'யூவி'



பாகிஸ்தானுக்கு எதிராக சொந்த ஊரில் விளையாட இருப்பதால் யுவராஜ் சிங் 'கூலாக' இருக்க வேண்டும். இவ்வாறு இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் கங்குலி அறிவுறுத்தியுள்ளார்.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியத் துணைக் கண்டத்தில் இடம் பெற்று வருகின்றது. மொஹாலியில் இன்று இடம்பெறவுள்ள அரையிறுதியில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன. இந்த ஆட்டம் யுவராஜ் சிங் பிறந்த ஊரான சண்டிகரில் உள்ள மொஹாலி, பஞ்சாப் கிரிக்கெட் சங்க மைதானத்தில் நடக்கின்றது.

இதுகுறித்து, கடந்த 2003 இல் இந்திய அணியை இறுதிக்கு அழைத்துச் சென்ற முன்னாள் அணித் தலைவர் கங்குலி கூறியதாவது:

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான அரையிறுதி ஆட்டம் இரு அணியினருக்கும் மிக முக்கியமான ஒன்று. இந்த ஆட்டத்தில் இந்திய வீரர்களுக்கு சற்று நெருக்கடி அதிகமாக இருக்கும். ஏனெனில் சொந்த மண்ணில், உள்ளூர் ரசிகர்களின் முன்னிலையில் விளையாட இருப்பதால் இந்திய வீரர்கள் மீது அதிக எதிர்பார்ப்பு இருக்கும். ஆனால் இது குறித்து கவலைப்படத் தேவையில்லை. முழுத் திறமையை வெளிப்படுத்தும் பட்சத்தில் சுலப வெற்றி பெறலாம்.

சொந்த ஊரில் விளையாட உள்ள யுவராஜ் சிங் மிகுந்த கவனமுடன் செயல்பட வேண்டும். துடுப்பெடுத்தாட மைதானத்திற்குள் வரும் போது 'கூலாக' களமிறங்க வேண்டும். ஏனெனில் உள்ளூர் ரசிகர்கள் இவரிடம் இருந்து நிறைய எதிர்பார்ப்பார்கள். ஆனால் இதுகுறித்து சிந்திக்காமல், இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் போதுமானது. இதுவரை சிறப்பாக விளையாடி அணியின் வெற்றிக்கு வித்திட்டுள்ள இவர், முக்கியமான அரையிறுதியிலும் கைகொடுப்பார் என நம்புகிறேன் - என்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் பயிற்சியில் ஈடுபட்ட இலங்கை அணி வீரர்கள்

# பலமான பாதுகாப்பு

இந்தியா -பாகிஸ்தான் அணிகள் மோதும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தினை காண இரு நாட்டுத் தலைவர்கள் வருவதால் பஞ்சாப் மாநிலம் முழுவதும் தேசிய பாதுகாப்புப் படையினரின் வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. 2200 பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

அது மட்டுமின்றி ஆட்டம் நடைபெறும் மைதானத்திற்கு 7 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது அரையிறுதி பஞ்சாப் மாநிலம் மொஹாலியில் இடம்பெறுகின்றது. ஆட்டம் மதியம் 2.30 மணிக்கு ஆரம்பமாக உள்ளது. இந்த ஆட்டத்தைக் காண இந்தியா வருமாறு பிரதமர் மன்மோகன்சிங், பாகிஸ்தான் பிரதமர் கிலானி, அதிபர் சர்தாரி ஆகியோருக்கு அழைப்பு விடுத்திருந்தார். பிரதமர் கிலானி போட்டியைக் காண இந்தியா வருவதாக உறுதியளித்துள்ளார். கிலானி இந்தியா வருகையையொட்டிப் பாதுகாப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

ஏற்கனவே பயங்கரவாதிகள் அச்சுறுத்தல் இருப்பதன் காரணமாக பாதுகாப்பு பன்மடங்கு பலப்படுத்தப்பட்டுள்ளது. கிலானி தங்கவிருக்கும் தாஜ் ஹோட்டல் முழுவதும் தேசிய பாதுகாப்புப்படையினரின் பாதுகாப்பு வளையத்திற்குள் வந்துள்ளது. 150 இற்கும் மேற்பட்ட கண்காணிப்புக் கமராக்கள் வைக்கப்பட்டுள்ளன. தாஜ் ஹோட்டலைச் சுற்றி 1200 பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். 'பராமிலிட்டரியும்' பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் வரலாறு காணாத பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (15)

# ஆட்டத்துக்கு வழக்கு


இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதும் அரையிறுதி ஆட்டத்தினை இந்தியாவிற்கு வெளியே நடத்த வேண்டும் என கராச்சி நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்தியா- பாகிஸ்தான் அணிகளுக்கிடையே உலகக் கிண்ண அரையிறுதி ஆட்டம் பஞ்சாப் மாநிலம் மொஹாலியில் நடக்கின்றது. இந்தியா-பாகிஸ்தான் நாட்டு பிரதமர்கள் இந்த ஆட்டத்தினை காண வரவுள்ளனர். இந்த நிலையில் பாகிஸ்தானின் கராச்சி நீதிமன்றத்தில் அபித்ஹாசன் என்ற வழக்கறிஞர் மனு தாக்கல் ஒன்றினை சமர்ப்பித்தார்.

அதில் கூறியிருப்பதாவது , அரையிறுதி ஆட்டத்தினை இந்தியாவில் நடத்தினால் பாகிஸ்தான் வீரர்களுக்கு உரிய பாதுகாப்பு கிடைக்காது. இந்தியாவில் முக்கிய இந்து அமைப்பைச் சேர்ந்தவர்களால் ஆபத்து உள்ளது. மேலும் ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றி பெற்றாலும் சரி, இந்தியா வெற்றி பெற்றாலும் சரி இரு தரப்பிலும் பதட்டமும், அசம்பாவித சம்பவங்கள் நிகழலாம். இதனால் ஆட்டத்தினை இலங்கை, அல்லது டுபாயில் நடத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலுக்கும், பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்திற்கும் கடிதம் எழுதப்பட்டுள்ளதாகப் பாகிஸ்தானின் முன்னணி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (15)

# இந்தியாவைக் கட்டுப்படுத்துவது எனது இலக்கு

உமர் குல்



அரையிறுதியில், இந்திய முன்னணித் துடுப்பாட்ட வீரர்களை விரைவில் ஆட்டமிழக்கச் செய்வதே இலக்கு. இவ்வாறு பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் உமர் குல் தெரிவித்துள்ளார்.

மொகாலியில், இன்று இடம்பெறவுள்ள இரண்டாவது அரையிறுதியில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

இது குறித்துப் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் உமர் குல் கூறியதாவது:

இந்தியாவுக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தை மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளேன். இந்த ஆட்டம், இந்தியத் துடுப்பாட்ட வீரர்களுக்கும், பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களுக்கும் இடையிலான போட்டியாக கருதுகிறேன். ஏனெனில் இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை பலமாக உள்ளது. குறிப்பாக முன் வரிசையில் சச்சின், சேவாக், கம்பீர் உள்ளிட்டோர் நல்ல 'போர்மில்' உள்ளனர். இவர்கள் விக்கெட்டை விரைவில் வீழ்த்தும் பட்சத்தில், ஓட்ட வேட்டையை தடுக்கலாம். எனவே இந்த ஆட்டத்தில் இந்திய முன்னணி வீரர்களை விரைவில் வீழ்த்துவதை இலக்காக கொண்டு செயற்படுவேன்.

எங்கள் அணியின் பந்துவீச்சுச் சிறப்பாக உள்ளது. இதுவரை 21 விக்கெட்டுக்கள் வீழ்த்தி, முதலிடத்தில் உள்ள அணித்தலைவர் அப்ரிடி, இந்தியாவுக்கு எதிராகச் சிறப்பாக செயற்படுவார் என நம்புகின்றேன். சுழலில் அப்துர் ரெஹ்மான், ஹபீஸ் உள்ளிட்டோர் நம்பிக்கை அளித்து வருகின்றனர். வேகப் பந்துவீச்சில் எனது பங்களிப்பு திருப்தி அளிக்கின்றது. இந்த ஆட்டத்தில் அக்தர் விளையாடும் பட்சத்தில், இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு சுலபமாக நெருக்கடி அளிக்கலாம். ஏனெனில் நிறைய அனுபவம் பெற்றுள்ள இவர், இந்தியாவுக்கு எதிராகச்சிறப்பாக செயற்பட்டுள்ளார். ஒருவேளை இவர் விளையாடாத பட்சத்தில், என் மீது கூடுதல் பொறுப்பு அதிகமாகும்.


இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டி என்றாலே ஒருவித எதிர்பார்ப்பு இருக்கத்தான் செய்யும். இந்த ஆட்டத்தில் இரு அணியினருக்கும் நெருக்கடி உண்டு. ஆனால் இந்திய வீரர்களுக்குச் சற்று அதிகம். ஏனெனில் சொந்த மண்ணில், உள்ளூர் ரசிகர்களின் முன்னிலையில் விளையாடுகின்றனர். லீக் மற்றும் காலிறுதியில் எங்கள் வீரர்களின் செயற்பாடு திருப்தி அளிக்கிறது. எனவே இந்தியாவுக்கு எதிராக நூறு சதவீத திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெற முயற்சிப்போம் - என்றார். (15)

# வி.ஐ.பி.ஆசனம் 30 வேண்டும்

எதிர்வரும் 2 ஆம் திகதி மும்பையில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் இறுதி ஆட்டத்தை பார்வையிடுவதற்கு ஐ.சி.சி. தலைவருக்கான பகுதியில் 30ஆசனங்களை ஒதுக்கித்தருமாறு இலங்கை ஜனாதிபதியின் அலுவலகங்கள் கோரியுள்ளதாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அணி அரையிறுதி ஆட்டத்துக்கு தெரிவாகி, இறுதி ஆட்டத்துக்கு தெரிவாகும் வாய்ப்பை கொண்டிருக்கும் நிலையில் சரத் பவாரிடம் இலங்கை அரசினால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டதாக தம்மை இனங்காட்ட விரும்பாத இந்திய கிரிக் கெட் சபை உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

'இலங்கை ஜனாதிபதி 30 பேர் கொண்ட குழுவுடன் ஆட்டத்தைப் பார்வையிட வரக்கூடும். 200 ஆசனங்கள் கொண்ட ஐ.சி.சி. தலைவருக்கான பகுதியில் அந்தக் குழுவுக்கு ஆசனங்கள் ஒதுக்கப்படும். இந்திய அணி இறுதி ஆட்டத்துக்குத் தெரிவானால் பிரமுகர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அப்போது உள்ளூர் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வது கடினமானதாக இருக்கும்'' என மேற்படி உத்தியோகஸ்தர் தெரிவித்துள்ளார். (15)



# அதிர்ச்சியில் வெற்றோரி

காலிறுதியில் இங்கிலாந்தை இலங்கை வென்ற ஆடுகளத்தை புதுப்பிக்காமல் அதிலேயே அரையிறுதி ஆட்டத்தை நடத்த இருப்பது குறித்து நியூசிலாந்து அணித்தலைவர் டானியல் வெற்றோரி அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

இதே மைதானத்தில் சனிக்கிழமை நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இலங்கை அணி இங்கிலாந்தை 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இந்த ஆட்டத்துக்குப் பின் ஆடுகளம் புதுப்பிக்கப்படாமல், அப்படியே அரையிறுதிக்குப் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இது குறித்து வெட்டோரி கூறியிருப்பது:


பொதுவாக ஒவ்வொரு ஆட்டத்துக்கு முன்பும் ஆடுகளம் புதுப்பிக்கப்படுவது வழக்கம். ஆனால் உலகக் கிண்ணத்தின் அரையிறுதி ஆட்டம் நடைபெறும் மைதானத்தின் ஆடுகளம் புதுப்பிக்கப்படாமல் அப்படியே பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது அதிர்ச்சி அளிக்கிறது. ஏனெனில் இந்த மைதானத்தில் தான் சனிக்கிழமை நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இலங்கை இங்கிலாந்தை வென்றுள்ளது என்றார்.

அரையிறுதி ஆட்டம் குறித்துப் பேசிய அவர், உலகக் கிண்ணத்தில் இதுவரை அரையிறுதிக்கு மேல் முன்னேறியதில்லை என்ற நிலையை மாற்றி உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டுமென்ற உத்வேகத்துடன் இருக்கிறோம் என்றார் வெற்றோரி. (15)

# தொலைக்காட்சி பார்க்க வேண்டாம்

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான இந்த ஆட்டம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தொலைக்காட்சிகளில் இது தொடர்பான செய்திகள், விவாத நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. யார் வெற்றி பெறுவார்கள்? எப்படி வீரர்களுடைய ஆட்டம் எப்படி இருக்கும்? என்பதெல்லாம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அலசி ஆராயப்படுகிறது. இதுபோன்ற செய்திகள், நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண்டாமென்று பாகிஸ்தான் வீரர்களிடம் நான் கூறியுள்ளேன் - என்றார் பாக்.அணித் தலைவர் அப்ரிடி.

நானும் கடந்த சில நாள்களாக எங்கள் அரையிறுதி ஆட்டம் தொடர்பான செய்திகளையோ, நிகழ்ச்சிகளையோ பார்ப்பது இல்லை. ஏனெனில்இது வீரர்களைசிறிய அளவிலாவது பாதிக்கும் [illegible]



# இவர்கள் எப்போது திருந்துவார்கள்

இந்தியா பாகிஸ்தான் அரை இறுதி ஆட்டத்துக்கான 'ரிக்கெட்டுகள்' விற்றுத் தீர்ந்துவிட்டன என்று பஞ்சாப் கிரிக்கெட் சங்கம் ஏற்கனவே அறிவித்துவிட்டது. எனினும், எப்படியாவது 'ரிக்கெட்' வாங்கிவிட வேண்டும் என்ற ஆசையில் ஏராளமான ரசிகர்கள் நேற்றும் மொஹாலி பி.சி.ஏ 'ஸ்டேடியம்' முன்பு திரண்டனர். 'ரிக்கெட்' விற்கப்படும் நிலையங்கள் திறக்கப்படாததால், கிரிக்கெட் சங்க நிர்வாகிகளே கள்ளச் சந்தையில் 'ரிக்கெட்' விற்பனையை ஊக்குவிப்பதாகக் குற்றம் சாட்டிய ரசிகர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, பாதுகாப்புக்காகக் குவிக்கப்பட்டுள்ள பொலிஸார் இலேசான தடியடி நடத்தி ரசிகர்களை அங்கிருந்து கலைந்து போகச் செய்தனர். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சரிக்கை விடுக்கப்படுகின்றது பாக்.அணிக்கு

உலகக் கிண்ண ஆட்டங்களில் பாகிஸ்தான் அணி ஆட்ட நிர்ணயம் உள்ளிட்டவைகளில் ஈடுபடக்கூடாது என்றும், அவ்வாறு ஈடுபட்டால், கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரெஹ்மான் மாலிக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, இஸ்லாமாபாத்தில் புத்திரிகையாளர்களைச் சந்தித்த அமைச்சர் மாலிக் கூறியதாவது, நடைபெற்று வரும் உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதுவரை, ஆட்ட நிர்ணயம் தொடர்பான எந்த புகார்களும் வரவில்லை. அணி வீரர்களின் நடவடிக்கைகளை தொடர்ந்து கண் காணித்து வருகிறோம். அணி வீரர்கள் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபடுவதாகத் தெரிந்தால், அவர்கள் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அவர் கூறினார்.

(15)

# 6 அடிப்பாரா யுவராஜ்



ஒரே ஓவரில் 6 சிக்ஸர்கள் விளாசியவர்தான் யுவராஜ். ஆனால், உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் அடக்கி வாசிக்கின்றார். இதுவரை 7 ஆட்டங்களில் 3 சிக்ஸர்கள் மட்டுமே அடித்துள்ளார். அதிரடியாக அல்லாமல் பொறுப்பாக விளையாடி, அணிக்கு வெற்றி தேடி தருவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார். இதே 'போமியூலாவை' தொடர உள்ளதால், பாகிஸ்தானுக்கு எதிரான அரையிறுதியிலும் இவர், அதிக 'சிக்ஸர்கள்' அடிக்க வாய்ப்பு இல்லை.

இந்திய அணியின் நட்சத்திர வீரர் யுவராஜ். மின்னல் வேகத்தில் ஓட்டங்கள் குவிக்கும் இவர், சிக்ஸர் அடிப்பதில் கெட்டிக்காரர். கடந்த 2007 இல் நடந்த 'ரி-20' உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்து வீரர் ஸ்டூவர்ட் புரோட் ஓவரில், தொடர்ந்து 6 சிக்ஸர்கள் அடித்துச் சாதனை படைத்தார். இதே போன்றதொரு ஆட்டத்தை தற்போதைய உலகக் கிண்ணத் தொடரிலும் ரசிகர்கள் எதிர்பார்த்தனர்.

இதற்கேற்ப சகலதுறை ஆட்டக்காரராக அசத்திய இவர், நான்கு முறை ஆட்ட நாயகன் விருதை வென்றார். ஆனாலும், துடுப்பாட்ட 'ஸ்டைலை' தான் மாற்றி விட்டார். மிகவும் நிதானமாக ஆடுகிறார். பங்களாதேஷுக்கு எதிரான முதல் லீக் ஆட்டத்தில் களமிறங்கவில்லை. அடுத்து, இங்கிலாந்துக்கு எதிராகச் சமநிலையான ஆட்டத்தில், ஒரு சிக்ஸர் கூட அடிக்காமல் 58 ஓட்டங்கள் எடுத்தார். அயர்லாந்துடனான ஆட்டத்தில் 75 பந்துகளில் 50 ஓட்டங்கள்(3 பவுண்டரி) எடுத்த இவர், சிக்ஸர் அடிக்கவே இல்லை. நெதர்லாந்துக்கு எதிராக 51 ஓட்டங்கள்(7 பவுண்டரி) எடுத்த போதும், சிக்ஸர் அடிக்காமல் ஏமாற்றினார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான லீக் ஆட்டத்தில்தான், இந்தத் தொடரில் தனது முதல் சிக்ஸரை அடித்தார். இதில், 12 ஓட்டங்களே எடுத்தார். சென்னையில் நடந்த மேற்கிந்தியத்தீவுகளுடனான ஆட்டத்தில் 113 ஓட்டங்கள் விளாசிய இவர், 2 சிக்ஸர் மட்டுமே அடித்தார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான காலிறுதியில் 8 பவுண்டரிகளுடன் 57 ஓட்டங்கள் எடுத்த இவர், மீண்டும் சிக்ஸர் அடிக்கத் தவறினார். இது வரை 7 ஆட்டங்களில் 341 ஓட்டங்கள் எடுத்துள்ள இவர், ஒட்டுமொத்தமாக 3 சிக்ஸர் தான் அடித்துள்ளார்.

இந்த நிலையில், இன்று தனது சொந்த ஊரான மொஹாலியில் நடக்கும் இந்தியா-பாகிஸ்தான் இடையிலான அரையிறுதி ஆட்டத்திலாவது இவர், 'சிக்ஸர்' மழை பொழிவார் என ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இது குறித்து யுவராஜின் தந்தை யோகராஜ் கூறுகையில் 'தற்போது யுவராஜ் நன்கு முதிர்ச்சி அடைந்த வீரராக உருவெடுத்துள்ளார். அவரது ஆட்டத்தில் நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளது. முன்பு போல இமாலய சிக்ஸர் அடிக்க விரும்புவதில்லை. பொறுப்பாக ஆடி, அணியின் வெற்றியை நிர்ணயிக்கிறார். இதனால், மொஹாலியிலும் அதிக சிக்ஸர்களை எதிர்பார்க்க முடியாது' என்றார்.

இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதும் உலகக் கிண்ண அரையிறுதி ஆட்டம் இன்று பஞ்சாப்பில் உள்ள மொஹாலி மைதானத்தில் நடக்க உள்ளது. இந்த மைதானத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாக மர்ம நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் நான்கு முறை தொலைபேசி மூலம் மிரட்டியிருக்கிறார். இதையடுத்து பஞ்சாப் போலிஸார் உஷாராகினார். மோப்ப நாய் உதவியுடன் மைதானம் முழுவதும் சோதனை நடத்தினர். அந்த நேரத்தில் இந்திய வீரர்கள் பயிற்சி மேற்கொண்டிருந்தனர். இறுதியில், புரளி என்பது தெரிய வந்தது. தொலைபேசியில் மிரட்டிய நபரை பொலிஸார் தேடி வருகின்றனர். தவிர, இரு நாட்டுப் பிரதமர்களும் இந்த ஆட்டத் தைக் காண வருவதால், பாதுகாப்பை பன்மடங்கு அதிகரித்துள்ளனர்.

பாகிஸ்தானுக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் தங்களது சொந்த ஊரான பஞ்சாப்பில் நடப்பதால், இந்திய வீரர்களான ஹர்பஜன், யுவராஜ் சிங் ஆகியோர் நேற்றுத் தங்களது வீடுகளுக்கு சென்று குடும்பத்தினர் மற்றும் நண்பர்களைச் சந்தித்தனர். ஜலந்தரில் தனது அம்மாவை சந்தித்து ஆசி பெற்ற ஹர்பஜன், பிற்பகலில் இந்திய வீரர்களுடன் சேர்ந்து பயிற்சியில் ஈடுபட்டார்.

(15)

## தொழிலை மாற்றிவிட்டாரா சேவாக்




பாகிஸ்தான் அணியுடனான இன்றைய ஆட்டத்துக்காக பயிற்சியில் ஈடுபட்டிருந்த இந்திய அணி வீரர்கள் இடைவேளையின் போது....

## அரையிறுதி ஆட்டம்

மொஹாலி - பி.ப.2.30

இந்தியா
பாகிஸ்தான்



இறுதிப் போட்டிக்கான சிறப்பு பரிசு
EUROSTAR
Live your Life
CONSUMER ELECTRONICS, HOME & KITCHEN APPLIANCE
வழங்கும் 32" TV LCD
மாபெரும் இறுதிப் போட்டி

பங்குபற்றுங்கள்
போட்டிகளில்
வெற்றிகொள்ளுங்கள்
பணப்பரிசில்களை

வெல்லுங்கள்
1 1/2 லட்சம் ரூபா பணப் பரிசு

உதயன் வழங்கும்

1ஆம் பரிசு
2ஆம் பரிசு

எட்டமுடியாத
லட்சங்கள்
உங்களுக்காக

CICT GATEWAY CENTRE JAFFNA வழங்கும் 4 1/2 லட்சம் ரூபா
பெறுமதியான பரிசுக் கூப்பன்கள்

காலிறுதிப் போட்டிக்கான பரிசில்கள்

கம்ப்யூட்டர் ருடே வழங்கும்

உதயன் வழங்கும்
தலா 10 ஆயிரம் வீதம்
5 பேருக்கு.

1 லட்சம் ரூபா பணப் பரிசு

உங்களுக்காகவே
காத்திருக்கின்றன லட்சங்கள்.

அள்ளுங்கள்
ஆறுதல்
பரிசில்களை

SINGER PLUS
No.01 STANLY ROAD
JAFFNA.வழங்கும்
EGG BEATER

SINGER
HOSPITAL ROAD
JAFFNA.வழங்கும்
FAN

SINGER PLUS
CHUNNAKAM. வழங்கும்
FAN

SINGER PLUS
NELLIYADEY. வழங்கும்
FAN

SINGER PLUS
CHAVAKACHCHERI.
வழங்கும் TOASTER

PC SOLUTION
KASTHURIYAR ROAD
JAFFNA. வழங்கும்
COLOUR PRINTER

PC POWER UNIT
LUXAN PLAZA
KASTHURIYAR ROAD. வழங்கும்
Rs. 5000 GIFT VOUCHER

BARANABAS
247, Stanly Road, Jaffna வழங்கும்
SINSUNG DVD PLAYER

சரவணா ரெக்ஸ்
770, 772, கே.கே.எஸ் வீதி,
நெருச் சந்தி யாழ்ப்பாணம்.
Rs. 5000 GIFT VOUCHER

கிருபா லேனர்ஸ்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Rs. 5000 GIFT VOUCHER

போட்டி விதிகள்

## அடுத்த வர்ணப்படத்தில் உங்கள் நட்சத்திரங்கள் உதயனுடன் இணைந்திருங்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### வேலாயுதம் மகேஸ்வரன்



கட்டுடை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் மகேஸ்வரன் நேற்றுமுன்தினம் (28.03.2011) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் இராசம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி – இராசாத்தி தம்பதியரின் அன்பு மருமகனும் சிவராணியின் அன்புக் கணவரும் தீபன், லக்ஷனா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் விக்கினேஸ்வரன், நகுலேஸ்வரி, ஜெகதீஸ்வரன் (கனடா), ஜெகதீஸ்வரி (சுவிஸ்), கேதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் உஷா, நாரோசா, சுபத்திரை (கனடா), காலஞ்சென்ற கஜேந்திரகுமார் மற்றும் ஜெயலதா (கனடா), காலஞ்சென்ற சிவபாலன் மற்றும் தனபாலன் (கொழும்பு), சிவானந்தன் (பிரான்ஸ்), தயானந்தன் (கனடா), கண்ணன் , கல்யாணி, ஜெயராணி (டென்மார்க்), சசி (டென்மார்க்), இன்பராணி, சாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்; உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கட்டுடை, மானிப்பாய். குடும்பத்தினர்.

### இலிங்கப்பிள்ளை ஜெகதீஸ்வரன் (ஜெகன்)



மண்டைதீவு, 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இந்தியாவைப் வசிப்பிடமாகவும் கொண்ட இலிங்கப்பிள்ளை ஜெகதீஸ்வரன் 27.03.2011 அன்று இந்தியாவில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இலிங்கப்பிள்ளை மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணநாதபிள்ளை – செல்லம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற கணேசன் மற்றும் ஜெகதீஸ்வரி (ஜேந்தி – மண்டைதீவு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவநாயகி, புவனநாயகி ஆகியோரின் பாசமிகு கணவரும் சிவதரணி (வித்தியா), செந்தூரன், துவாரகன், கிருத்திகன், பவித்தா ஆகியோரின் அன்புத்தந்தையும் ராஜ்குமார், மிதுலா, கதிர்ஷன், தரணிகா ஆகியோரின் மாமனும் மோவிகா, திஷாங்கன் ஆகியோ ரின் பேரனும் ரவீந்திரன், புவிநாயகி, தனநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2011) புதன்கிழமை இந்தியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு இல.
00918939017676, 00919994400422

தகவல்: வி.ரவீந்திரன்
(மைத்துனர் - மண்டைதீவு)

## போக்குவரத்துக்கு இடைஞ்சல் விளைவித்த நால்வருக்கு அபராதம்

தென்மராட்சி, மார்ச் 30

போக்குவரத்து விதிமுறைகளை மீறிப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் தரும் வகையில் வாகனங்களைச் செலுத்திய நால்வரை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்தனர்.

இந்த நால்வருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் தனித்தனியாகத் தாக்கல் செய்யப்பட்டன.

நேற்றுமுன்தினம் இந்த வழக்குகளை விசாரித்த நீதிவான் மா.கணேசராசா இவர்களில் மூவருக்குத் தலா 5 ஆயிரம் ரூபா வீதமும் ஒருவருக்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதம் விதித்து அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் தலா 2 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ஒ-207)

## கண்ணீர் அஞ்சலி

சங்கத் தலைவர்
*பொ.தில்லைநடேசு* அவர்களின்
பாசமிகு தாய்
திருமதி
**பராசக்தி பொன்னம்பலம்**
அவர்கள் மரணமடைந்ததையிட்டு
அன்னாரின் பிரிவினால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் ஆத்ம
சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

நகரசபை,
சாவகச்சேரி.

சாவகச்சேரி நகரசபை
ஊழியர்கள் -நலன்புரி
சங்கம்

(C/574832) (41,20,25)

Hatton National Bank

## ஆளணி நியமனம், பயிலுனர் உதவியாளர்

(TRAINEE BANKING ASSISTANT)

03.04.2011 அன்று 23 வயதுக்குட்பட்ட ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். *கல்வித் தகைமை:*

1. க.பொ.த. சாதாரண தரம்
ஆங்கிலம் அல்லது கணிதம் அதி திறமைச் சித்தி (A)
மேற்கூறிய இரு பாடங்களுடன் ஒரே தரத்தில் 5 திறமைச் சித்திகள் பெற்றிருக்க வேண்டும். (B அல்லது C)

2. க.பொ.த. உயர்தரம்
ஒரே தடவையில் 3 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். குறைந்த பட்சத் திறமை C, 2S

மேற்கூறிய அடிப்படைத் தகுதியுள்ள 03.04.2011 அன்று 27 வயதுக்குட்பட்ட பட்டப் படிப்பினை முடிவு செய்தவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் யாவும் 03.04.2011 இற்கு முன்னதாக www. hnb.net இணையம் ஊடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இணையம் ஊடான விண்ணப்பங்கள் மட்டும் கவனத்தில் கொள்ளப்படும்.

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லதம்பி சிசிலியா

(ஓய்வு பெற்ற குடும்பநல உத்தியோகத்தர்)



271, பலாலி வீதி, கந்தர்மடத்தைவசிப்பிடமாகக்கொண்ட திருமதி நல்லதம்பி சிசிலியா 26.03.2011 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்பு மனைவியும் மகேந்திரன் (குஞ்சன் – பிரான்ஸ்), பவானி (பவா –பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் நித்தியானந்தனின் (பிரான்ஸ்) மாமியும் உதிஷ்ரா, கிஷோர், அக்ஷரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்' நாளை (31.03.2011) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் கணக்கமரத்தடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகேந்திரன் (குஞ்சன் - மகன்),
திருமதி நித்தியாணந்தன்
பவானி (பவா - மகள்)

*271, பலாலி வீதி,
ஆலடிச் சந்தி,
யாழ்ப்பாணம்.*

## மரண அறிவித்தல்

# செல்லையா இராமேஸ்வரன்

(உரிமையாளர் - கௌரி அழகு மாடம், யாழ்ப்பாணம்)



மட்டக்களப்பு, வலையிறவைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா - இராமேஸ்வரன் 28.03.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா மற்றும் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் நிதர்சனா (மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி), திருமகள் (மாணவி, யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை), பவித்திரன் (மாணவன், யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.03.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணிவரை 314, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2011) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் 142/1, கிராமோதய வீதி, பாலமீன்மடு, முகத்துவாரம், மட்டக்களப்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக மட்டிக்களி பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(2726)

**142/1, கிராமோதய வீதி,
பாலமீன்மடு, முகத்துவாரம்,
மட்டக்களப்பு.
தொ.பே.: 0652225763**

**தகவல்:
மனைவி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மனிதாபிமானத்தின் மன உறுத்தல்

பல மைல்கள் தூரத்துக்கு தரைமட்டமான இடத்தைப் பார்த்தேன். வீடுகள் ஷெல்களால் துளைக்கப்பட்டிருந்தன. மரங்கள் உச்சி முறிந்த நிலையில் காணப்பட்டன-

அடேயப்பா! எவ்வளவு பரந்த இடமாக அது காணப்பட்டது. அதை யிட்டு நான் ஆச்சரியப்படுகிறேன். யாவுமே தரைமட்டமாக இருந்தன. வனாந்தரம் போன்று காணப்பட்டது-

போரினால் இடம்பெயர்ந்த மக்கள் அப்போதும் இப்போதும் எதிர் கொண்ட, எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும், அழிவுகளையும் கண்டும் கேட்டும் அதிர்ச்சியடைந்துள்ளேன்-

முன்னாள் சிறுவர் போராளிகள் பலர் கொண்ட சிறுவர்கள் அணி ஒன்று டன் நாங்கள் நட்புறவு ஆட்டம் ஒன்றை ஆடினோம். அந்தப் பிள்ளை களைப் பார்க்கும்போது அப்பாவிகளாகவும் நல்லவர்களாகவும் காணப் பட்டனர். அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு இப்போது தமது குடும்பங்களுடன் சேர்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது ஓரளவில் ஆறுதல் கொடுக்கும்-

போரினால் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு துடுப்பு மட்டைகளை யும் பந்துகளையும் வழங்கியபோது, அவர்களின் கண்களில் பிரகாசம் தெரிந்தது. அவற்றைக் கொண்டு கிரிக்கெட் போன்ற விளையாட்டு ஒன்றை ஆடினார்கள். பார்க்கச் சந்தோசமாக இருந்தது-

2009 மே மாதத்தில் முடிவுக்கு வந்த போரில், இளம்பிள்ளைகள் எவ்வாறு இழுபட்டுச் சென்றனர் என்பதனைக் கேட்க எனக்குப் பெரும் திகில் ஏற்பட்டது-

இவ்வாறு தாம் நேரில் கண்டவற்றையும் தமது அனுபவத்தையும் வெளியிட்டிருக்கிறார் உலகப் புகழ்பெற்ற முன்னாள் கிரிக்கெட் வீரர் சேர் இயன் போத்தம்.

இவரும் மற்றொரு சர்வதேசப் புகழ்பெற்ற முன்னாள் கிரிக்கெட் வீரர் மைக்கல் வோகனும் கடந்த வார இறுதியில், மாங்குளம் பகுதிக்குச் சென் றிருந்தனர். அங்கு அமைக்கப்பட்டு வரும் விளையாட்டுக் கட்டடத் தொகுதியைப் பார்வையிடவே அவர்கள் இருவரும் சென்றனர்.

வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவரின் மனதை வன்னிப் பிரதேசத் தின் பாழ்பட்ட கோலமும், அங்குள்ள மக்களுக்கு உண்டான அவலங் களும், இப்போது அவர்கள் படும் கஷ்டங்களும் மனதில் தாக்கத்தை உண்டாக்கி உள்ளன.

மனிதனாகப் பிறந்த எவருக்கும் உண்டாகக் கூடிய உளவியல் ரீதியான பாதிப்பே இயன் போத்தமுக்கும் மனதை நெருடியிருக்கிறது. அவர் அதனை மனம் நொந்து ஊடகவியலாளர் ஒருவரிடம் வெளிப்படுத்தி உள்ளார். தமது மனதில் குவிந்த, குமைந்த பாரத்தை மற்றொருவரிடம் இறக்கி வைத்திருக்கிறார்.

போர் முடிவுக்கு வந்து, அடுத்த மாதம் இரண்டு ஆண்டுகள் ஆகப் போகிறது. ஆனால், அதனால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை, அவர்களுக்குரிய வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக் கொடுப்பதில் அர சாங்கம் எந்தளவு ஆமை வேகத்தில் செயற்படுகிறது என்பதனை இயம் போத்தத்தின் மனித நேயத்தின் பாற்பட்ட அவதானிப்புகளும் கருத்துக் களும் வெளிப்படுத்தி உள்ளன.

இலங்கையின் அரசியலில் ஆட்சி பீடத்தவர்களுக்கு அவரது கருத்து கசந்திருக்கும், பிடிக்காது என்பது எவரும் அறிந்ததே.

வன்னிப்போர் விளைவித்த நாசங்களையும், அங்கு வாழ்ந்து, இடம் பெயர்ந்து, மீள்க்குடியமர்ந்த மக்களின் இழப்புக்களையும் கஷ்டங்களை யும் இரண்டு வருடங்களில் - இந்தக் குறுகிய காலத்தில் - பழைய நிலைக்கு மீட்டுவிட முடியாது. அதற்கான பண பலமும் ஏனைய வசதிக ளும் இல்லை என்றவாறு அரசு 'கதை' சொல்லும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே.

இரண்டு வருடங்கள் கழியும் தறுவாயிலும், வன்னி மக்கள் தமது அன்றாடத் தேவைகளை, அவற்றுக்கு ஆதாரமாக இருக்க வேண்டிய தொழில், வருமானம், இருப்பிடம் மற்றும் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் அல்லாடுகிறார்கள்.

அவற்றைப் போர்த்து மூடுவதற்காக, வன்னி மக்களுக்குரிய வசதிகள் படிப்படியாகச் செய்யப்படுகின்றன என்ற வாய்ப்பாட்டை அடிக்கடி அமைச்சர்களும், அரச அதிகாரிகளும் அறிக்கைகள் வாயிலாக மட்டு மின்றி, வாய்ப் பிரசண்டங்களும் செய்து வருகின்றனர்.

நாட்டின் ஒரு பகுதியை அழிக்கிறோமே, அதன் விளைவு பாரதூரமாக இருக்குமே என்பது தெரிந்தும் தெரியாதவர்கள் போன்று, குண்டுகளை வீசி மக்களைக் கொன்றபோதும், ஏதிலிகளாக்கிய போதும் மீளக்கட்டி எழுப் புவதும் புனர்வாழ்வளிப்பதும் புனர்நிர்மாணம் செய்வதும் மிகமிகக் கஷ்ட மான காரியம் என்று தெரிந்துகொண்டுதான், அரசும் அதன் ஆளனியினரும் அத்தனை தூரம் மனிதநேயம் துறந்து செயற்பட்டனர்.

அப்போது காட்டப்பட்ட வேகமும் வீச்சும், இப்போது அரசிடம் இல்லை. அதனாலேயே வெளிநாட்டவர்கள் நேரில் பார்த்தும் கேட்டும் தெரிவிக்கும் கருத்துக்களைச் சீரணிக்கமுடியாமல் விதண்டாவாதம் செய்கிறது அரசு. போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை முந்திய நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்பதில் மனச்சுத்தம் இருந்தால், பணிகள் வேகமாக நடைபெறுவது அவசரமும் அவசியமுமாகும்.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு என வெளிநாட்டு அரசுகளும் சர்வதேச அமைப்புகளும் வழங்கும் நிதி உதவிகள் மற்றும் ஏனைய உதவிகள் வேறு சாரரின், வேறு பிரதேசங்களின் நலனுக்கும் அபிவிருத்திக்கும் செலவிடப்படவில்லை என்பதனை அரசு உறுதி செய்யுமா? இது விடயத்தில் ஒளிவு மறைவு இல்லாமல் அரசு செயற்பட விரும்பினால் வெளிநாட்டில் இருந்து வன்னிக்கு விஜயம் செய்த முன்னாள் முன்னாள் கிரிக் கெட் வீரர் ஒருவர் இன்றைய வன்னி நிலைமை குறித்து வெளியிட்ட அவரது மனப்பதிவுகளைக் கேட்டாவது, தனது ஆமை வேகத்தை நிறுத்தி வன்னி மக்களின் வாழ்க்கை நிலையை மீள் விக்க மனங்கொண்டு துரிதமாகச் செயலாற்றவேண்டும். நடக்குமா அது?

# தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

பாடசாலைகளில் பாடத்திட்டங்கள் அதி கரிக்கப்பட்டுள்ளதால் தொண்டர் ஆசிரியர் களுக்கு விரைவில் நிரந்தர நியமனங்கள் வடக்கு மாகாண சபையினூடாக வழங்கப் படவுள்ளன.

அத்துடன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஏப்ரல் மாதம் தொடக்கம் ஆறாயிரம் ரூபா சம்பளம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன.

இவ்வாறு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

வடமாகாண பாடசாலைகள் மற்றும் நூலகங்களுக்கு ''க்ரியாவின் தமிழ் அகராதி'' நூல் வழங்கும் வைபவம் கடந்த திங்கட் கிழமை யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜென்ரல் ஜி.ஏ. சந்திரசிறி, கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் ஆகியோரிடம் நூல்களைக்கையளித்தார். பாடசாலைகளின் தரங்களுக்கேற்ப இரண்டு தொடக்கம் ஏழு வரையிலான நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

### வடமாகாண ஆளுநர் அறிவிப்பு

சமூகத்தினர் மத்தியில் தமிழ் மொழியினை வளர்க்க வேண்டும் என்னும் நோக்கில் வாழ் நாள் பேராசிரியர்கள் சண்முகதாஸ், மனோன் மணி சண்முகதாஸ் ஆகியோர் இணைந்து வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திர சிறியின் அனுசரணையுடன் வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இந்தத் தமிழ் அகராதி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் சிறப்புரையினை வடமா காண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவனும், வரவேற்புரையினை வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ் வரனும், வெளியீட்டுரையினை வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸும் நிகழ்த்தி னார்கள்.

அத்துடன் வடமாகாண பிரதம செயலாளர் ஆர்.சிவசுவாமி, வடமாகாண ஆளுநரின் செயலாளர் ரி.ரங்கராஜன் மற்றும் கல்விப்பணிப் பாளர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(த-313)

# விலைப்பட்டியல் வைக்காத 15 வர்த்தகர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

விலைப்பட்டியல் இன்றி வியாபாரத்தில் ஈடுபட்ட 15 வர்த்தகர்களுக்கு யாழ். நீதி மன்றம் 22ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துள்ளது.

கடந்த மாதம் யாழ். மாவட்டப் பாவனை யாளர் நுகர்வோர் அதிகார சபையினர் மேற் கொண்ட திடீர் சோதனையின்போது சுது மலை, கோண்டாவில், திருநெல்வேலி, கொக்குவில், தாவடி, சுண்டுக்குளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வர்த்தகர்கள் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராகப் பொலிஸார் யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். நேற்று இந்த வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா குறித்த வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவர்களுக்குத் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதித்தார்.

இனிவரும் காலங்களில் விலைப் பட்டியல் இன்றி வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என்று நுகர்வோர் அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப்பதி காரி எஸ்.சிவசீலன் தெரிவித்தார். (த-9)

# நெடுந்தீவுத் துறைமுகத்தை ஆழமாக்குவது பற்றிய கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

நெடுந்தீவுத்துறைமுகத்தை ஆழப்படுத்து வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்னும் சில தினங்களில் நடைபெறவுள்ள தாகத் தெரியவருகின்றது.

துறைமுக அதிகார சபை இதற்கான ஏற் பாடுகளை மேற்கொண்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்கென நெடுந்தீவில் இருந்து இருவரைத் துறைமுக அதிகார சபை அழைத்துள்ளது.

முன்னர் பலவருடங்களாகத் துறைமுகப் பகுதி ஆழப்படுத்தும் வேலைகள் இடம் பெற்று வந்தபோதும் இடையே ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாகத் துறைமுகத்தை ஆழப்படுத்தும் வேலைகள் நிறுத்தப்பட்டி ருந்தன.

தற்போது நெடுந்தீவு - குறிகாட்டுவான் சேவைகென வந்துள்ள புதிய படகான வட தாரகை துறைமுகத்துக்குள் நுழைய முடியாத நிலையில் குறிகாட்டுவான் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளது.

இந்தப் படகு துறைமுகத்துக்குள் நுழை யக்கூடியவாறு துறைமுகம் ஆழமாக்கப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து அதற்கான நிதியை ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வழங்கியுள்ளதாகப் பாரம் பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்திருந்தார்.

துறைமுகப் பகுதியை ஆழப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் விரைவில் இடம் பெறும் எனக் கூறப்படுகின்றது.

(த-7)

# கணினி மயமாகிறது பதிவுத் தபால் சேவை

கொழும்பு, மார்ச் 30

பதிவுத்தபால் சேவையை உரியவருக்கு தகவல் தொழில்நுட்ப மாற்றத்துக்கு அமைய ஓர் ஒழுங்குமுறையின் கீழ்கொண்டு வரு வதற்கும், செயற்றிறன் மிக்க விதத்தில் அதனை வேகப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தபால்மா அதிபர் எம்.கே. பீ. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவின் பணிப்புரைக்கமைய நடை முறைப்படுத்தப்படும் இந்தப் புதிய முறை யின் கீழ் பதிவுத்தபால்களின் பரிமாற்றம் முழுமையாகக் கணினிமயமாகிறது.

இந்த முறைக்கு அமைய பதிவுத் தபா லொன்று தபாலகத்துக்கு வழங்கப்படுவதி லிருந்து உரியவரின் கைகளுக்குக் கிடைக் கும் வரை அனைத்துச் செயற்பாட்டையும் கணினியின் மூலம் பரிசீலித்துப் பார்க்க முடி யும். கடிதங்கள் இடம்மாறிச் செல்வதைத் தவிர்ப்பதற்கும் மோசடிகள், ஊழல்கள் இடம் பெறாதிருப்பதற்கும் இந்த முறை பேருதவி யாக இருக்கும் எனவும் தபால்மா அதிபர் எம்.கே.பீ.திஸாநாயக்க தெரிவித்தார்.

(த-22)

## கற்கடதீவு அந்தோனியார் திருவிழா வெள்ளி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

கற்கடதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஆலயச் சுற்றாடலைத் துப்புரவு செய்யும் பொருட்டு இன்று புதன்கிழமை தொண்டர் குழு அங்கு செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் திருநாள் திருப்பலியின் பின் திருச்சொரூபப் பவனியுடன் திருவிழா நிறைவுபெறும். நெடுந் தீவு பங்குத்தந்தை அருட்திரு அமலராஜ் அடிகள் திருப்பலிப் பூசைகளை நிறைவேற்றுவார்.

(த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 21 வருட கால இடைவெளியின் பின்னர்

# வலி.வடக்கில் குடியமர்ந்த மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார் மாவை எம்.பி.



வலிகாமம் வடக்கு, மார்ச் 30

வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள நகுலேஸ்வரம், கருகம்பனை பகுதிகளில் 21 வருட இடைவெளியின் பின்னர் மீளக்குடியேறியுள்ள மக்களுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நேற்று முன்தினம் நண்பகல் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

ஏற்கனவே மக்கள் மீளக்குடியமர்ந்த வித்தகபுரம், இளவாலை வடக்கு, இளவாலை வட மேற்கு மக்களும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டார்கள்.

குறிப்பாக இடப்பெயர்வைத் தொடர்ந்து காணிகளுக்கான எல்லைகள் அழிக்கப்பட்டுள்ளதுடன் அடிப்படை வசதிகளான குடிதண்ணீர் பிரச்சினை, மலசலகூடம் போன்றவைகள் இல்லாமையால் உடனடியாகக் குடியேறுவதில் சிரமங்கள் காணப்படுவதாகப் பொதுமக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போது மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட நகுலேஸ்வரம், கரும்கம்பனை மக்கள் தமது காணிகளைத் துப்புரவு செய்யும் முன்நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த வேலைகளுக்கு வரும்போது கூட மிகவும் நீண்ட தூரத்தில் இருந்து குடிதண்ணீர் கொண்டுவந்து பயன்படுத்துவதாகவும் இதேபோன்று மலசலகூடம் இல்லாமையால் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாகவும்அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயங்களைக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, தான் உடனடியாக அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரச அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வை ஏற்படுத்துவதாகவும் உரியமுறையில் மக்கள் குடியமரத்தொடங்கியதும் நிலையான திட்டங்களை முன்னெடுப்பதாகவும் தெரிவித்துள்ளார். (த-86)

## கரவெட்டிப் பிரதேசத்தில் கல்வி அபிவிருத்திக்கு நிதியம்

வடமராட்சி, மார்ச் 30

கரவெட்டிப் பிரதேச கல்வி அபிவிருத்திக்கென நிதியம் ஒன்றை கரவெட்டிப் பிரதேச அபிருவித்தி ஒன்றியம் ஆரம்பித்துள்ளது.

இந்தப் பிரதேசத்திலிருந்து பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களில், வசதி குறைந்த மாணவர்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கும் முகமாகவே இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நெல்லியடி தேசிய சேமிப்பு வங்கிக்கிளையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிதியத்தில் முதற் கட்டமாக மூன்று இலட்சம் ரூபா வைப்புச்செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியத்தில் எதிர் காலத்தில் ஒருகோடி ரூபா வரை வைப்புச் செய்யப்படவுள்ளது. (த-236)

## வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணி மே 31 ஆம் திகதி நிறைவடையும்

யாழ்ப்பாணம், மார்ச் 30

2010 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின் மீளாய்வுப் பணிகள் எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதி நிறை வடையும் என்று யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

கடந்த 2009 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்தேர்தல் இடம் பெற்றது.

நடைபெறவிருந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலும் அவ்வாறு தான் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இருப்பினும் 2010 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புத் தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் கடந்த ஆறு மாதங்களாக இடம் பெற்றுத் தற்போது அவை இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன. எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதியுடன் வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டு தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படும் - என்றார். (த-9)

## பூநகரியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு கனரக வாகனங்களில் வந்து சேரும் மணல்

சண்டிலிப்பாய், மார்ச் 30

யாழ்.மாவட்டத்தில் மணலுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டையும் விலை அதிகரிப்பையும் தொடர்ந்து பூநகரிப் பிரதேசத்திலிருந்து கனரக வாகனங்கள் மூலம் தினசரி கேரதீவு, சங்குப்பிட்டி வீதியால் மணல் எடுத்து வரப்படுகிறது. இதனால் மணல் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் அதேவேளை, மேற்படி வீதி பாரிய சேதத்துக்குள்ளாகி வருகின்றது. இது குறித்து மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையைத் தொடர்ந்து குடாநாட்டில் கட்டட வேலைகள் என்றுமில்லாதவாறு அசுர வேகத்தில் இடம்பெற்று வருகின்றன. ஏனைய மூலப் பொருள்கள் இருந்தும் மணலுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினாலும் விலையுயர்வாலும் கட்டட வேலைகளைக் குறிப்பிட்ட காலத்துக்குள் முடிக்க முடியாமல் மக்கள் திண்டாடுகிறார்கள்.

பூநகரிப் பிரதேசத்தில் கௌதாரி முனையிலுள்ள தனியார் காணிகளில் மலைபோல் குவிந்திருக்கும் மணலை அந்தப் பகுதி மக்கள் விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பலர் கௌதாரி முனையில் மணலை வாங்கி கனரக வாகனங்கள் மூலம் எடுத்து வருகிறார்கள்.

தினசரி பல லொறிகள் இந்தச் சேவையில் ஈடுபடுவதால் கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதை மோசமடைந்து வருவதாகவும் பயணிகள் கவலை தெரிவித்துள்ளார்கள். (த-115)

## வெளிநாடுகளில் இருந்து குடாநாட்டுக்கு அதிக எண்ணிக்கையான தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 30

தபால் மூலமான பொதிகள் தற்போது அதிக அளவில் யாழ். குடாநாட்டுக்கு எடுத்துவரப்படுவதாக யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளிநாடுகளில் இருந்தே அதிகளவான பொதிகள் இங்கு வந்து சேர்வதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்.பிரதம தபாலகத்தில் திறந்து வைக்கப்பட்ட சுங்கத் திணைக்களத்தின் பணிகள் துரித கதியில் இடம் பெற்று வருவதை அடுத்துத் தபால் பொதிகள் அதிகளவில் இங்கு வந்து சேர்வதாகத் தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் இருந்து எடுத்துவரப்படும் இந்தத் தபால் பொதிகள் சுங்கத் திணைக்களப் பகுதியினரால் உடனுக்குடன் சோதனைக்குட்படுத்தப்பட்டு பின்னர் அவை உரியவர்களுக்கு விரைவாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பொதிகளின் விநியோக நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டமையால் வெளிநாடுகளில் இருந்து பொருள்களைத் தபால் பொதிகள் மூலம் அனுப்பிவைக்கும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாக அந்த அதிகாரி மேலும் கூறினார். (த-26)

## மரக்கறி விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 30

குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் திடீரென வீழ்ச்சியடைந்துள்ளன.

கடந்த நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் பெய்த கனத்த மழையினால் மரக்கறிப் பயிர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டு அழிவடைந்தன.

இதனால் ஜனவரி பெப்ரவரி மாதங்களில் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துக் காணப்பட்டன.

இதனையடுத்து விவசாயிகளும் மரக்கறிச் செய்கையில் அதிகளவில் நாட்டத்துடன் ஈடுபட்டனர்.

தற்போது அந்த மரக்கறி வகைகள் பெருமளவில் சந்தைக்கு வருவதால் அவற்றின் விலைகள் திடீரென வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது. திருநெல்வேலிச் சந்தையில் மரக்கறி வகைகளின் நேற்றைய விலை விவரம் வருமாறு–

கத்தரிக்காய் 1 கிலோ 30ரூபா, வெண்டிக்காய்1 கிலோ 40ரூபா, தக்காளிப்பழம் 1 கிலோ 60ரூபா, பாவற்காய் 1 கிலோ 50ரூபா, கரட்1 கிலோ 80ரூபா,உருளைக் கிழங்கு1 கிலோ 60ரூபா, பயிற்றங்காய்1 கிலோ 90ரூபா, பச்சை மிளகாய்1 கிலோ 80ரூபா, வெங்காயம் 1 கிலோ 70ரூபா, கீரை ஒரு பிடி 10ரூபா. (த-26)

## 16 வயதைப் பூர்த்தி செய்யாத மாணவர் எப்படி தேசிய அடையாள அட்டை பெறுவது?

### பரீட்சைப் பெறுபேறுகள் இடைநிறுத்தியமை குறித்துப் பெற்றோர் கடும் விசனம்

யாழ்ப்பாணம்,மார்ச் 30

தேசிய அடையாள அட்டை இல்லாது அஞ்சல் அடையாள அட்டையுடன் ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடாதது தொடர்பாக பொதுமக்கள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இது அந்த மாணவர்களின் எதிர்கால நலனைப் பாதிக்கும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இலங்கை அரசின் தேசிய அடையாள அட்டைத் திணைக்களத்தின் சுற்று நிருபப் பிரகாரம் 16 வயதினை முழுமையாகப் பூர்த்தி செய்த ஒருவரே தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளது. வருடந்தோறும் டிசெம்பர் மாதத்தில் இந்தப் பரீட்சை நடத்தப்படுவதால் வருடத்தின் நவம்பர், டிசெம்பர், ஜனவரி ஆகிய மாதங்களில் பிறந்த பிள்ளைகள் 16 வயது பூர்த்தி செய்யாததால் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதில் சிக்கல் ஏற்படுகிறது.

இந்தக் காலப் பகுதியில் (நவம்பர், டிசெம்பர்) விண்ணப்பம் அனுப்பினாலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்னர் அவை வந்து சேரமாட்டாது.

இந்த நிலையில் மேற் குறித்த மாதங்களில் பிறந்த பிள்ளைகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அஞ்சல் அடையாள அட்டையினையே பயன்படுத்த வேண்டியுள்ளது. அவ்வாறு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்றினை இடைநிறுத்துவது அந்த மாணவர்களின் எதிர்காலக் கல்வியைப் பாதிக்குமென்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி கல்வித் திணைக்களத்தினர் மாற்று ஏற்பாடுகள் செய்து கொடுக்க வேண்டியது அவசியமாகிறது.

ஒவ்வொரு வருடமும் ஜி.சீ.ஈ. சாதாரண தர வகுப்புகளில் கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் கல்வித் திணைக்களத்தினர் தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான ஏற்பாடுகளால் மாணவர்களின் மனதில் எழும் கவலைக்கு பெரும் ஆறுதலாக அமையுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (த-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனம்பொருள் சார்ந்த உற்பத்திக்கு இவ்வருடம் 1000 உற்பத்தியாளர்

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 30

பனம் பொருள் சார் உற்பத்திக்கென இந்த வருடம் 1000 உற்பத்தியாளர்களை இணைத்துக்கொள்ளப் பனை அபிவிருத்திச் சபை திட்டமிட்டுள்ளது. கடந்த காலங்களில் இணைக்கப்பட்ட உற்பத்தியாளர்களின் எண்ணிக்கையை விட இது அதிகமாகும் எனப் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

விழிப்புலனற்றோர் சங்கத்தின் கைதடியிலுள்ள தொழிற் பூங்காவில் பனை கைப்பணி பயிற்சி நிலையத்தைக் கடந்த 26 ஆம் திகதி திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் ஆ.மகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக் கலந்து கொண்ட பசுபதி சீவரத்தினம் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு-

பனை சார் பொருள் உற்பத்தியாளர்கள் 1000 பேரை இந்த வருடம் பனை அபிவிருத்திச் சபை இணைக்கவுள்ளது. இதில் வடமாகாணத்திலிருந்து 500 இற்கும் மேற்பட்ட உற்பத்தியாளர்களை இணைத்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

எந்த ஒரு நாட்டின் வளர்ச்சி அந்த நாட்டின் வளப் பயன்பாட்டினுடைய பொருளாதார அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டுதான் அமைந்துள்ளது.

எமது நாட்டில் ஒவ்வொருவரும் கல்வி கற்கும் போது உத்தியோகம் ஒன்றை இலக்காகக் கொள்கின்றனர்.இதன் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது.

எமது நாட்டில் அதிகமான இடங்களில் பனை வளம் பயன்படுத்துவோர் இன்றி வீணாவது எம் பார்வையில்படும் நிகழ்வாக இருக்கிறது.

ஊட்டச்சத்து மிக்க பனங்களியிலிருந்து பானங்களையும், உணவுகளையும் தயாரிக்கலாம். ஓலையிலிருந்து 802 வகையான பாவனைப் பொருள்களை உருவாக்கலாம்.

இந்த வளத்தினூடான சுய தொழில் நிறைந்த வருவாயைப் பெற்றுத்தரும். எனவே பனம்பொருள் சார் உற்பத்தியில் ஈடுபடுவது வரவேற்கத்தக்க தாகும். இந்தப் பயிற்சி நிலையம் ஊடாகப் பயிற்சியை நிறைவு செய்யவுள்ளவர்கள் உற்பத்தியாளர்களாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்- என்றார்.

இந்த நிகழ்வில் சபையின் விரிவாக்கல் உத்தியோகத்தர் கா.கோபாலகிருஸ்ணனும் கலந்து கொண்டார்.

இதேவேளை –

நவீல்ட் பாடசாலையிலும் பனை அபிவிருத்திச் சபையினால் பனம் கைப்பணி பயிற்சி நிலையம் கடந்த 26 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. (த-14)

## தொழிற்பயிற்சி அதிகார சபையின் கற்கை நெறிகள்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் யாழ்ப்பாணத்தில் தொழிற் பயிற்சி கற்கை நெறிகளை வழங்கியுள்ளது. அதாவது கட்டட நிர்மாண தொழில் நுட்பம் மரவேலைத் தொழில் நுட்பம், விவசாய உபகரணம் திருத்தல் போன்ற தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் இல 375, காங்கேசன் துறை வீதியில் அமைந்த மேற்படி சபை அலுவலகத்தில் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிக் கற்கை நெறிக்கான புதிய பிரிவு மாணவர்களை உள்வாங்க உள்ளதால் கற்க ஆர்வமுள்ள மாணவர்கள் தங்களது சுயவிவரக்கோவையுடன் மாவட்ட அலுவலகத்துக்கு நேரில் சமூகமளிக்குமாறு இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் உதவிக் கணக்காளர் த.சுரேஸ் அறிவித்துள்ளார். (எ)

## தென்மராட்சி பாடசாலைகளில் மாணவரின் சத்துணவு நிறுத்தம்

தென்மராட்சி, மார்ச் 30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதால் மாணவர்கள் பாடசாலையிலிருந்து பசியுடன் வீடு திரும்புவதாகப் பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போது -

இம்முறை வழங்கப்பட்ட பருப்பு தரமற்றதாகக் காணப்பட்டதாலும் பாடசாலைகளில் சமையலில் ஈடுபடுவோருக்கும் வழங்கப்படும் உதவிகள் நிறுத்தப்பட்டதாலும் அவர்கள் சமையல் செய்ய வராததாலும் சத்துணவு வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகப் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் தெவித்தார். (த-207)

## பாரம்பரியத்தைக் காக்க...



அனைவரும் ஒற்றுமையுடன்: வடஇலங்கை சுதேச மருத்துவ சபையின் ஏற்பாட்டிலான பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவைசேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், சொலமன் சிறில், தமிழரசுக் கட்சிப் பிரமுகர் சீ.வி.கே.சிவஞானம் லங்கா சித்த ஆயுள்வேத கல்லூரி அதிகாரிகள் உள்ளிட்டோர் மேடையில் அமர்ந்திருக்கின்றனர். (த-14)

## கைதடி நவீல்ட் பாடசாலையில் விரைவில் உயர்தர வகுப்புகள்

வலி.வடக்கு, மார்ச் 30

கைதடி நவீல்ட் பாடசாலையில் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் சித்தி அடைந்த மாணவர்களின் நன்மை கருதி ஜி.சீ.ஈ. உயர் தர வகுப்பை ஆரம்பிப்பதற்கான முன் முயற்சிகள் அதிபரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் மாணவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய போதிலும் ஒரு சில மாணவரே சித்தி அடைவதனால் உயர்தர வகுப்புக்களை நடத்தமுடியாமல் போனதுடன் மாணவர்களும் தமது அங்கவீனம் காரணமாகத் தொடர்ந்து கற்பதிலும் ஆர்வம் காட்டாத நிலையில் இருந்து வந்தது. இதனால் உயர்தர வகுப்புக்களை அங்கு ஆரம்பிக்கமுடியவில்லை.

எனினும் கடந்த ஆண்டு பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் பெரும்பாலானோர் பரீட்சையில் சித்தி அடைந்து உயர்தரம் கற்கக்கூடிய பெறுபேறுகளை பெற்றுள்ள நிலையில் இந்த மாணவர்களுக்கான உயிர்தர வகுப்பை ஆரம்பிக்கப் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் கோரிக்கையை அடுத்து அதிபர் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். (த-86)

## கட்டாக்காலிக் கால் நடைகளால் சிறுதானியச் செய்கை பாதிப்பு

வடமராட்சி, மார்ச் 30

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள அம்பன், குடத்தனை ஆகிய கிராமங்களில் கட்டாக்காலி மாடு, ஆடுகளின் தொல்லைகளால் சிறுதானியப் பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டு வருவதாகப் அந்தப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கால்நடைகளை வளர்ப்போர் ஆடு, மாடுகளை கட்டி வளர்க்காமையால் அவை பயிர் நிலங்களில் புகுந்து பயறு, உழுந்து, வெங்காயம் ஆகிய பயிர்களைத் தினமும் நாசப்படுத்தி வருகின்றன.

இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவதாகவும் கட்டாக்காலி கால் நடைகளைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (த-236)

## பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்துமாறு கோருகிறது வலி.தென்மேற்கு சுகாதார அமைப்பு

சண்டிலிப்பாய், மார்ச் 30

பொலிதீன் பைகளின் பாவனை நாளுக்குநாள் அதிகரித்து வருவதால் சுகாதாரத்துக்குப் பங்கமேற்படுவது மட்டுமன்றி, மலேரியா, டெங்கு போன்ற தொற்று நோய்கள் பரவும் ஆபத்தும் தோன்றியுள்ளது.

ஆட்கொலி நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் வகையில் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வலி.மேற்கு சமூக சுகாதார அமைப்பு அரசைக் கோரியுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சமுதாய அமைப்பின் மாதாந்தக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலைக் கட்டடத்தில் இயங்கி வரும் சண்டிலிப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இந்தப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள சுகாதாரச் சீர்கேடுகள் பற்றியும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டன.

தற்பொழுது வர்த்தக நிலையங்களில் பொலித்தீன் பாவனை அதிகரித்துள்ளதால் வீடுகளிலும், வெற்றுக் காணிகளிலும் இந்தப் பைகள் குவிந்து கிடக்கின்றன. இதனால் மழை பெய்யும்போது மழை நீர் இவற்றில் தேங்கி நிற்பதால் நுளம்பின் பெருக்கம் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் கால்நடைகளும் இவற்றை உண்பதால் உயிருக்கு ஆபத்தும் ஏற்படுகின்றது.

எனவே தொற்று நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்றும் வகையிலும், நுளம்புப் பெருக்கத்தைத் தடைசெய்யும் வகையிலும் கால்நடைகளைக் காப்பாற்றும் வகையிலும் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும் என்று இந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள பிரதான வீதிகள் உட்பட அநேகமான வீதிகளில் திண்மக் கழிவுகள் குவிந்து கிடப்பதால் நுளம்பு உற்பத்திப் பெருக்கத்துக்கு வாய்ப்பு ஏற்படுவதுடன் வீதிகளும் அலங்கோலமாகக் காட்சியளிக்கின்றன.

எனவே வாரத்துக்கு ஒரு முறையாவது வீதிகளில் சேரும் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்குப் பிரதேச சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மேற்படி அமைப்பு தெரிவித்துள்ளது. (த-115)

## மூதாட்டியின் சங்கிலியை அறுத்தெடுத்த மாணவர்கள்

தென்மராட்சி,மார்ச்.30

வீதியில் நடந்து சென்ற மூதாட்டியின் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்தனர் பத்தாம் வகுப்புப் படிக்கும் இரு மாணவர்கள்.

இந்தச் சம்பவம் கடந்த 27 ஆம் திகதி மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது.

மூதாட்டி கொடுத்த முறைப்பாட்டினையடுத்து சாவகச்சேரிப் பொலிஸார் இரு மாணவர்களையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர். (த-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் மனிதாபிமான வன்னிக்கான விஜயம்

வன்னி மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மீள்குடியமர்ந்த குடும்பங்களையும் குறிப்பாக பாதிக்கப்பட்ட, இடம்பெயர்ந்த பெண்களையும் சந்தித்து அவர்களது பிரச்சினைகளை அறிந்து கொள்ளும் முகமாக மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் மற்றும் அந்நியைத்தின் திட்ட அலுவலர்கள் மார்ச் 18, 19, 20 ஆம் திகதிகளில் மாங்குளம், கிளிநொச்சிப் பிரதேசங்களுக்குச் சென்றிருந்தனர்.

இவர்களின் விஜயம் தொடர்பாக மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் தெரிவித்த தகவல்கள் வருமாறு:

மாங்குளம், ஒலுமடு, அம்பலகாமம், புளுமஞ்சிநாதகுளம், பனிக்கங்குளம், வன்னி விளாங்குளம், குஞ்சிக்குளம், கொள்ளர் குழியங்குளம் ஆகிய பகுதிகளிலிருந்து வருகை தந்த யுவசக்தி மகளிர் சம்மேளன அங்கத்தவர்களோடும் கோணாவில், பரந்தன், விவேகானந்தநகர், மளையாளபுரம், சுதந்திரபுரம், ஊற்றுப்புலம், உடையார்கட்டு, கிளிநொச்சிப் பிரதேசங்களிலிருந்து வருகை தந்த மகாசக்தி மகளிர் சம்மேளன அங்கத்தவர்களோடும் அவர்களது பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

அரசாங்கத்தின் மனைப் பொருளியல் வீட்டுத் திட்ட ஊக்குவிப்புச் செயற்பாட்டுக்கேற்ப மகளிர் அபிவிருத்தி நிலையம் இவ்வாறு வருகை தந்த பெண்களுக்கு ஐந்து ஆயிரம் ரூபா பெறுமதியான வீட்டுத் தோட்ட செய்கைக்கான மரக்கறி விதைகளை வழங்கியது.

பெண்களின் முக்கிய பிரச்சினையான பாதுகாப்பான வீடு ஒன்றைப் பெற்றுக் கொள்வது எல்லோருக்கும் முக்கியமான பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

தற்காலிகமாக வழங்கப்பட்ட வீடுகள் தகரக் கூரைகளால் அமைக்கப்பட்டுள்ளதுடன் இங்கு கதவுகள் இன்மையால் பெண்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது.

ஆகவே வீட்டுத் திட்டத்துக்காக வழங்கப்படும் நிதி போதுமானதாக இல்லை. சில குடும்பங்கள் நகைகளை விற்றும் மற்றும் கடனுதவிகளைப் பெற்றும் பாதுகாப்பான வீடுகளை அமைக்க முற்படுகின்றன.

இதனால் அவர்கள் தொடர்ந்தும் கடனாளிகளாக இருப்பதால் வாழ்வாதாரத்துக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதில்

> **தற்காலிகமாக வழங்கப்பட்ட வீடுகள் தகரக் கூரைகளால் அமைக்கப்பட்டுள்ளதுடன் இங்கு கதவுகள் இன்மையால் பெண்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது. அத்துடன் மாணவிகள் ஏனைய பயணிகளுடன் நெருக்கமாகப் பயணிப்பதால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மலசல கூடங்கள் கதவுகள் அற்ற நிலையிலும், கிணறுகள் கட்டுக்கள் அற்ற நிலையிலும் இருப்பதால் எந்நேரமும் அபாயத்தை எதிர்நோக்குபவர்களாக இவர்கள் இருக்கின்றனர். ஏ-9 பாதையை அண்டிய பிரதேசங்களில் வசிக்கும் பெரும்பாலானோரின் வீடுகளுக்கு யன்னல்கள், கதவுகள் இல்லாத காரணத்தால் வாகனங்களால் கிளப்பப்படும் தூசிகளினால் இருமல், தும்மல், சளி போன்ற நோய்கள் ஏற்பட்டு இவர்கள் துன்பப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

பல குடும்பங்ளில் உள்ளோர் பல ஏக்கர் காணிகளைப் போருக்கு முன்னர் தாம் சொந்தமாக வைத்திருந்த போதிலும் தற்போது அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் தமக்கு அரை ஏக்கர் காணியே பகிர்ந்தளிக்கப்பட்டதாக வருத்தம் தெரிவித்தனர். முன்பு பரந்தளவில் நெல், சிறு தானியங்கள், மற்றும் பண்ணை போன்றவற்றைப் பராமரித்து வந்த இவர்கள் இடவசதியின்மையால் அவற்றை மீண்டும் செய்ய முடியாத நிலையில் உள்ளதாகத் தெரிவித்தனர்.

மேலும் காணிகளுக்குப் பாதுகாப்பான வேலிகள் எதுவும் இல்லை. வளர்ந்து வரும் பற்றைகளால் விஷசந்துகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளதோடு பாம்புக் கடியினால் பலர் இறந்தும் உள்ளனர். பாதுகாப்பற்ற வீடுகளுக்குள் மிருகங்களோ, பாம்புகளோ இலகுவில் புகுந்து விட முடியும். துப்புரவு செய்யப்படாத பற்றைகளினால் நுளம்புகள் அதிகரித்துள்ளதோடு மக்கள் டெங்கு போன்ற நோய்களுக்குள்ளாவதை அவதானிக்க முடிந்தது.

மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு மிகத் தூர இடங்களில் இருந்து செல்லும் மக்கள் அங்கு போதிய வைத்தியர்கள் இன்மையால் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். நோயாளர்களுக்குரிய மருந்து விற்பனை நிலையங்கள் அரிதாகவே உள்ளன.

ஆயுள்வேத வைத்திய முறை

**வாணி**

களும் இன்னும் விஸ்தரிக்கப்படவில்லை. சிறுவர்கள் போஷாக்கற்றவர்களாகக் காணப்படுவதை அவதானிக்க முடிந்தது.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் மிகத் தூர இடங்களிலிருந்து வருவதனால் பாடசாலை வரவில் வீழ்ச்சி அடைவதோடு, யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தரும் ஆசிரியர்களின் வரவிலும் வீழ்ச்சி காணப்படுவதாகத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா செல்லும் பேருந்துகளில் கிளிநொச்சி மாணவர்களை ஏற்றிச் செல்வதில்லை. இதனால் ஒழுங்கான போக்குவரத்தின்மையால் குறித்த நேரத்துக்கு மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாதுள்ளனர். மாணவர்கள் ஏனைய பிரயாணிகளுடன் நெருக்கமாகப் பிரயாணம் செய்வதனால் மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறான சம்பவங்கள் பல இம் மகளிர் சம்மேளனங்களுக்கு அடிக்கடி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சந்தைவாய்ப்பு வசதிகளுக்காக பல மைல் தூரம் செல்ல வேண்டியிருப்பதனால் பெண்களின் வியாபாரச் செயற்பாடுகள் பல முடக்கப்பட்டுள்ளன.

ஆரோக்கியமான உணவைப் பெற்றுக் கொள்ளும் வசதிகள் கூட இவர்களுக்கு அங்கு காணப் படவில்லை. வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுவதற்கு நீர் பிரச்சினையாக உள்ளது.

அனேகமான குடும்பங்களில் ஊனமுற்றவர்களும் மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களும் தகுந்த பராமரிப்பின்றி வாழ்ந்து வருவதை அவதானிக்க முடிந்தது. மன அழுத்தத்தினால் பாதிப்படைந்தவர்களுக்கு நிறுவனங்களினால் உளவள ஆலோசனை வழங்கப்பட்ட போதிலும் அவை போதியதாக இல்லை. ஊனமுற்றவர்களில் பலர் இன்னும் காயம் மாறாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களைப் பராமரிப்பதிலோ, வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதிலோ பல தடங்கல்கள் காணப்படுகின்றன.

மேலும் தடுப்பு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட பல பெண்கள் வெளியில் செல்ல முடியாதவர்களாக வீட்டுக்குள்ளேயே முடங்கிக் காணப்படுகின்றனர். இவர்கள் சமூகத்தில் உள்வாங்கப்படுவதற்கு பல வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது. *

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



**இராசரத்தினம் இராசேஸ்வரி**

கடந்த 28.02.2011 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எனது குடும்பத் தலைவி இராசரத்தினம் இராசேஸ்வரி அவர்களது வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.03.2011) புதன்கிழமை முற்பகல் 12மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினர் சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உசன்,
மிருசுவில்.

கணவர்- இ. இராசரத்தினம்.

(சி/577046) (45-23-24)



உங்களுக்கான
நவீன கைத்தொலைபேசிகளை
தெரிவு, செய்ய நீங்கள்
நாட வேண்டிய இடம்
இதோ !
Style Mobiles
348, K.K.S Road, Jaffna.

ஓம் விராட்விஸ்வப் பிரமனே நமஹ

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

**நடராஜா மகேஸ்வரன்**





மலர்வு
01.07.1942

உதிர்வு
15.03.2011

கடந்த 15.03.2011 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் நடராஜா மகேஸ்வரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (29.03.2011) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று. வீட்டுக்கிருத்தியகிரியைகள் இன்று (30.03.2011) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைலாயபிள்ளை வீதி,
2ஆம் குறுக்குத்தெரு,கச்சாய் றோட்,
சாவகச்சேரி.

(49,20,23)

குடும்பத்தினர்.

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தேவகுமார்
**பிலிப்நேரிஸ் தங்கநாதன்**
(முன்னாள் முகாமையாளர் - Aero Lanka, யாழ்ப்பாணம்)

மண்ணில்
16 ★ 02 ★ 1970

விண்ணில்
25 ★ 03 ★ 2010

*''கர்த்தருக்குள் இளைப்பாறியோர் பாக்கியவான்கள்''*

அன்னாரின் ஆத்மா இளைப்பாற்றிற்காக (30.03.2011) புதன்கிழமை காலை 6 மணிக்கு பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

18/6, பாண்டியன்தாழ்வு,
கொழும்புத்துறை வீதி,
கண்டுக்குளி கிழக்கு, யாழ்ப்பாணம்.

அன்புடன் என்றும்
நினைவு கூறும்,
குடும்பத்தினர்.

(சி/577047) (44-19-25)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தடுப்பு மருந்து போடப்பட்ட தரமான பிறிமா No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் 100/= 06.04.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

| | |
|---|---|
| சுட்டிபாம் சென்ரர், வட்டுக்கோட்டை | -0778996085 |
| சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு | -0776904590 |
| நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி | -0774656377 |
| முகுந்தன், பருத்தித்துறை | -0771392593 |
| தர்க்கா பாம், சுன்னாகம் | -0779346599 |

[illegible] சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல.021 222 6944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களின் போசாக்கை மேம்படுத்த வவுனியா வடக்கில் செயற்றிட்டங்கள்

வவுனியா, மார்ச் 30

வவுனியா வடக்கு சுகாதாரப் பிரிவில் உள்ள புளியங்குளம், கனகராயன் குளம், நெடுங்கேணி பிரதேசங்களில் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களின் போசாக்கை மேம்படுத்த பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என வவுனியா வடக்கு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடமைபுரியும் சுகாதார உத்தியோகத்தர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போது வைத்திய அதிகாரி இதனைத் தெரிவித்தார்.

தற்போது எமது பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்கள் வீடுகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். அத்துடன் பல பிரதேசங்களிலும் மீள்குடியமர்வு தினமும் நடைபெற்று வருகின்றது.

அத்துடன் கடந்த கால புள்ளி விவரங்களின் பிரகாரம் சிறுவர்களின் போசாக்கு நிலை குறைவடைந்து உள்ளது. கிராமங்களில் தொண்டர்கள் ஊடாக நிறை பார்க்கும் நிலையங்களில் உரிய முறையில் நிறை பார்ப்பதன் முக்கியத்துவத்தைத் தெரிவித்து அவர்களுக்கு போசாக்கு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் வேண்டும்.

அத்துடன்ஒவ்வொரு சிகிச்சை நிலையத்திலும் குறிப்பாக குடும்ப சுகாதாரச் சேவை உத்தியோகத்தர்கள் போசாக்கு நிறைந்த உணவை எவ்விதம் சிறுவர்களுக்கு வழங்கலாம் என்பது தொடர்பாகவும் சிறுவர்களின் போசாக்கு நிலை குறைவதால் எதிர்காலத்தில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். சிகிச்சை நிலையங்களில் வழங்கப்படும், போசாக்குணவான திரிபோஷா, சோளன்மா போன்றவற்றை சிறுவர்களுக்கு மேலதிக உணவாக வழங்கும் முறைகள் தொடர்பாகவும் அறிவுறுத்துமாறும் வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(க-501)

# மிதிவெடிகள் அகற்றும் பணி துரிதகதியில்

கிளிநொச்சி, மார்ச் 30

கிளிநொச்சி வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் ஆகிய இடங்களில் மிதிவெடிகளை அகற்றும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

ஹலோ ட்ரஸ்ற் கண்ணி வெடியகற்றும் குழுவினர் இதில் ஈடுபட்டுள்ளனர்.

போர் இடம்பெற்ற காலத்தில் இப்பகுதியில் புதைக்கப்பட்ட பெருமளவு வெடிபொருள்களே தற்போது அகற்றப்பட்டு வருகின்றன.

(க-410)

# அரச பஸ்கள் சேவையிலீடுபட பயணிகள் கோரிக்கை

மன்னார், மார்ச் 30

சங்குப்பிட்டி - கேரதீவு ஊடாக மன்னாருக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே சேவையிலீடுபடுவதற்கு அரச பஸ்களைப் பயன்படுத்துமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


தற்போது தனியார் பஸ்களே இந்தப் பாதையில் சேவையிலீடுபட்டு வருகின்றன. ஆனால் சில வேளைகளில் இவை இடை நிறுத்தப்படுவதால் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் மன்னாரிலிருந்து வவுனியா சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய இக்கட்டான நிலையில் இவர்கள் உள்ளனர். இதனால் பெருந்தொகைப் பணம் செலவாவதுடன் நேர விரயமும் ஏற்படுகின்றது.

ஆகவே அரச பஸ்களை இந்தச் சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் தமது சிரமங்களைக் குறைக்க முடியுமெனப் பாதிக்கப்பட்ட பயணிகள் தெரிவிக்கின்றனர்.

(க)

## அவலத்தின் உச்சம்...



இப்படியுமொரு சந்தையா?: கட்டட வசதிகளோ அல்லது அடிப்படை வசதிகளோ இல்லாத நிலையில் கிளிநொச்சி நகருக்கான பொதுச் சந்தை அம்பாள் குளத்தில் பரிதாபகரமான தோற்றத்துடன் இயங்கி வருகின்றது.

(6)

# செட்டிகுளம் கடதனிப்பிட்டியில் புதிய தேவாலயம் திறப்பு

வவுனியா, மார்ச் 30

வவுனியா செட்டிகுளம் கடதனிப்பிட்டியில் புதிய அந்தோனியார் தேவாலயமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதனை மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் கடந்த 25 ஆம் திகதி மு.ப. 10 மணிக்குத் திறந்து வைத்தார்.

சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் இதே இடத்தில் தேவாலயமொன்று அமைக்கப்பட்டிருந்தது. 1990 இல் இடம்பெற்ற இடப்பெயர்வுடன் இந்த ஆலயமும் சேதமடைந்தது. தற்போது சேதமடைந்த ஆலயத்துக்கு அருகில் புதிய தேவாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் ஆலய பங்குத் தந்தை, குருமுதல்வர்கள் பொதுமக்களென அதிகமானோர் கலந்துகொண்டனர். (க-6)

# மோசமான வீதியால் போக்குவரத்தில் சிரமம்

வவுனியா, மார்ச் 30

மன்னார் - சங்குப்பிட்டி வீதி மோசமான நிலையில் காணப்படுவதால் போக்குவரத்தில் பெரும் சிரமங்கள் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக சங்குப்பிட்டிப் பாலத்தை அண்மித்த பகுதியில் உள்ள வீதி மிகவும் சேதமடைந்து குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

மன்னாருக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையேயான போக்குவரத்து தற்போது இந்த வீதியூடாகவே நடைபெற்று வருவதால் பயணிகள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

பேருந்துகள் குழிகளில் இறங்கிச் செல்லும்போது அதில் பயணம் செய்வோரின் உடலில் பெரும் வேதனையைத் தோற்றுவிப்பதாகவும் ஒருவரோடொருவர் மோதிக் காயங்களுக்கும் நோவுக்கும் ஆளாவதாகவும் பயணிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

(க)

# முகாமிலிருந்த வன்னி மக்களில் பலருக்கு காசநோய்த் தொற்றால் பாதிப்பு

## டாக்டர் ஜமுனானந்தா தகவல்

கிளிநொச்சி, மார்ச் 30

யுத்தமொன்றுக்கு முகம் கொடுத்து மோசமான நிலையில் பாதிக்கப்பட்ட வன்னி மக்களில் பலர் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்ந்த காலப் பகுதியில் காசநோய்த் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். இவ்வாறு தெரிவித்துள்ளார். யாழ்.மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டுப் பொறுப்பதிகாரியான டாக்டர் சி.ஜமுனானந்தா.

சர்வதேச காசநோய்த் தினத்தையொட்டி கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மோசமான யுத்தத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இவர்கள் தமது குடும்பத்தில் யாரோ ஓர் உறவினரை இழந்து தீராத கவலையில் மூழ்கியுள்ளனர்.

இதனால் இவர்கள் இவ்வாறானநோய்த் தாக்கத்தை அவ்வளவாகப் பொருட்படுத்தாத நிலையில் காணப்படுகின்றனர்.

அதனால் காசநோயாளரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது. இதில் ஒரு பகுதியினர் மட்டுமே தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். ஏனையோர் இந்நோய்பற்றி அக்கறையின்றி உள்ளனர்.

இது மிகவும் வேதனையானதொரு விடயமாகும். காசநோய் குணப்படுத்தக் கூடியதாக இருந்தும் இந்த மக்கள் இது பற்றி அலட்சியமாக இருந்தால் அது அவர்களின் ஏனைய குடும்ப அங்கத்தவர்களையும் பாதிக்குமென்பதை இவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க)

# பூநகரி இரணைமாத நகரில் சுனாமி ஒத்திகை நிகழ்வு

கிளிநொச்சி, மார்ச் 30

சுனாமிக்கான பாசாங்கு எச்சரிக்கையும் ஒத்திகை நிகழ்வும் இரணைமாத நகர் கிராம சேவையாளர் பிரிவில் நடைபெறவிருப்பதாகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் மாவட்ட இணைப்பாளர் க. வைரமுத்து தலைமையில் சுனாமிக்கான முன்னெச்சரிக்கை மற்றும் ஒத்திகை நிகழ்வுச் செயற்பாடு மேற்கொள்ளப்படும்.

இந்த ஒத்திகை நிகழ்வு தொடர்பாகப் பொதுமக்களை அமைதியாக இருக்குமாறும் இதுவொரு ஒத்திகைச் செயற்பாடாக இருப்பதால் எவரும் குழப்பமடையவோ அல்லது வதந்திகளை நம்பவோ தேவையில்லையெனவும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன் இரணைமாத நகர் கிராம மக்கள் வீட்டுக்கொருவர் வீதம் இந்த ஒத்திகை நிகழ்வுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

(க)

# கணவர் விபத்தில் பலியானதால் கடற்படைப் பெண் சிப்பாய் தற்கொலை

கிளிநொச்சி, மார்ச் 30

விபத்தில் தனது கணவர் பலியானதை அறிந்து மிகவும் வேதனையடைந்த சிறீலங்கா கடற்படையின் பெண் சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்துள்ளதாகக் கிளிநொச்சி தகவல்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அவை மேலும் தெரிவித்துள்ளதாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரணைமடு கடற்படை முகாமில் பணியாற்றி வரும் சிறிலங்கா கடற்படையின் பெண் சிப்பாய் ஒருவர் தனது கணவர் கொல்லப்பட்டதால் கவலையில் தற்கொலை செய்துள்ளார்.

மேற்படி கடற்படைச் சிப்பாயின் கணவர் வசந்தா கருணாதிலக (வயது 23) என்பவரும் அவரின் நண்பரும் இரணைமடு முகாமுக்கு இவரைப் பார்ப்பதற்காகச் சென்ற போது, மதவாச்சிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் கொல்லப்பட்டனர்.

அவர்களின் உந்துருளி, ரிப்பர் ரக பாரஊர்தியுடன் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் தனது கணவர் கொல்லப்பட்டதை அறிந்த நிலுகா தயமந்தி என்ற பெண் கடற்படைச் சிப்பாய் தனது ஊருக்குச் சென்று தற்கொலை செய்துள்ளார்.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கை அரசு பிரித்தாலும் மக்களை உறவால் பிரிக்க முடியாது

## மட்டு.மாவட்ட அரியம் எம்.பி.தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 30

தமிழ் மக்களின் தாயகப் பிரதேசமான வடக்கு, கிழக்கை இலங்கை அரசு நிர்வாக ரீதியாகப் பிரித்திருந்தாலும் இந்த மாநிலத்தில் வாழும் தமிழ் மக்களை உணர்வால் - உறவால் பிரிக்கமுடியாது. அவர்கள் என்றும் இணைந்தே இருப்பார்கள்.


- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தை கடந்த சனிக்கிழமை திறந்துவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:


வடக்கு, கிழக்கு மாகாணத்தை வெவ்வேறாக அரசு பிரித்தாலும், இந்த அரச உத்தியோகத்தர் சங்கம் மாத்திரம் வடக்கு, கிழக்கு இணைந்த அடிப்படையில் ஓர் அமைப்பாகத் தொடர்ந்தும் பேணி வருவது மிகுந்த சந்தோஷத்தை அளிக்கிறது.

இவ்வாறான பலமான அமைப்புகளைப் பலப்படுத்துவது ஒவ்வொரு அங்கத்தவர்களினதும் கடமையாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த அமைப்புக்குத் தொடர்ந்தும் தனது ஆதரவையும் உதவிகளையும் செய்வதற்குத் தயாராக இருக்கின்றது - என்றார். இந்தநிகழ்வில் வடக்கு கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்க மாவட்டக் அலுவலகத்துக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ஐம்பதாயிரம் ரூபா நிதியையும் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் வழங்கியுள்ளார்.



இந்தநிகழ்வில் கிளிநொச்சி, திருகோணமலை, அம்பாறை மாவட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

## பாதுகாப்பு.....



திருகோணமலை, நிலாவெளி கடற்கரைக்குவரும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் குச்சவெளி பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (204)

# பயிர்ச்செய்கை பெரும் பாதிப்பு

கண்டி மாவட்டத்தில் குரங்குகளின் அட்டகாசத்தால் பயிர்ச் செய்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்த மாவட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர். பயிர்களில் உள்ள காய்களையும் இலைகளையும் குரங்குகள் கடித்து வீணாக்கி பயிர்களை சேதப்படுத்துவ தாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இந்தக் குரங்குகளைக் காடுகளுக்கு கொண்டு செல்லும் திட்டம் வனவிலங்குகள் திணைக்களத்தால் முன்னெடுக்க தீர்மானித்தபோதிலும், பணம் கிடைக்காததால் அது இடைநிறுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (204)

# ஆற்றை மண்ணால் நிரப்புவதை நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

அம்பாறை,மார்ச் 30

அட்டாளைச்சேனைப் பிரதேசத்திலுள்ள கோணாவத்தை ஆற்றினை சட்டவிரோதமாக மண்ணிட்டு நிரப்புவதை தடுத்து நிறுத்துமாறும், நிரப்பப்பட்டுள்ள இடங்களிலுள்ள மண்ணை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அட்டாளைச்சேனைப் பிரதேச சபையின் புதிய தவிசாளர் ஏ. எல்.எம். நசீரிடம் அந்தப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுமார் 350 தொடக்கம் 400 அடிகள் வரையிலான அகலத்தினையும், 4 கிலோ மீற்றர் நீளத்தினையும் கொண்ட அட்டாளைச் சேனை கோணாவத்தை ஆறானது, அண்ணளவாக 30 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை நிலங்களின் மேலதிக நீரை தேக்கி வைப்பதற்கும், கடலில் கொண்டு சேர்ப்பதற்கும் பயன்பட்டு வருகிறது.

நூற்றுக்கும் அதிகமான மீனவர்கள் இந்த ஆற்றில் மீன்பிடித் தொழிலையும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

கடந்த சுனாமியின் போது, இப்பிரதேசம் பாதிக்கப்படாமைக்கும் கோணாவத்தை ஆறே காரணமாக இருந்தது எனக் தெரிவிக்கப்படுகின்றது.

கடலில் இருந்து மேலெழுந்த நீரினை இந்த ஆறு தனக்குள் தேக்கி வைத்துக் கொண்டதால், சுனாமியின் ஆபத்திலிருந்து அட்டாளைச்சேனைப் பிரதேசம் தப்பித்துக் கொண்டதாக அந்தப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கோணாவத்தை ஆற்றினை, சிலர் சட்டவிரோதமாக மண்ணிட்டு நிரப்பி காணிகளை பிடித்து வருகின்றனர்.

அட்டாளைச் சேனைப்பிரதேசத்துக்கு இயற்கை வழங்கிய கொடையான கோணாவத்தை ஆற்றினை பாதுகாப்பதற்கும், அதனை மண்ணிட்டு நிரப்பப்படுவதைத் தடுப்பதற்குமான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அந்தப்பிரதேச மக்கள் புதிய தவிசாளரிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (204)

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும் விலைக்கழிவுடன் விசேட சலுகைகள்....

DHL உடன் இணைந்து
திருமுருகன் கொம் நெற்

வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவுகளுக்கான கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், உணவுப்பண்டங்கள், CD, DVD போன்றவற்றை பாதுகாப்புடன் விரைவாக குறைந்த கட்டணத்தில் அனுப்பிட, DHL

20.03.2011 தொடக்கம் 20.04.2011 வரை அனுப்பும் ஒவ்வொரு பொதியின் பற்றுச்சீட்டு இலக்கங்களும் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் மூன்று அதிஸ்டசாலிக்கு பின்வரும் பரிசுகள் வழங்கப்படும்.....

முதலாம் பரிசு – துவிச்சக்கரவண்டி
2 ஆம் பரிசு – 5.1 woofer
3 ஆம் பரிசு – கையடக்கத் தொலைபேசி

நீங்களும் DHL இணைந்து அதிஸ்டசாலியாகுங்கள்

WESTERN UNION
MMBL Money Master
வெளிநாட்டில் இருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ள பாதுகாப்பான, விரைவான நம்பிக்கையான சேவை

திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி:
இல. 05, திருநகர் பிரதானவீதி, கிளிநொச்சி.

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
18.12.1952

இறைவன் திருவடியில்:
24.03.1998

அமரர் கனகரட்ணம் பாலசுந்தரராசா B.Sc.
(ஓய்வுபெற்ற சிரேஷ்ட எழுது வினைஞர்)

திதி: 30.03.2011 (ஏகாதசி)

நீங்கள் எம்மை விட்டுச் சென்றாலும்
வாழும் காலம் வரை உங்கள்
நினைவுகள் எம்மனதை விட்டு நீங்காது
இத்தினத்தில் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!

மனைவி,
பா.பாஞ்சாலி.

துன்னாலை வடக்கு, கரவெட்டி.

(48,19,21)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
பொன்னம்பலம் துரைஜயா
(வன இலாகா அதிகாரி)



மலர்வு
20.07.1933

உதிர்வு
02.04.2008

திதி: 30.03.2011

அன்புக்கும் பண்புக்கும் பாசத்துக்கும்
எடுத்துக்காட்டாக விளங்கிய அன்புத்தெய்வமே
காலம் ஓடிச் சென்றாலும் எங்கள் மனதில்
வாழ்ந்து கொண்டிருப்பீர்கள் காலனோ
தன் கணக்கை கணப் பொழுதில் முடித்துவிட்டான்
கண்டது கனவென்று கண்திறந்து பார்க்கின்றோம்.
நிலைத்து விட்ட உங்கள் அன்பால் நினைவிழக்க
முடியாமல் நீந்துகின்றோம் கண்ணீரில்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளில் வாழும்உங்கள் கவலைகளான:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நவிண்டில்,
புத்தூர்.

(49,20,23)

## பன்னிரண்டு ஆண்டுகள் நெஞ்சினிலே...

செல்வி
சிவஜா சிவமூர்த்தி



தோற்றம்
11.09.1979

மறைவு
30.03.1999

ஆண்டுகள் பறந்தோடிப் போயினவே
மீண்டும் ஒரு முறை உம் முகம் காட்டீரோ?
உம்மையிழந்த கவலையினால் தினமும் கலங்குகின்றோம்
இன்று உம்மை நினைத்து அஞ்சலி செய்கிறோம்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(49,26,25)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய தமிழ் கிராமமான மல்வத்தையில் தனிப் பிரதேசசபை உருவாக்கப்பட வேண்டும்

## நல்லிணக்க ஆணைக்குழுவிடம் வலியுறுத்து

அம்பாறை, மார்ச் 30

அம்பாறை மாவட்டத்தின் பழம்பெரும் தமிழ்க் கிராமமான மல்வத்தைக் கிராமத்தை மையமாகக் கொண்டு அதனை அண்மித்த தமிழ்க் கிராமங்களை உள்ளடக்கியதாக தனிப் பிரதேச சபைப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு காரைதீவு புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் செல்லையா இராசையா தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்முனையில் நடைபெற்ற கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வில் சாட்சியம் அளித்த போது இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இவர் மேலும் தெரிவிக்கையில்:

பழம் பெரும் கிராமமான மல்வத்தை உட்பட அதனை அண்மித்த பல தமிழ்க் கிராமங்கள் தற்பொழுது சம்மாந்துறை பிரதேச சபை நிர்வாகத்தின்கீழ் இருந்து வருகின்றன.

ஏற்கனவே மல்வத்தைக் கிராமத்தை மையமாகக் கொண்ட கிராமாட்சி மன்றம் ஒன்று இயங்கிவந்த போதிலும், இக்கிராமாட்சிமன்றத்துக்குட்பட்ட பல தமிழ்க்கிராமங்கள் சம்மாந்துறைப் பிரதேச சபையுடன் இணைக்கப்பட்டதால் மல்வத்தை கிராமாட்சி மன்றம் செயலிழந்தது.

இந்தப் பிரதேச தமிழ் மக்கள் யுத்தத்தினாலும், வன்செயல்களினாலும் காலத்துக்குக்காலம் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து மீளக் குடியமர்த்தப்பட்டவர்களாவர்.

இந்த நிலைமைகளினால் மல்வத்தையும் அதனைச் சார்ந்த பிரதேசங்களும் அபிவிருத்தியின் புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே இருந்து வருகின்றன.

தற்பொழுது உள்ள சூழலில் பாதிக்கப்பட்ட இப்பிரதேசங்கள் அபிவிருத்தி காணவும், மக்கள் வாழ்வில் புதிய மறுமலர்ச்சி ஏற்படவும் மல்வத்தையை மையமாகக் கொண்ட தனிப் பிரதேச சபை ஒன்று உருவாக்கப்படுவது அவசியமாகும்.

மல்வத்தையும், அதனைச் சார்ந்த தமிழ்ப் பிரதேசங்களும் 31 சதுர மைல் பரப்பளவையும் 18 ஆயிரத்துக்கு அதிகமான சனத்தொகையையும் கொண்டதாகவுள்ளன.

இதைவிடப் பரப்பளவிலும் சனத்தொகையிலும் குறைந்த பிரதேசங்களுக்கென தனிப்பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டுள்ளமையையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

பாதிக்கப்பட்ட மக்கள் நலன் கருதி மல்வத்தையை மையமாகக் கொண்ட தனிப்பிரதேச சபை ஒன்றை உருவாக்குவதற்கான சிபார்சை இந்த ஆணைக்குழு செய்யவேண்டும்.

மல்வத்தைக் கிராமத்தில், யுத்த காலத்தின்போது பாதுகாப்புப் படை முகாம் ஒன்று இயங்கிவந்தது.

பதினாறுக்கு மேற்பட்ட பொது மக்களின் வீடுகள் இதற்கென எடுக்கப்பட்டன. இந்த முகாமிலிருந்து விசேட அதிரடிப்படையினர் வெளியேறியபோதிலும், பொலிஸார் தற்பொழுதும் அங்கிருப்பதுடன், வீதிச்சோதனைச் சாவடியையும் வைத்துள்ளனர்.

அமைதி நிலவும் இக்காலகட்டத்திலும் பொலிஸார் அங்கிருப்பது குறித்து மக்கள் அதிருப்தியைத் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த முகாம் மூடப்பட்டு உரியவர்களின் வீடுகள், கட்டடங்கள் மீளவும் அவர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

பேராதனை பல்கலைக்கழக பல்வைத்தியத்துறை இறுதியாண்டு மாணவியாகவிருந்த எனது சகோதரி செல்லையா புஸ்பராணி கடந்த 1991ஆம் ஆண்டு சித்திரை மாதம் 19ஆம் திகதி இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார்.

இறுதிப் பரீட்சை எழுதுவதற்காக பேராதனை நோக்கி பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்த அவர் சியம்பலாந்துவவுக்கும், 17ஆம் கட்டைக்குமிடையிலேயே கடத்தப்பட்டார்.

ஆனால் இன்றுவரை அவர் திரும்பவுமில்லை. எத்தனையோ விசாரணைகள் நடைபெற்றும் கண்டுபிடிக்கவுமில்லை.

அவர் பெயரில் சமூக சேவை அமைப்பொன்றை நான் உருவாக்கி சேவைகளைச் செய்து வருகின்றேன் -என்றார்.(204-30)

### நோயின்றி வாழ...



டெங்கு ஒழிப்பினை முன்னிட்டு திருகோணமலை நகரப்பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மக்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (204)

## கிழக்கு ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு 25 புதிய வைத்திய அதிகாரிகள் நியமனம்

கிழக்கு மாகாணத்திலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளில் நிலவும் ஆயுர்வேத வைத்திய அதிகாரிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பும் வகையில் 25 பேர் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர்.இவர்களுக்கான நியமனக் கடிதம் எதிர்வரும் 3 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

திருகோணமலை கப்பல் துறையில் அமைந்துள்ள மாகாண சுதேச வைத்தியத்துறைப் பணிமனையில் நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார சுதேசிய வைத்தியத்துறை அமைச்சர் எம்.எஸ். சுபைர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நியமனக்கடிதங்களை வழங்கவுள்ளார். கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழு விண்ணப்பம் கோரியதற்கு இணங்க சுமார் 250 ஆயுர்வேத வைத்தியர்கள் விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் 25 பேர் நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் தற்போது 52 ஆயுர் வேத வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 85 வைத்தியர்கள் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கழிவுத் தேயிலை கடத்தல்; சந்தேகத்தில் இருவர் கைது

சடலங்களை எடுத்துச் செல்லும் வாகனத்துக்குள் வைத்து கடத்தப்பட்ட சுமார் 200 கிலோ கழிவுத் தேயிலை பொதுசன சுகாதார வைத்தியர்கள் குழுவொன்றால் கடந்த வியாழக்கிழமை பத்தேகமவில் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் இருவர் சந்தேகத்தின பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். பாவனைக்குதவாத இந்தக் கழிவுத் தேயிலையை சடலங்களை ஏற்றிச் செல்லும் வாகனத்தில் கொண்டு சென்றமை சட்ட விரோதமானதென பத்தேகம பொது வைத்திய அதிகாரி கே.ஜீ. தர்மசிரி தெரிவித்துள்ளார்.

## சிறுபோக விவசாயச் செய்கை ஆரம்பிக்கத் தீர்மானம்

திருகோணமலை,மார்ச் 30

கந்தளாய் பிரதேசத்தில் இந்தவருடத்திற்கான சிறுபோக விவசாயச் செய்கை ஆரம்பிப்பதற்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற விவசாய சம்மேளனக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.


இது தொடர்பான கூட்டம் கந்தளாய் திட்ட முகாமையாளர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சிறுபோக விவசாயச் செய்கைக்கான நீர் எதிர்வரும் முதலாம் ஆம் திகதி திறந்துவிடப்படவுள்ளது. இந்தக் கூட்டத்தில் நீர்ப்பாசன திணைக்கள திட்ட முகாமையாளர், நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (204)

## காசுக்கான வேலைத்திட்டத்துக்கு 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

திருகோணமலை மாவட்டத்தில் காசுக்கான வேலை திட்டத்திற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த வேலைத்திட்டத்திற்கு பதினொரு பிரதேச செயலாளர் பிரிவுகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப் படுகின்றது. (204)

## மணல் மேடுகளாகக் காட்சியளிக்கும் ஓட்டமாவடிக் கரையோரப் பிரதேசங்கள்

மட்டக்களப்பு, ஓட்டமாவடி பாலத்திற்கு அருகிலுள்ள கரையோரப் பிரதேசங்களில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக ஆற்றுமணல் அள்ளுண்டு மணல்மேடாகக் காணப்படுகின்றது.



ஓட்டமாவடி, நாவலடி, மாஞ்சோலை, மீராவோடை, காவத்தமுனை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இந்த மணல் மேட்டை தமது பொழுதுபோக்கைக்களிக்கும் இடமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த மணல்மேடு பாசிக்குடாவிற்கு அண்மித்த பிரதேசமாகக் காணப்படுவதினால் இதனைச் சிறுவர் பூங்காவாக அமைத்துத் தருமாறு அந்தப்பிரதேச மக்கள் ஓட்டமாவடி பிரதேசசபைத் தவிசாளரிடம் கோரியுள்ளனர்.

சில ஆலை முகாமையாளர்கள் தங்களுக்குச் சொந்தமான காணியென இதனை உரிமை கோரியபோது பொதுமக்களும் பொலிஸாரும் இணைந்து கிழக்கு மாகாணக் காணி ஆணையாளரிடமும் மட்டக்களப்பு சுற்றாடல் அதிகாரியிடமும் முறை யிட்டுள்ளனர். இந்த விடயம் தொடர்பாக வாழைச்சேனைப் பொலிஸார் சம்பந்தப்பட்டோருக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச காணியில் தங்கியுள்ளவர்களை கண்டுபிடிக்க அதிரடி நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 30

கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலும் சட்டவிரோதமாகக் குடியிருப்போரை அடையாளம் காணும் நடவடிக்கைகளை பாதுகாப்பு அமைச்சின் நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளும், பொலிஸாரும் மேற்கொண்டுள்ளனர்.

இந்த மதிப்பீட்டின் நோக்கமானது உத்தேச குடியிருப்பு தொகுதிகளுக்கு என வரையறுக்கப்பட்ட இடத்திற்கு அப்பால் அரச காணிகளை ஆக்கிரமித்திருப்போரை கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கையாக கருதப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆக்கிரமித்திருப்பவர்களின் பிடியிலிருந்து அரச காணிகளை விடுவிப்பதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.

அவற்றை அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதே அரசின் கொள்கையாகும். வெளியேற்றப்பட்ட மக்கள் வீடமைப்புத் திட்டங்களில் மீளக்குடியமர்த்தப்படுவார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்ட சொத்துகளைப் பயன்படுத்தும் சக்திகளை முறியடிப்பதற்காகவே இந்த நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(204)

# இந்திய நிறுவனங்கள் நிறுத்தப்பட்டதால் மருந்துக் கொள்வனவு கைமாறுகிறது

கொழும்பு, மார்ச் 30

மருந்துகளை உரிய நேரத்தில் விநியோகிக்கத் தவறியமை, தரமற்ற மருந்துகளை விநியோகித்தமை மற்றும் கோரப்பட்ட தொகை மருந்துகளை முழுமையாக விநியோகிக்கத் தவறியமை போன்ற குற்றச்சாட்டுக்குள்ளான பல்வேறு இந்திய மருந்து விநியோகஸ்தர்களை இடைநிறுத்துமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் அஜித் மெண்டிஸுக்கு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

சுகாதார அமைச்சின் மாதாந்தக் கூட்டத்தில் அத்தியாவசிய மருந்துப் பொருள்களின் தட்டுப்பாடு குறித்து ஆராயப்பட்டபோதே இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய மருந்துகளை அதிக விலை கொடுத்தாவது ஏனைய நாடுகளிலிருந்து கொள்வனவு செய்யுமாறு சுகாதாரப் பணிப்பாளருக்கு அமைச்சர் சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

# மீன்சந்தையின் வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பம்

பேலியகொடவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நவீன மீன் சந்தையின் வர்த்தக நடவ டிக்கைகள் எதிர்வரும் இரண்டாம் திகதி ஆரம்பமாகும் என கடற்தொழில் மற்றும் நீர்வளங்கள் அமைச்சுத் தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட இந்த மீன்சந்தையில் மீனைக் கொள்வனவு செய்வற்காக பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் வந்திருந்தனர். தவிர்க்க முடியாத காரணங்களால் அங்கு வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பமாகியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(204-5)

## ஊடக சந்திப்பு...



இலங்கையிலுள்ள வெளிநாட்டு ஊடக நிறுவன ஊடகவியலாளர்களை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்துள்ளார். இந்நிகழ்வில் அமைச்சர்களான கெஹலிய ரம்புக்வெல, வாசுதேவ நாணயக்கார, பிரதியமைச்சர் நியோமல் பெரேரா உட்பட பலர் கலந்துகொண்டனர். (204)

# மறுமணத்தின் பின்னரும் ஓய்வூதியம் பெறலாம்

கொழும்பு, மார்ச் 30

வாழ்க்கைத்துணையை இழந்த பெண்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியக் கொடுப்பனவு தொகையின் 50 சதவீதத்தை மறுமணம் செய்த பின்னரும் பெற்றுக் கொடுப்பதற்கு ஓய்வூதிய கொடுப்பனவு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

• வாழ்க்கைத் துணையை இழந்த பெண்கள் மற்றும் பெற்றோரை இழந்தவர்களுக்கான ஓய்வூதிய சட்டமூலம் மற்றும் வாழ்க்கைத்துணையை இழந்த ஆண்களுக்கான ஓய்வூதிய சட்ட மூலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களின் அடிப்படையிலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வாழ்க்கைத் துணையை இழந்து, பின்னர் மறுமணம் செய்து கொண்ட அரச சேவையாளர்களுக்கே இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வாழ்க்கைத்துணையை இழந்தவர்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என ஓய்வூதியத் திணைக்களத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.ஏ.திலக்கரட்ன தெரிவித்துள்ளார்.

(204)

# 2118 பதில் அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் கோரி கல்வியமைச்சரால் அமைச்சரவைக்குப் பிரேரணை

கொழும்பு, மார்ச் 30

அரச பாடசாலைகளில் பதில் அதிபர்களாகக் கடமையாற்றி வரும் 2,118 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான அனுமதியைக்கோரி கல்வியமைச்சர் பந்துல குணவர்தன அமைச்சரவைக்கு பிரேரணையொன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

கல்வியமைச்சர் அமைச்சரவைக்கு சமர்ப்பித்த பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நாடெங்கும் உள்ள அரச பாடசாலைகளுக்கு 16ஆயிரத்து 512 தகுதி வாய்ந்த அதிபர்கள் தேவை.. பத்தாயிரம் பேர் மட்டுமே உள்ளனர்.

1996ஆம் ஆண்டு பதவியுயர்வு வழங்கப்பட்ட பின் 2009 ஆம் ஆண்டுவரை எவ்வித பதவியுயர்வோ, புதிய நியமனமோ வழங்கப்படவில்லை. இதன் காரணமாக நாடெங்கும் அரச பாடசாலைகளில் அதிபர்களுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன. அந்த வெற்றிடங்களுக்கு பதில் அதிபர்களாகப் பணியாற்றுபவர்கள் 2,118 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை நிரந்தரமாக்க வேண்டியது அவசியம். மூன்று வருடங்களுக்கு மேலாக பதில் அதிபர்களாகக் கடமையாற்றுபவர்கள் இலங்கை அதிபர் சேவையில் 2-11 மற்றும் 3ஆம் தரத்துக்கு உயர்த்தப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அதற்கமைய வட மத்திய மாகாணத்தில் 274 பேரும், மேல் மாகாணத்தில் 289 பேரும், ஊவாவில் 273 பேரும், வடக்கில் 17 பேரும், தெற்கில் 224 பேரும், மத்தியில் 312 பேரும், சப்ரகமுவவில் 153 பேரும், வடமேற்கில் 283 பேரும், கிழக்கில் 293 பேரும் மூன்று வருடங்களுக்கு மேலாக பதில் அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர்.

இவர்களைநிரந்தரமாக்க அமைச்சரவையின் அனுமதியைக் கோருகிறேன் - இவ்வாறு கல்வியமைச்சர் தமது பிரேரணையில் குறிப்பிட்டுள்ளார். (204-5)

# நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய காங்கிரஸின் பிரதிநிதித்துவம் அதிகரிப்பு

## அக்கட்சியின் ஊடக அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 30

நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய காங்கிரஸின் பிரதிநிதித்துவம் 30ஆக அதிகரித்துள்ளது என்று தேசிய காங்கிரஸ் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய காங்கிரஸ் அக்கரைப்பற்று மாநகரசபை, அக்கரைப்பற்று பிரதேச சபை ஆகியவற்றில் தனித்து கதிரைச் சின்னத்திலும், கிழக்கு மாகாணத்திலும் வெளியில் ஏனைய பிரதேசங்களிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்தும் போட்டியிட்டது.

அதன்படி தனித்து போட்டியிட்ட அக்கரைக்கற்று மாநகர சபையில் 8 ஆசனங்களையும், அக்கரைப்பற்று பிரதேச சபையில் 6 ஆசனங்களையும் பெற்று அமோக வெற்றியீட்டியது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டி யிட்ட ஏனைய பிரதேசங்களில் தேசிய காங்கிரஸ் மொத்தமாக 30 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

அக்கரைப்பற்று மாநகர சபையில் ஒரு மேயர் மற்றும் பிரதி மேயர் பதவியும், அக்கரைப்பற்று பிரதேச சபையில் தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளர் பதவிகளும், நாமல் ஓயா பிரதேச சபையில் தவிசாளர் பதவியும், சம்மாந்துறை பிரதேச சபையில் பிரதி தவிசாளர் பதவியும், கிண்ணியா நகர சபையில் பிரதி தவிசாளர் பதவியும் தேசிய காங்கிரஸுக்குக் கிடைத்துள்ளன.

இதற்கு முன்னர் நடைபெற்ற உள்ளூராட்சிசபைத் தேர்தல்களில் தேசிய காங்கிரஸ் சார்பில் 15 உறுப்பினர்கள் மாத்திரமே தெரிவாகியிருந்த போதிலும், இம்முறை 30 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை கட்சியின் தலைவரும், அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லா மீது மக்களுக்கு அதிக நம்பிக்கை ஏற்பட்டு வருவதனை எடுத்துக் காட்டுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# அதிவேக ரயிலின் திருத்த வேலைக்கு 75 நாள்கள் கால அவகாசம் விதிப்பு

கொழும்பு, மார்ச் 30

இந்தியாவின் ரைட்ஸ் நிறுவனத்திலிருந்து தருவிக்கப்பட்ட அதிவேக ரயில்களில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறுகளைத் திருத்தி, இயங்கச் செய்வதற்கு அந்த நிறுவனத்துக்கு 75 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ரயில்களின் திருத்த வேலைகளுக்கு எவ்வித கட்டணமும் கொடுக்கப்பட மாட்டாதென ரயில்வே திணைக்களத்தின் திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த ரயில்களின் தொழில்நுட்பக் கோளாறுகளைப் பரிசோதித்து அவற்றை இயங்கும் நிலைக்குக் கொண்டு வருவதற்காக ஏற்கனவே ரைட்ஸ் நிறுவன தொழில்நுட்பவியலாளர் குழு இலங்கைக்கு வந்துள்ளது. இந்தக்குழுவால் ரயில்கள் திருத்தப்பட்டபின் இலங்கை புகையிரதத் திணைக்கள பொறியியலாளர்களால் பரிசோதிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்படும் என விஜய சமரசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த ரயில்களின் தொழில்நுட்பக் கோளாறுகளுக்கான பொறுப்பை ரைட்ஸ் நிறுவனம் ஏற்கனவே ஏற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.


(204-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச்சாலைக் காட்சிகள்...



வல்வை சிவகுரு வித்தியாசாலையில் அண்மையில் இடம் பெற்ற மெய்வன்மைப் போட்டியில் விருந்தினராகக் கலந்து கொண்ட திருமதி பாஸ்கரன் கேதீஸ்வரன் வெற்றிபெற்ற இல்லத்துக்கு வெற்றிக் கேடயம் வழங்குகிறார். (201-253)



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியா சாலையில் உலக உணவுத் திட்டத்தின் அனுசரணை யுடன் அமைக்கப்பட்டுள்ள ஆண்களுக்கான மலசல கூடத்தை அந்த நிறுவனத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ரூ.ஜெயரூபன் நாடாவை வெட்டித் திறந்து வைக்கின்றார். (201-100)



யாழ்ப்பாண றோட்டறிக் கழகமும் யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகமும் இணைந்து உரும்பிராய் கிஸ்பாக் முன்பள்ளியில் றோட்டறி வார நிகழ்வை நடத்தின. போட்டிகளில் வெற்றிபெற்ற முன்பள்ளிச் சிறுவனுக்கு றோட்டேரியன் அ.பஞ்சலிங்கம் பரிசில் வழங்குகிறார். (201)



பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலையின் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவின்போது பிரதம விருந்தினராக் கலந்து கொண்ட இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் உபஅதிபர் அருட்திரு ஜே.ஜெயரஞ்சன் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் மாணவர்கள் நிற்கின்றனர். (9)

# கிராமியமட்டக் கலைகள் மறைந்து போகாமல் இருக்க கலைபண்பாட்டு விழாக்கள் நடத்தப்பட வேண்டும்

கோப்பாய், மார்ச் 30

கிராமிய மட்டத்தில் உள்ள கலைகள் மறைந்து போகாமல் தொடர்ந்தும் நிலை நிறுத்துவதற்கு கலை பண்பாட்டு விழாக்கள் என்றுமே உறுதுணை புரியும் என்று தெரிவித்தார் யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

கோப்பாய் கலை பண் பாட்டு மன்றம் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடத்திய கலை பண்பாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு;

ஓர் இனம் தன்னை வெளிப்படுத்துவதற்கு கலை பண்பாடுகளைப் பேண வேண்டியது அவசியம். அந்த வகையில் கடந்த யுத்த காலங்களில் இவ்வாறான விழாக்களை முன்னெடுப்பதில் பல இடர்கள் ஏற்பட்டிருந்தன.

ஆனால் இன்று சுமுகநிலை ஏற்பட்டுள்ளதுடன் கலை பண்பாட்டு நிகழ்வுகள் மூலம் மக்களின் மனங்களை ஆற்றுப்படுத்தக் கூடியநிலை ஏற்பட் டுள்ளது.

தற்போது யாழ்.குடாநாட்டில் ஆங்காங்கே நிகழும் சமூக சீரழிவு நிகழ்வுகளைத் தடுப்பதில் சமூக ஆர்வலர்கள் அனைவரும் கூட்டிணைந்து செயற்பட வேண்டிய காலமாகும்.

இவ்வாறான சம்பவங்களைப் பத்திரிகைகள் பெரிதாக செய்தி வெளியிடுவதோடு மட்டும் நிற்கின்றன. அதனைத் தவிர்க்கும் மற்றும் குற்றச் செயல்களைக் குறைப்பதற்கான விழிப்புணர்வு செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும்.

தற்போதைய தரவுகளின்படி சுமார் 400 மாணவர்கள் இடைவிலகலுக்குள்ளாகி இருப்பதாகத் தெரியவருகிறது. இவர்களில் பலர் தீராத நோய்கள் மற்றும் பல்வேறு காரணங்களைக் கூறித்திரிகின்றனர்.

இவர்களை வழிப்படுத்தி சமூகத்தோடு ஒன்றிணைக்க வேண்டிய பொறுப்புக்களையும் முன்னெடுக்க வேண்டும்.

சேனாதிராஜா முதலியார், கோப்பாய் சபாபதி நாவலர், சிறுப்பிட்டி தாமோதரம்பிள்ளை போன்ற தமிழறிஞர்கள் உதித்த இந்தப் புனித மண் தமிழை வளர்ப்பதற்காக முன்னெடுக்கும் இத்தகைய விழாக்கள் தொடர வேண்டும்.

ஏனைய பிரதேசங்களிலும் இத்தகைய விழாக்களை முன்னெடுத்து எமது சமுதாயத்தை முன்னர் இருந்த உன்னத நிலைக்குக் கொண்டுவர பாடுபட வேண்டும்.

இதன் ஓர் அங்கமாக கோப்பாய் கலைபண்பாட்டு மன்றம் நடத்திய விழா சிறந்த எடுத்துக்காட்டாகும்- என்றார்.

தொடர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், தமிழ்த்துறை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நிகழ்வில் முக்கூடல் என்னும் பண்பாட்டு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகள் அனைத்தும் கோப்பாய் மத்தி, கோப்பாய் வடக்கு, கோப்பாய் தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளின் மக்களால் உயர்ந்த பங்களிப்புடன் சிறப்புற நடைபெற்ற விழாவாகக் கொள்ளத்தக்க தென்பது குறிப்பிடத்தக்கது.(ஐ-72)

# விளையாட்டுத்துறை மேம்பாட்டுக்கு வடக்கு மாகாணசபை பல்வேறு உதவிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 30

பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகளுக்கு மட்டுமல்லாமல் விளையாட்டுத்துறை சார்ந்த செயற்பாடுகளுக்கும் பல்வேறு உதவிகள்வடமாகாண சபையின் ஊடாக வழங்கப்படுகின்றன.

இந்த வாய்ப்புக்களை மாணவர்களும் ஆசிரியர்களும் பயன்படுத்துவதன் மூலம் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு தெரிவித்தார் வட மாகாணத்தின் பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற பாடசாலைகளுக்குத் தமிழ் அகராதி வழங்கும் வைபவத்தில் உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது:

சரியான கற்றல் முறைகளை மேற்கொள்வதற்கு தமிழ் மொழியில் ஆக்கப்பட்டுள்ள தமிழ் அகராதி நூல் பயனுள்ளதாக அமையும்.

வடமாகாண சபையினூடாக கல்வித் தேவைகளுக்கு மட்டுமல்லாமல் விளையாட்டுச் செயற்பாடுகளுக்கும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

தமிழ்மொழி அகராதியை நூலகங்களுக்கு மட்டுமல்லாது பாடசாலைகளுக்கும் வழங்க வேண்டும் என வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி எடுத்த முடிவுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவதுடன் அதனைச் சாதகமான முறையில் பயன்படுத்த வேண்டும்.

மொழி பெயர்ப்பானது பல்வேறு தேவைகளுக்குப் பயன்படக்கூடியது. தமிழ் மொழியின் தேவையினையும் இதன் மூலம் உணர முடியும்.

பேராசிரியர்களின் உதவியுடன் வெளியிடப்பட்டுள்ள இந்த அகராதியை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகள் வழங்கும்போதும் இதனைப் பயன்படுத்தும் போதும் தமிழ் மொழியே பிரபல்யப் படுத்தப்படும்.

வடமாகாண சபையின் ஊடாக வழங்கப்படுகின்ற இவ்வாறான சலுகைகள் மாணவர் சமூகத்துக்கு மட்டுமல்லாது சமுதாயத்துக்கும் பயனுள்ளதாக அமையும்- என்றார்.(ஐ-313)

# புத்தகக் கல்வியுடன் மட்டும் நிற்காது தேடல் முயற்சிகளிலும் ஈடுபடவேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 30

வெறுமனே பாடசாலைப் புத்தகக் கல்வியோடு நின்றுவிடாது தேடல் முயற்சியிலும் ஈடுபட்டுப் பல கல்விமான்களுடன் தொடர்பு கொண்டு அந்தத் தேடலினை ஒரு நூல் வடிவில் ஆக்குவது அவசியமாகும். இதில் மாணவர்கள் பங்களிக்க வேண்டும்.

யாழ்.கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்தியின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.மாணிக்கம் இப்படித் தெரிவித்தார்.

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் வணிக மாணவ மன்றத்தினரால் 23 ஆவது வணிகஜோதி நூல் வெளியீட்டுவிழா பாடசாலையின் பிரதான மண்டபத்தில் மாணவன் ம.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:

போர்ச்சூழலிலும் நிதிப் பற்றாக்குறையான காலங்களிலும் எமது பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களின் வழிகாட்டலிலும் ஆதரவிலும் முன்னின்று பல நூல்களை வெளியிட்டுள்ளனர்.

பாடசாலையின் ஒவ்வொரு மாணவரும் ஊக்கத்துடனும் ஒற்றுமையுடனும் செயற்படுவதும் ஒன்றுசேர்ந்து கொள்வதுமே இந்த நூலினை வெளியிடுவதற்கு காரணமாக அமைந்துள்ளது.பாடசாலைப் பருவத்திலே அவர்களுடைய ஆக்கங்களை நூல்வடிவிலே பிரசுரித்து வெளியீடு செய்வதால் மேலும் ஊக்கத் திறனுடன் செயற்படுவார்கள்.

பாடசாலைகளில் வெளிவரும் நூல்கள் அனைத்துக்கும் மாணவர்களே பொறுப்புக்களை ஆற்றித் திறம்படசெய்து வருவது வரவேற்கத்தக்கதாகும். இதனால் தலைமைத்துவம் ஏற்கும் பண்பும் ஆளுமைத் திறனும் சொல், மொழி ஆற்றல்களும் விருத்தியடைகின்றன - என்றார்.(ஐ-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் பணவரவு ஜகளைப் பெறலாம். இரண்டு நாள்களாக நீடித்த சோர்வு, சோம்பல் விலகி புத்துணர்ச்சி பெறுவீர் கள். வீட்டைச் சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்வீர்கள்.

**இடபம்:**
அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருப்பது நன்மை தரும். நண்பர்களுடன் கொண்டாட் டங்களில் பங்கேற்கலாம். கொடுத்த வாக்கை எப்படியாவது காப்பாற்றுவீர்கள். கடன் மிகுதி ஒன்றை தீர்ப்பீர்கள். கலகலப்பு குடிகொள்ளும்.

**மிதுனம்:**
விழிப்புடனும், கவனமுடனும் செயற்பட வேண்டிய நாள். பெண்கள் கணவரின் கோபதாபங் களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் விவகாரங்களில் தலையிட்டு அதிருப்திக்கு ஆள்படலாம். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம். சிலரைப் பார்க்க முற்பட்டு அவர்கள் கிடைக்காமல் போகலாம். வேலை நெருக்கடி கூடும்.

**கடகம்:**
ஆடம்பரப் பொருள்கள் வாங்கலாம். உதிரி வரு மானங்களால் கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். அயலார் கேட்ட உதவிகளைச் செய்து அவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. நண்பர்கள் பாராட்டும் வகையிலான காரியம் ஒன்றைச் செய்வீர்கள்.வெற்றிகரமான நாள்.

**சிங்கம்:**
பெண்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்ட சக தொழிலாளர்கள் அன்பாக நடந்து கொள்வர். தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு.

**கன்னி:**
பழைய பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கி மன அமைதியைக் கெடுக்கலாம். குழந்தைகள் வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். நண்பர் அல்லது உறவினர் ஒருவருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். குடும்ப உறுப்பனர்களை நம்பி முக்கிய மான வேலைகளை ஒப்படைக்க வேண்டாம்.

**துலாம்:**
பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். தாய் வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக் கும். மனதில் இனம்புரியாத கவலை குடிகொள்ளும். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். செலவு, அலைச்சல் உண்டு. உங்களுக்குத் தெரிந்த ஒருவரை மற்றொருவருக்கு அறிமுகப் படுத்தி வைப்பீர்கள். .


**விருச்சிகம்:**
எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நடக்கும் நாள். உறவினர்கள் உங்களிடம் பாசமாக நடந்து கொள்வர். இரண்டு நாள்களாக எதிர்பார்த்த பணவரவு ஒன்று இன்று எளிதில் வரலாம். புதிய திட்டம் ஒன்றை செயல்படுத்த முற்படுவீர்கள். உங்களின் வேலைக்காக மட்டுமின்றி, மற்றவர்களின் வேலைக்காகவும் சேர்த்து அலைவீர்கள்.

**தனுசு:**
வீண் செலவுகளைத் தவிர்க்க சிந்தித்து செயற்பட வேண்டும். சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆள்படலாம். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத உறவினர் ஒருவர் வரலாம். குடும்பத்தினர் தொடர்பான வேலை ஒன்றை அவசரமாக செய்ய நேரிடலாம். பொழுது போக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும்.

**மகரம்:**
மனதில் இன்பங்கள், சந்தோஷங்கள் குடி கொள்ளும் நாள். பெண்கள் விரும்பிய ஆடை, அலங் காரப் பொருள்கள் வாங்குவர். உங்களின் புத்திசாலித் தனமான செயற்பாட்டை சக ஊழியர்கள் பாராட்டலாம். நீங்கள் கேட்ட பொருள் ஒன்றை உறவினர்கள் மறுக்காமல் கொடுக்கலாம்.

**கும்பம்:**
எதிர்பாராத செலவுகளால் பிறரிடம் பணம் கடன் வாங்கலாம். உடன் பணிபுரிவோரிடம் தொழில் ரீதியாக கடுமையாக நடந்து கொள்வீர்கள். வெளியூர் களில் இருக்கும் ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு முக்கிய தகவல்களைச் சொல்லலாம். பயணங்களால் நினைத்த காரியங்கள் முடிவுக்கு வரலாம். விமர்சனங்களைச் சந்திக்கலாம்.

**மீனம்:**
வருமானம் வரும் வழிகள் அதிகரிக்கும். உத்தி யோகத்தர்கள் வெளியூர் பயணங்கள் செல்லலாம். தூரத்து உறவினர் ஒருவரை முக்கிய இடத்தில் பார்க் கலாம். திட்டமிட்ட காரியங்களில் மட்டுமின்றி, திட்டமிடாத காரியங்களிலும் வெற்றி பெறும் நாள். நண்பர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம். நாவன்மை அதிகரிக்கும்.


ஆவணப்படம்

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தி டப்பட்ட பின்னர், மக்களின் ஆர்வத்தைத் தூண்டிய கருத்துச் சித்திரம் ஒன்று இந்திய ஊடகத்தில் வெளியாகி இருந்தது.

அந்தக் கருத்துச் சித்திரத்தில் மரமொன் றின் கீழே இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். கதிரையில் அமர்ந்தவாறு ஓய்வெடுக் கிறார். அதேநேரம் இந்தியாவின் அப்போதைய பிர தமர் ராஜீவ் காந்தியோ புலியின் வாலைப் பிடித்த வாறு ஒரு மரத்தினைச் சுற்றி அந்தப் புலியின் பின் னால் ஓடிக்கொண்டிருந்தார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினைக் கைச் சாத்திட்ட பின்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, விடு தலைப் புலிகளை அழிக்கும் பொறுப்பினை ராஜீவ் காந்தியிடமும் இந்திய அமைதிகாக்கும் படையின ரிடமும் கொடுத்துவிட்டு, தான் சிவனே என்று இருந்துவிட்டார் என்பதே அந்தக் கேலிச் சித்திரத் தின் கருத்து.

இந்தச் சம்பவம் இடம்பெற்று 24 ஆண்டுகள் கடந்த பின்னர் விடுதலைப் புலிகளின் போர் ஆற்றல் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.

இப்போது காட்சி மாறிவிட்டது, ராஜீவ் காந்தி யின் துணைவியாரான சோனியா இன்று சிங்கத் தின் வாலைப் (மஹிந்த ராஜபக்ஷ என்கிற சிங்கம்) பிடித்துக்கொண்டு மரத்தினைச் சுற்றிச் சுற்றி ஓடு கிறார்.

இறுதிப் போரின் கடைசி நாள்களில் இந்தியா மேற்கு நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் வழங் கிய வாக்குறுதிகளுக்கு அமைய இன்று சோனியா காந்தியும் அவரது அரசும் சிங்கத்தின் வாலைப் பிடித்துக்கொண்டு, நிற்க நேரமின்றி மரத்தினைச் சுற்றி ஓடும் நிலை தோன்றியிருக்கிறது.

### இந்தியாவின் உறுதிமொழி

இலங்கையில் தமிழ் மக்கள் விரும்பும் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய அமைதித் தீர்வு ஒன்று, போர் முடிந்ததும் கொண்டுவரப்படும் என்ற உறு திப்பாட்டினை அமெரிக்காவுக்கும் மேற்கு நாடு களுக்கும் இந்தியா அப்போது வழங்கியிருந்தது.

போரை இடைநிறுத்துவதற்கான முயற்சிகளில் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் ஈடுபட்டபோது, இத்தகைய வாக்குறுதிகளை வழங்கி அதனைத் தடுத்தது இந்தியாதான். அண்மையில் 'விக்கி லீக்ஸ்' இணையம் இந்த இரகசியத்தினை அம்பலப்படுத் தியிருந்தது.

'விக்கிலீக்ஸின்' தகவல்களை உள்ளடக்கி இந்துப் பத்திரிகை கீழ்க்கண்டவாறு கூறியிருந்தது.

''மோதல்களின் நடுவே சிக்குண்டு பொதுமக் கள் பாதிக்கப்படுவது குறித்த தனது கவலையை

**இன்று தனது வாக்குறுதியைக் காப்பாற்றமுடியாத நிலையில் சோனியா காந்தி வேறு வழியின்றி சிங்கத்தின் வாலைப் பிடித்துக்கொண்டு மரத்தை மரத்தைச் சுற்றி வருகிறார்.**

போர் முடிந்த கையோடு இலங்கையின் இனப்பிண விரைவாகத் தீர்வு காணப்படும் என அமெரிக்கா தல யிலான மேற்கு நாடுகளிடம் இந்தியா கூ யிருந் முடிவுக்கு வந்து இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட இருந்தும் இந்தியா குறிப்பிட்ட இந்த விரைவான இன்னமும் கைகூடி வரவில்லை.

இவ்வாறு கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங் ஊடகமான டெயிலிமிரரில் உப்புல் யோசப் பெர்னா குறிப்பிட்டுள்ளார். அதன் தமிழாக்கம் இங்கே தரப்ப

இந்தியா பலமுறை இலங்கைக்கு எடுத்துக் கூறி யிருந்தது. எனினும் விடுதலைப் புலிகளுக்கு எதி ரான படை நடவடிக்கைகளை புதுடில்லி ஒரு போதும் எதிர்க்கவில்லை. தமிழர்களுக்கு நல்ல தொரு அமைதித் தீர்வினைப் பெற்றுக்கொடுக் கக்கூடிய வாய்ப்புகளை இலங்கை அதிபர் மஹிந்த கொண்டிருந்தார். எனினும் மஹிந்த அரசின் போருக் குப் பின்னான செயற்பாடுகள் தொடர்பாகவும் இந்தியா தனது கவலையினை வெளியிட்டிருந் தது.

போரினை இடைநிறுத்துவதற்கான தனது முயற்சிகள் தோல்வியைத் தழுவியதைத் தொடர்ந்து, தன்னிடமிருக்கும் பொருளாதாரப் பலத்தின் மூலம் போருக்குப் பின்னான காலப்பகுதியில் இலங் கையை வழிக்குக் கொண்டுவரும் முனைப்புக் களில் மேற்குலகம் ஈடுபடவில்லை. இந்தப் பணி களை இந்தியாவே மேற்கொள்ளும் என்று பொறுப்பை அதனிடம் கொடுத்துவிட்டு மேற் குலகு விலகிநின்றது''.

போரின் இறுதி நாள்களில் கொழும்புக்கு வந் திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷவினைச் சந்தித்து உரையாடியிருந்தார். கொழும்புக்கான தனது பயணத்தின் பின்னர் முகர்ஜி வெளியிட்ட அறிக்கையில், இலங்கை அரசு மேற்கொண்டுவரும் படை நடவடிக்கையினை இந்தியா எதிர்க் கவில்லை என்ற செய்தி தெளிவாக உள்ளது.

''23 ஆண்டுகளாகத் தொடரும் போரின் முடி வில் இலங்கையின் வடக்கில் இயல்பு நிலை யினை மீளவும் ஏற்படுத்துவதற்கான அரசியல் ரீதி யானதொரு வாய்ப்பினை படைவெற்றி பெற்றுத் தரும் என நான் நம்புகிறேன். இதே கருத்தையே தானும் கொண்டிருப்பதாக அதிபர் ராஜபக்ஷ என் னிடம் உறுதியளித்தார்'' என பிரணாப் முகர்ஜி கூறியிருக்கிறார்.

### பொறுப்பை இந்தியாவிடம் விட்டது மேற்கு

இலங்கைக்கான பிரிட்டன் சிறப்புத் தூதுவர் டெஸ் பிறவுனேக்கும் இந்தியாவின் வெளிவிவ காரச் செயலாளர் மேனனுக்கும் இடையிலான சந் திப்பின் பின்னர், அதில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக பிரிட்டிஷ் உயர் ஆணை யராலயம் அமெரிக்காத் தூதரகத்திற்கு விளக்க மளித்திருந்தது என்று 'விக்கி லீக்ஸ்' கூறுகின்றது.

''குறிப்பிட்ட இந்தச் சந்திப்புத் தொடர்பாக

பிரிட்டி
காரி ஒ
தூதரக
விவகா
ம னி
நிலை
பாக இ
கவலை
லும்
வந்த
களுக்க
வினை
பம் ஏற்ப
குத் த
விரும்பு
போ
பின்னர்
நீதியால
பக்ஷ வ
யும் என்
இரண்டு
படைப்
ராஜபக்
- என்று
இங்
வுக்குக்
அமைதி
பல பத்
இலங்
மையாக
விடு
னர் அரச
படையா
இலங்
வதற்கு
அமைப்
யிடம் கூ
போர்
பிணக்கி
படும் எ
மேற்கு
இன்றோ
கள் கடந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ன் இனப்பிணக்கிற்கு
அமெரிக்கா தலைமை
கூறியிருந்தது. போர்
ள் கடந்துவிட்டன.
த விரைவான தீர்வு

ரியாகும் ஆங்கில
பிரசப் பெர்னாண்டோ
இங்கே தரப்படுகிறது.

# ராஜீவ் புலி வாலைப் பிடித்தார் சோனியா சிங்கத்தின் வாலைப் பிடித்துள்ளார்

பிரிட்டிஷ் தூதரக அதிகாரி ஒருவர் அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் விவகாரச் செயலரிடம் - மனிதாபிமான நிலைமைகள் தொடர்பாக இந்திய அதிகாரிகள் கவலையுடன் இருந்தாலும் போர் முடிவுக்கு வந்த பின்னர் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினை வழங்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படுவதற்குத் தடையாக இருக்க விரும்பவில்லை.

போர் முடிவுக்கு வந்த பின்னர் தமிழ் மக்களுக்கு நீதியானதொரு தீர்வினை அதிபர் மஹிந்த ராஜபக்ஷ வழங்குவதற்கான சூழலை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையில் இந்தியாவின் இந்த இரண்டு அதிகாரிகளும் இருந்தார்கள். வரலாறு படைப்பதற்கான தருணம் இதுதான் என மஹிந்த ராஜபக்ஷ நம்புகிறாராம் என இந்தியா கருதுகிற து - என்று தெரிவித்திருந்தார்.

இங்கு வரலாறு படைத்தல் என்பது போரை முடிவுக்குக் கொண்டு வந்து நீடித்து நிலைக்கக்கூடிய அமைதியினை ஏற்படுவதைக் குறிக்கும். அல்லது பல.பத்தாண்டுகளாகத் தொடர்ந்த போரின் பின்னர் இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளை முழுமையாக அழித்தல் என்பதைக் குறிக்கும்.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தினை அடிப்படையாக வைத்து இனப்பிரச்சினைக்கான தீர்வை இலங்கை அரசு வேகமாக நடைமுறைப்படுத்துவதற்குத் தவறுமிடத்து புதியதொரு பய்ங்கரவாத அமைப்பு முளைவிடும் என இந்தியா பிறவுனேயிடம் கூறியிருக்கிறது''

### ஏமாந்துபோன சோனியா

போர் முடிந்த கையோடு இலங்கையின் இனப்பிணக்கிற்கு 'விரைவானதொரு தீர்வு' ஏற்படுத்தப்படும் என அமெரிக்காவின் தலைமையிலான மேற்கு நாடுகளிடம் இந்தியா கூறியிருந்தது. இன்றோ போர் முடிவுக்குவந்து இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. இருந்தும் இந்தியா குறிப்பிட்ட இந்த விரைவான தீர்வு இன்னமும் கைகூடி வரவில்லை.

இதனால்தான் சோனியா காந்தி சிங்கத்தின் வாலைப் பிடித்துக்கொண்டு மரத்தைச் சுற்றித் தொடர்ந்தும் ஓடுகிறார். இந்திய-இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்படுமெனில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களைவதோடு பிரபாகரனை மாகாணசபைத் தேர்தலில் பங்கெடுக்க வைப்பேன் என ராஜீவ் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவிடம் உறுதியளித்திருந்தார். தான் வழங்கிய வாக்குறுதியினை நிறைவேற்ற முடியாத நிலையில் இருந்த ராஜீவும் இதுபோலத்தான் புலி வாலைப் பிடித்துக் கொண்டு மரத்தை மரத்தைச் சுற்றி வந்தார்.

அதிபர் மஹிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளை முற்றாக இல்லாதொழிப்பதற்கு வழிசெய்யும் வகையில் போதிய அவகாசத்தினை வழங்குமாறும் அதன் பின்னர் தமிழ் மக்களது பிரச்சினைக்கு நீடித்து நிலைக்கக்கூடிய அரசியல் தீர்வை மஹிந்த அரசு பெற்றுக்கொடுப்பதை உறுதிப்படுத்துவது தன்பொறுப்பு என்றும் சோனியா தலைமையிலான இந்திய அரசு அமெரிக்காவிற்கும் அனைதுலக சமூகத்திற்கும் கூறியிருந்தது.

ஆனால் இன்று தனது வாக்குறுதியினைக் காப்பாற்றமுடியாத நிலையில் சோனியா காந்தி வேறு வழியின்றி சிங்கத்தின் வாலைப் பிடித்துக்கொண்டு மரத்தை மரத்தைச் சுற்றி வருகிறார்.

நன்றி: புதினப்பலகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சல் அட்டைகள்!



ஒருவன் தன்டைய நண்பனை வழியில் சந்தித்து என்னப்பா... கடிதம் போட்டேனே கிடைத்ததா? என்றான். ஓ... கிடைத்ததே! என்றான் அவன்.

இவன் உடனே... ''என்டா பொய்சொல்கிறாய்...? நான் உனக்குக் கடிதம் போடவில்லை!.... சும்மாதான் கேட்டேன்!'' என்றான் அவனைப் பார்த்து ''கடிதம் போட்டேன் என்று நீ பொய் சொல்லும் போது... அதுகிடைத்ததென்று நான் பொய் சொல்லக் கூடாதா'' என்றான் அவன்.

இப்படிப்பட்டவர்கள் சிலபேர் இருந்தால் கூட இன்றைக்குக் கடிதம் மூலம் தொடர்புகொள்ளாதவர்கள் இருக்கவே முடியாது! அந்த அளவுக்கு அவசியமான ஒன்றாக மாறிவிட்டது அஞ்சல் மூலமான தொடர்பாடல்.

இந்த அஞ்சல்அட்டைகள் எப்படி ஆரம்பமானது தெரியுமா? ஆஸ்திரிய நாட்டில் ஒரு பேராசிரியர் ஒருவர் இருந்தார். அவருடைய பெயர் இம்மானுவேல் ஹெர்மென். அவர் ஒருநாள் ஒரு பத்திரிகையில் கட்டுரை எழுதினார். இது நடந்தது 1869 ஆம் ஆண்டில். அவர் எழுதிய கட்டுரையில்... மக்கள் அதிகம் செலவில்லாமல் ஒருவருக்கு ஒருவர் தகவல் பரிமாறுவது எப்படி? என்பதைப் பற்றியும் அதற்குச் சில யோசனைகளையும் அந்தக் கட்டுரையில் எழுதியிருந்தார்.

அந்தக் கட்டுரையை எல்லோரும் வாசித்தபோது அது அரசின் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆஹா... இது நல்ல யோசனையாக இருக்கின்றது என்று அரசுக்குத் தோன்றியது.

அவ்வளவுதான் உடனே அந்த யோசனையை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். பேராசிரியர் இம்மானுவேல் ஹெர்மெனின் ஆலோசனைப்படி அச்சடித்த அரச முத்திரையோடு அரசு அஞ்சல் அட்டைகளை வெளியிட ஆரம்பித்தது.

1869 ஒக்ரோபர் 7ஆம் திகதி உலகின் அஞ்சல் அட்டை வெளிவந்த நாள் அப்போது அதன் பெயர் ''கரஸ்பாண்டிங் கார்ட்!'' அதன் பின்னர் உடனடியாக அமெரிக்காவிலும் இது மாதிரியான அட்டைகளை வெளியிட்டார்கள். அங்கே இதன் பெயர் வோள்டல்காட்! அதற்குப் பின்னர் 1870 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் வெளியிடப்பட்டுள்ளது. அன்றைய தினம் மக்கள் எல்லோரும் ஏதோ நியாய விலைக் கடையிலே நிற்பது போல் நீண்ட வரிசையில் நின்று அதனை வாங்கினார்களாம்!

இன்று அஞ்சலகம் இல்லாத இடமே இல்லை... அந்த அளவுக்கு அஞ்சல் போக்குவரத்து வளர்ச்சியடைந்தது.

அன்றைக்கு உள்நாட்டில் ஒருவருக்கு ஒருவர் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ள மலிவான ஒரு அட்டையை அரசு வெளியிடலாம் என்று ஒரு பேராசிரியர் எழுதிய கட்டுரை இன்றைக்கு எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளது பார்த்தீர்களா?

ஒருவன் தபால்பெட்டிக்குப் பக்கத்தில் தலையைச் சாய்த்துக் கொண்டு நின்றான்.

அங்கு நின்ற ஒருவன் கேட்டான்... ''என்ன நடத்தது... என்று அதற்கு அவன் ''கொஞ்ச நேரத்துக்கு முன்னால் இந்தத் தபால் பெட்டியில் ஒரு கடிதம் எழுதிப்போட்டேன் விவரம் எல்லாம் சரியாகத்தான் எழுதியிருந்தேன் ஆனால் முகவரி எழுத மறந்துவிட்டேன்!'' என்றான்.

உடனே அவன் கூறினான் ''அதற்காகக் கவலைப் படாதே... நான் போட்ட கடிதத்தில் முகவரி எல்லாம் எழுதியிக்கின்றேன்... ஆனால் விவரம் கடிதத்தில் வைக்க மறந்துவிட்டேன்!'' என்றான்.


''கவலைப்படா்தே கொஞ்ச நேரத்தில் தபால்காரர் வருவார்...பெட்டியைத் திறந்ததும் நமது கடிதத்தைக் கேட்டு வாங்கலாம் என்றான் அவன்.

''கொஞ்ச நேரத்துக்கு முன்னால் வந்த போது கேட்டேன்.... அதன் பின் மனதுக்கு வருத்தமாகப்போய் விட்டது'' என்றான் இவன்.

ஏன்? என்று கேட்டான் அவன் இது தபால்பெட்டி இல்லை! என்று கூறினார் என்றான் இவன்.


கோ. சுவாமிநாதன்.

# 2500 ஆண்டு பழமையான மூளை கண்டுபிடிப்பு




இங்கிலாந்தில் உள்ள பார்க் பல்கலைக் கழகத்தின் வளாகத்தை விரிவாக்கம் செய்ய அங்கு மண்ணைத் தோண்டும் பணி நடந்தது.
அப்போது அங்கு புதைக்கப்பட்டிருந்த ஒரு மனித உடலின் மண்டை ஓடு கண்டெடுக் கப்பூட்டது.
மண்டை ஓட்டின் மேற்புறத்தில் உள்ள மிருதுவான சதைப் பகுதிகள் அனைத்தும் பாதிப்புற்று இருந்தன.
ஆனால் மூளை மட்டும் அப்படியே இருந்தது.
மஞ்சள் நிறத்தில் சுருங்கிக் கிடந்தது. இந்த மூளை கடந்த 2500 ஆண்டுகளுக்கு முன்பு புதைக்கப்பட்ட மனித உடலுக்குரியது என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வளவு மிக நீண்ட காலமாக மூளை எவ்வாறு சிதைவடையாது இருந்தது என விஞ்ஞானிகள் குழம்பிப்போய் உள்ளனர். அது குறித்து தொடர்ந்து ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

# பால் கலக்காத தேநீர் குடித்தால் உடல் எடை குறையும்



நாம் அன்றாடம் தேநீரில் பால் கலக்காது குடித்தால் உடல் எடை குறையும் வாய்ப்பு அதிகம் உள்ளது என புதிய ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் அசாமில் உள்ள ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த தேவஜித் போர்தகுர் என்ற நிபுணர் இந்த ஆய்வை மேற்கொண்டார். பசும் பாலில் கொழுப்புச் சத்து உள்ளது. அதை தேநீரில் கலக்கும்போது தீபளேவின்ஸ், தெரு பகின்ஸ் என்ற ஆண்டி ஆக்சிடெண்ட்கள் பாலில் புரோட்டீனை ஏற்படுத்துகின்றன. இதனால் தேநீரில் கொழுப்புச்சத்து அதிகரிக்கும். எனவே உடல் எடை குறையும் வாய்ப்பு ஏற்படாது. பால் கலக்காத தேனீர் குடிப்பதன் மூலம் கொழுப்புச்சத்து அதிகரிக்க வாய்ப்பு இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# பறவைகளைப் பற்றிய தகவல்களுடன் இணையத்தளம்



உலகில் இருக்கும் அனைத்து வகையான பறவைளும் எந்த நாட்டில் வசிக்கின்றன என்பதைப் பற்றியும் அதன் விவரம் பற்றியும் ஓடியோவுடன் கூடிய தகவல்களை தருவதற்கு ஓர் இணையதளம் உள்ளது.


உலகில் இருக்கும் பல்வேறு வகையான பறவைகள் பற்றிய தகவல்களை வெறும் வார்த்தையால் கேட்பதைவிட அதைப் பற்றிய வீடியோவையும், ஓடியோவையும் பார்த்தால் அதில் ஆர்வம் உடையவர்கள் மேலும் சிறப்பாக விளங்கிக்கொள்ள முடியும்.


ஒவ்வொரு பறவைக்கும் அதன் அழகான புகைப்படமும், இந்தப்பறவை எந்த நாட்டில் அதிகமாக வசிக்கும், இதன் குணநலன்கள், இதன் வடிவம், சராசரியாக இதன் எடை என்ன என்பதில் இருந்து தொடங்கி நாம் தேர்ந்தெடுத்த பறவையைப் பற்றி அனைத்தையும் அறிந்துகொள்ள இணையத்தளம் உதவுகின்றது.

உலகில் இருக்கும் லட்சக்கணக்கான பறவைகளைப் பற்றிய தகவல்களை தெரிந்து கொள்ள இந்த இணையத்தளம் பயனுள்ளதாக இருக்கும்.

# மலர்களும் மருத்துவங்களும்

-சோபி.





**மருதோன்றிப் பூ**

* மருதோன்றிப் பூவைத் தலையணையுள் வைத்துத் தூங்கினால் நல்ல தூக்கம் வரும்.

**குங்குமப் பூ**

* குங்குமப் பூவைத் தாய்ப்பால் விட்டு அரைத்துக் கண்களில் விட்டால் அனைத்துக் கண்நோய்களும் நீங்கும்.
* குங்குமப் பூவைத் தாய்ப்பாலில் அரைத்து நெற்றியில் பத்துப் போட்டால் தலைவலி நீங்கும்.

**புளியம் பூ**

* புளியம்பூவை நீரில் போட்டுக் கொதிக்க வைத்து அந்த நீரைக் கொண்டு கண்கழுவி வந்தால் கண்களில் காணும் இரத்த நிறம் நீங்குவதுடன் கண் குளிச்சியடையும்.
* புளியம் பூவை உப்பு, மிளகு சேர்த்துத் துவையலாக அரைத்து உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் நீர்த்தாரை எரிவு, மூலச்சூடு, வயிற்றுப்போக்கு சீதபேதி நீங்கிவிடும்.

**தென்னம் பூ**

* தென்னம் பூவை உலர வைத்து இடித்துத் தினமும் சிறு உருண்டை சாப்பிட்டு வந்தால் தாது விருத்தி உண்டாகும்.

**கொன்றைப் பூ**

* கொன்றைப்பூவை நீரிற் கசாயம் செய்து சீனியுடன் கலந்து குடித்தால் வயிற்றுப்புழுக்கள் செத்துவிடும்.

**நொச்சிப் பூ**

* நொச்சிப்பூவை உலர்த்தி இடித்து பன்னீர் பனங்கட்டியுடன் சேர்த்துச் சாப்பிட்டால் இரத்தபேதி நீங்கும்.

**மாதுளம் பூ**

* மாதுளம் பூவுடன் அதிமதுரத்தை அரைத்துப் பாலிற் கலந்து சாப்பிட்டால் உடற் குளிர்ச்சி ஏற்படும்.

**பூவரசம் பூ**

* பூவரசம் பூக்களைக் கசாயம் செய்து குடித்து வந்தால் விஷக்கடி குணமாகும்.
* சந்தான விருத்தி இல்லாதவர்கள் கல்யாண முருக்கம்பூவுடன் மிளகு சேர்த்து அரைத்துச் சாப்பிட்டு வந்தால் மலட்டுத்தன்மை நீங்கும்.

**பனம் பூ**

* பனம் பூவை எடுத்து உலர்த்திச் சாம்பலாக்கி நீர் கலந்து சாப்பிட்டால் நீர்க்கட்டுக் குணமாகும்.

**நந்தியா வட்டைப் பூ**

* நந்தியா வட்டைப் பூ, முருக்கம் பூ, நெருஞ்சிப் பூ மூன்றையும் பிழிந்து சாறெடுத்துக் கண்ணில் விட்டால் அல்லது கண்ணில் கட்டிக் கொண்டு தூங்கினால் காலையில் தோன்றும் கண் பூ மறையத் தொடங்கும்.
* நந்தியா வெட்டைப்பூவை இரவில் கண்ணில் கட்டிக் கொண்டு தூங்கினால் காலையில் கண்கள் குளிர்ச்சியாக இருக்கும்.
* நந்தியா வெட்டைத் தைலம், நோய்களுக்குச் சிறந்த தைலமாகும். கண்களில் இரண்டு சொட்டுத் தைலம் விட்டு வந்தால் கண்பார்வை பளிச்சிடும்.

**வில்வம் பூ**

* கண்வலி, கண்சிவப்பு, கண் அரிப்புக்கு வில்வம் தளிரை எடுத்து வில்வம் பூவுடன் வதக்கி கண் இமைகளில் ஒத்தடம் கொடுத்து வந்தால் விரைவில் குணமாகும்.
* செந்தாமரைப்பூவைக் கசாயம் காய்ச்சிக் குடித்து வந்தால் அம்மை நோய் குணமாகும்.
* வில்வம் தளிருடன் துளசி, மிளகு ஆகியவற்றை அரைத்துச் சாப்பிட்டால் ஆஸ்துமா குணமாகும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாப் பயணிகளைக் கவரும் சாட்டிக் கடற்கரை



*(கடந்தவாரத் தொடர்ச்சி)*

வேலணை சாட்டிப் பகுதியில் அமைந்துள்ள இந்தக் கடற்கரைப் பிரதேசம் முற்காலத்தில் 'வெள்ளக் கடற்கரை' என்று மக்களால் அழைக்கப்பட்டது. வெள்ளைப் பளிங்கு மண் கொண்டதும் கடற்பார் கற்களற்றதும், சுழிகள் நீரோட்டமற்ற இந்தக் கடற்பகுதி 'சாட்டி புனித தீர்த்தம்' என சைவ மக்களால் பேணப்பட்டு வந்தது. ஆனால் தற்போது இது உல்லாசப் பயணிகளைக் கவரும் இடமாக மாறிவிட்டது.

அந்த வகையில் உள்நாட்டவரை மட்டுமன்றி வெளி நாட்டவரையும் கவரக் கூடியதாக இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தி முன்னெடுக்கப்பட வேண்டும்.

நல்லூர் போன்ற புனிதத் தலங்களை அண்டிப் பெரிய விடுதிகளைக் கட்ட முனையும் முதலீட்டாளர்கள் தமது பார்வையை இது போன்ற உல்லாசக் கடற்கரைப்பகுதிகளை நோக்கித் திருப்பலாம்.

தற்போது பெரிய அளவில் வசதிகள் இல்லை. முன்னர் அந்தியேட்டி மடமாக இருந்த கட்டடம் ஆடை மாற்றும் இடமாக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாகப் புதிய அந்தியேட்டி மடம் கட்டப்பட்டுள்ளது. 'கபான' எனப்படும் நிழற் குடைகள் ஐந்து அமைக்கப்பட்டுள்ளதுடன் உணவுச் சாலை ஒன்றும் கட்டப்படுகின்றது. குடி தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளத்துடன் அடிப்படைத் தேவைகள் சில நிறை வேற்றப்பட்டுள்ளன.

வேலணைப் பிரதேசசபை இந்தக் கடற்கரையை சிறந்த ஒரு உல்லாசக் கடற்கரையாக மாற்றியமைக்க வேண்டும் என ஆலோசித்துள்ளது. இதற்கு அதிகளவில் செலவுகள் செய்ய வேண்டியுள்ளதாக வேலணைப் பிரதேச சபையின் செயலாளர் கே.தவராஜா கூறுகிறார். ஆரம்பத்தில் ஏற்படக்கூடிய தேவைகளைச் சமாளிக்க வாகனத் தரிப்பிடங்களுக்கான கட்டணங்களாக பெரிய வாகனங்களுக்கு 100 ரூபாவும் சிறிய வாகனங்களுக்கு 50 ரூபாவும் தற்சமயம் மேற்படி பிரதேச செயலாளரால் அறவிடப்படுகின்றது. இதனால் கிடைக்கக்கூடிய வருமானம் மட்டும் சாட்டிக் கடற்கரையின் அபிவிருத்திக்குப் போதுமானதல்ல என்றும் கூறுகிறார்.

உணவு விடுதி விரைவில் திறக்கப்படவேண்டும் என்பது உல்லாசப் பயணிகளின் கருத்தாகும். தற்போது ஒரு லான்ட்மாஸ்டரில் சில பொருள்கள் எடுத்து வரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இது தினமும் இடம்பெறும் வியாபாரமல்ல.

வேலணைப் பிரதேச சபை இந்தப் பகுதியைச் சிறந்த முறையில் வளப்படுத்த முயற்சிகள் மேற்கொள்கிறது. இங்கே உள்ள சுற்றாடலில் நிழல்தரு மரங்களை நட்டவும் சிறுவர்களைக் கவரக்கூடியதாக அவர்கள் விரும்பும் விளையாட்டுக் கருவிகளைப் பொருத்தவும் இப்பகுதியை அழகிய பூந்தோட்டமாக மாற்றவும் கூடியதான திட்டங்கள் பிரதேசசபையிடம் உள்ளன. மக்களைக் கவரவும் வருமானத்தைப் பெறும் வழிகளை உருவாக்கினாலும் அவற்றை முதலில் நிறை வேற்றத் தேவையான நிதி வசதிகள் சபையிடம் போதிய அளவு இருப்பதாகத் தெரிய வில்லை. எனவே உல்லாசப் பயணத்துறை இதற்கு உதவுவதன் மூலம் மேற்கொண்ட திட்டங்களை நிறைவேற்ற முடியும்.

உல்லாசக் கடற்கரை தானே என்பதால் பகிரங்கமான சில சில்மிஷங்களும் இடம்பெறத் தான் செய்கிறன. இதனால் தமது குழந்தைகளுடன் வருப்வர்களினதும் பெரியவர்களினதும் சங்கடங்களைத் தவிர்க்கும் பொருட்டு பொலிஸ் கடமை போடப்பட்டுள்ளது. அதிகாலை 5 மணி முதல் பி.ப. 5 மணி வரை அது இடம்பெறுகிறது. இந்த நேரத்தின் பின்னர் இப்பகுதியில் சில லீலா விநோதங்கள் புரியும் மதுப்பிரியர்கள் இருக்கத்தான் செய்கின்றனர் என்பதை இப்பகுதியில் உள்ளவர்கள் சூசகமாகக் கூறுகிறார்கள். இந்தப் பிரதேசத்துகு எல்லையிடப்பட்டு காவலாளிகளை நியமிக்கவும் பிரதேச சபைக்கு நோக்கமுண்டு. எனவே இந்த அபிவிருத்திக்கான மூல வளங்கள் தான்தற்போது முக்கியம் வாய்ந்தவையாகத் தென்படுகின்றன.

சாட்டிக் கடற்கரை என்று ஊர்காவற்றுறை-புங்குடுதீவுப் பகுதிக்கும் செல்வதுண்டு. இது பாதை தவறும் பயணங்கள். பிரதேசசபை மண்கும்பான் வெள்ளைப் புற்றடி விநாயகர்

**லக்ஸ்மன்**

ஆலயத்தை அண்டி சாட்டிக்கான வீதி குறித்துப் பார்வைக்கு வைக்க வேண்டும். வீதிகள் போக்குவரத்துக்கு உகந்ததாக இருப்பதால் வேலணைக்குச் செல்பவர்கள் இப்போது இந்தப் பாதையைப் பயன்படுத்துகிறார்கள்.

உல்லாசப் பயணிகள் இங்கு இரண்டொரு நாள்கள் தங்கிச் செல்ல விரும்பியபோதும் அதற்கான வசதிகள் இன்மையால் அது நிறைவேற முடியாதிருக்கிறது. அடிப்படை வசதிகள் பூரணமாக்கப்பட்டு சாட்டி உல்லாசக் கடற்கரை குறித்த விளம்பரங்களும் பிறபகுதிகளில் உள்ளவர்களைச் சென்றடையும் பட்சத்தில் இந்தப் பிரதேசம் மட்டுமன்றி வேலணைப் பிரதேசமும் புதிய வளர்ச்சிப் படிகளைத் தாண்டக் கூடியதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

*(முற்றும்)*

# பனை வளம்மிக்க காரைநகர் பிரதேசம்

*(கடந்தவாரத் தொடர்ச்சி)*

காரைநகர்ப் பிரதேசத்தில் உள்ள இயற்கைத் தாவரங்களுள் பொருளாதாரப் பயன்மிக்க இயற்கைத் தாவரமாக விளங்குவது பனைவளம் ஆகும். ஏனைய பொருளாதாரப் பயிர்களைப் போல நீர்ப்பாசனம், உரமிடுதல், பாதுகாத்தல் முதலிய எத்தகைய முயற்சிகளும் மேற் கொள்ளத்தேவையில்லாதது பனைவளம். வரண்ட பகுதிகளில் உள்ள மணற்தரை, கடற்கரை சுண்ணாம்புக்கற்பாறை, தேடுவாரற்ற தரிசு நிலங்கள் முதலிய இடங்களில் தானாகவே தோன்றி வளர்ந்து நமக்குப் பெரும் பயனைத் தரும் கற்பக தருவாக விளங்குகின்றது.



இங்கு உற்பத்தி செய்யப்படும் பனை ஓலைப் பொருள்களைக் கடைகளுக்கும், வீடுகளுக்கும் எடுத்துச் சென்று நியாயமான விலையில் விற்பனை செய்கின்றனர். உதாரணமாக ஒரு சோடி கடகம் 400 ரூபாவாகவும், ஒரு சோடி பெட்டி 150 ரூபாவாகவும், ஒரு சோடி சுளகு 400 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

பருவ காலத்தில் ஒரு முறை இடம் பெறும் தொழில்கள் என்ற வகையில் பனாட்டு உற்பத்தி, பனங்கிழங்கு உற்பத்தி, புழுக்கொடியல் உற்பத்தி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இந்தப் பிரதேச மக்கள் வருமானம் பெறும் நோக்குடன் இந்தத் தொழிலை மேற்கொள்கின்றனர். 1980 களில் 100 பனங்கிழங்குகளின் விலை 15 ரூபாவாக இருந்தது. 30 வருடங்களின் பின்னர் இன்று 100 பனங்கிழங்குகளின் விலை 500 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றன. ஆரம்பத்தில் 15 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட புழுக்கொடியல் தற்போது 350 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. இந்தப் பிரதேசத்தின் புழுக்கொடியலுக்குத் தென்னிலங்கையில் அதிக கிராக்கி இருப்பதனால் பலர் இங்கிருந்து புழுக்கொடியலை கொள்வனவு செய்து கொண்டு செல்கின்றனர்.

கசூரினாக் கடற்கரைக்கு வரும் உல்லாசப்பயணிகள் இந்தப் பொருள்களை அதிகம் விரும்பி வாங்கிச் செல்கின்றனர். அத்துடன் நுங்கு, பனம்பழம் என்பவற்றையும் அதிக விலை கொடுத்து உண்டு மகிழ்கின்றனர்.

பனை ஓலையைப் பயன்படுத்தி வீடு வேய்தல், வேலி அடைத்தல், பச்சை ஓலையை கால் நடைகளின் உணவாகவும், வயல்நிலங்களுக்குப் பசளையாகப் பயன்படுத்துதல் போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. காரைநகர்ப் பிரதேசத்தில் மிக வறுமை நிலையில் உள்ள மக்களின் வீடுகள் பெரும்பாலும் பனை ஓலையால் வேயப்பட்ட வீடுகளாவே காணப்படுகின்றன. வீடு வேய்ந்த பழைய ஓலைகள் வயல்

**டர்ஷிகன்**

நிலங்களுக்குப் பசளையாகப் பயன்படுத்தப்படுகின்றன. வீடுகள், கட்டடங்கள் அமைப்பதற்கு உறுதியான மரமாகப் பனைமரம் பயன்படுத்தப்படுகின்றது. பனைமரத்தில் இருந்து சிலாகைகள் பெறப்படுகின்றன. வீடுகள் கட்டுவதற்காகப் பனைமரங்கள் தறிக்கப்படுவதால் காலப்போக்கில் பனை வளம் அழிந்து போகக் கூடிய ஆபத்தினை எதிர்நோக்க வேண்டியுள்ளது.


கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால் பாதுகாப்புப் படையினர் தமது பாதுகாப்பு அரண்களை அமைப்பதற்காக வகை தொகையின்றி பெருமளவு பனைமரங்களை வெட்டினர். இதனால் காரைநகர்ப் பிரதேசத்தில் உள்ள பனந்தோப்புக்கள் பல அழிக்கப்பட்டு சோபை இழந்து காணப்படுகின்றன.

பனை மரங்களைத் தறிப்பது சட்டரீதியாகக் கட்டுப்படுத்த வேண்டும். பனைமரங்களைக் கண்டபடி தறிக்காது பாதுகாப்பான முறையில் அவற்றைப் பராமரிக்க வேண்டுமென்ற விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும்.

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 27.07.1930

மறைவு: 26.02.2011

## பொன்னையா கந்தையா

கடந்த 26.02.2011 அன்று இறைபதமடைந்த அமரர் பொன்னையா கந்தையா அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு உடன் வந்துதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மேலும் வெவ்வேறு வழிகளில் உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகளைத்தெரிவிப்பதோடு இன்று (30.03.2011) புதன்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

செட்டிச்சோலை,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

குடும்பத்தினர்
ரஜீவன் மோட்டோர்ஸ்

(48,21,23)

# யுவதியின் கையைப் பதம் பார்த்தது மின் விசிறி

தென்மராட்சி, மார்ச் 30

மின் இணைப்பு வழங்கப்பட்ட கிரைண்டரின் விசிறி இயங்காததால் அதனைக் கையினால் விசிறி இயக்க முற்பட்ட வேளையில் விசிறி திடீரென சுற்றிய தில் யுவதியின் கைவிரல்களில் காயம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த 26 ஆம் திகதி உசனில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ஆர்.கிருத்திகா (வயது-24) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (த-207)

## வீடு தேவை

கொழும்பு வெள்ளவத்தை, தெகிவளை ஆகிய பகுதிகளில் 3 அறைகள் கொண்ட அப்பாட்மன் உறுதியுடன் வீடு உடன் தேவை.
தொடர்பு: 0777773975

## கல்வி

பல வருட அனுபவமிக்க ஆசிரியரால் O/L கணிதம் (மீட்டல்) பகல்நேர வகுப்பு மற்றும் தரம் 6 வரையான மாலைநேர வகுப்புகள் தனியாக / குழுவாக வீடு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு: 0779370228

## வீடு வேண்டும்

யாழ்.இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரிச் சுற்றாடலில் வீடும் வளவும் வேண்டும். தயவு செய்து 021 222 3081 தொலைபேசி இலக்கத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தரணியில் மலர்வு: 01.04.1960
விண்ணில் மலர்வு: 10.04.2010
திதி: அபரபக்க துவாதசி



அமரர் கதிரன் நவரத்தினம்

இறைவன் உம்மை அழைத்து
தேவை என்று வைத்துக் கொண்டான்
இன் முகம் காணாமல்
ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் முகம் மறவோம் ஊராரைக் கூட்டி
உபசரிக்கும் பழக்கம் தந்தாய்
இன்று உங்கள் நினைவாய் காட்டி
உபசரிக்கின்றோம் ஆனால் நீங்கள் இல்லை
உங்கள் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்


தெல்லிப்பழை கிழக்கு,
மாத்தனை, தெல்லிப்பழை. (48,25,27)

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 01.07.1950

மறைவு: 10.04.2010



அமரர்
## சிவசூரியமூர்த்தி பாலசுந்தரம்

திதி: ஏகாதசி
30.03.2011

அன்பாலும் பாசத்தாலும் எல்லோரையும்
அரவணைத்த எங்கள் அப்பாவே நீங்கள்
எம் வீட்டின் குலவிளக்கே
அணையாத தீபமே-எமை வாழவைத்த எம்
அருமைத் தெய்வமே! அப்பா நீங்கள்
எம்மைப் பாதிவழிதனில் பரிதவிக்க
விட்டு எங்கு சென்றீரோ
ஓர் ஆண்டல்ல எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவு மறையாது
உங்கள் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்

மடத்தடி கிழக்கு, சாவகச்சேரி.

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.

(48,25,27)

TEGOSL

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

# அதியுயர் ஊடக விருதுகள் 2010

சிறந்த ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் 12 ஆவது வருட விருது வழங்கல் நிகழ்ச்சி

2010 ஆம் ஆண்டிற்கான அதியுயர் ஊடக விருது வழங்குவதற்காக இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் விண்ணப்பங்களைக் கோருகின்றது.

2010 ஆம் அண்டில் பத்திரிகைத்துறையில் பல்வேறு செயற்பாடுகளிலும் திறமைகளை வெளிப்படுத்தியவர்களுக்கு விருதுகளை வழங்குவதன் மூலம் அவர்களது தொழிலுக்கு அங்கீகாரத்தை வழங்குகின்றது. இலங்கையில் ஊடகத்துறையில் பணியாற்றும் எல்லா ஊடகவியலாளர்களும் இந்த விருதுகளுக்காக விண்ணப்பிப்பதை ஊக்குவிப்பதோடு மும்மொழிகளிலும் பின்வரும் பிரிவுகளிலான விருதுகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் சில்வா ஞாபகார்த்த விருது
- ஆண்டின் சிறந்த தனித்துவ செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த புலனாய்வுக்கான விருது
- ஆண்டின் சிறந்த சூழலியல் செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது
- ஆண்டின் சிறந்த விளையாட்டு செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான டென்சில் பீரிஸ் விருது (26 வயதுக்கு கீழ்)
- ஆண்டின் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
- நெருக்கடி சூழலில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி ஞாபகார்த்த விருது
- ஆண்டின் சிறந்த வணிக செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த விவரண கட்டுரையாளருக்கான உப்பாலி விஜேவர்தன விருது
- ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிரிவர்தன விருது.



ஊடகத்துறையைச் சேர்ந்த சிறந்த அனுபவம்வாய்ந்த நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்கு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இதற்கான விண்ணப்பங்களையும் அறிவுறுத்தல் கையேட்டையும் இல: 96, கிருல வீதி கொழும்பு 05 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது www.slpi.lk என்ற இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் தினம் 2011 மார்ச் மாதம் 31 ஆம் திகதி ஆகும்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
07.05.1950

மறைவு
03.04.2008

## அமரர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம்

(யாழ்.கல்விவலய உதவிக்கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி), இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர்)

திதி: துவாதசி (அபரபக்கம்)

தரணி போற்றிய வித்தகச் செம்மலே
மரணிக்காத நின்பெரும் கலைப் பொக்கிஷமே
ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும்- நீர்
அவனி விட்டு பவனி சென்றாலும்- நின்
துயரங்கள் சுவடுகளாய் எம்மனதில்
துலங்கிய நினைவுகள் என்றும் உம்முடன்

40/2, கலைமகள் வீதி,
அரியாலை.

குடும்பத்தினர்.

(49,20,23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்தி அப்பாலுக்கு அப்பால்......!



நந்தி மரணத்துக்கப்பாலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் எனில் அவர் வாழ்வின் நெருக்கடிகளில் பொதுவான பார்வைக்கு அப்பால் சமூகத்தை நோக்கியமையே காரணமாகும்.

பேராசிரியர் சிவஞானசுந்தரம் என மருத்துவத்துறை பேசும் அதே நேரம் ஈழத்து நவீன தமிழ் இலக்கிய உலகில் 'நந்தி' உயிர் வாழ்கின்றார்.

பல தமிழ் நாவல்களையும் 50 சிறுகதைகளையும் காலத்துக் காலம் வெளியிட்ட எழுத்தாளர் நந்தி நோயுற்ற நிலையிலும் முற்றுப்பெறாத நாவலுடன் பயணித்தவர். தன் வாழ்வு சார்ந்தும் டிரபுகளைக் கடந்த சமூக மாற்றங்கள் சார்ந்தும் இவரது ஆழ்ந்த அவதானங்களே இவரது சிறுகதைகளின் விதைகளாகின.

காலத்துக்குக் காலம் சமூகத்தில் முனைப்புற்றிருந்த விடயங்களைக் கருவாக்கி,

**✱கண்களுக்கப்பால்**

சாதித்திமிர் பிடித்த ஒருவர் கீழ்ச் சாதிக்காரரின் கண்களினால் உலகைப் பார்ப்பது. மருத்துவமும் கருத்தியலும் இணையும் அற்புதப் படைப்பு.

**✱கொடுமைகளுக்கப்பால் (1995)**

பெண்விடுதலை கோரி முன்னேறிவரும் பெண்களின் அகம் பாவமும் அதிகாரமும் தலை தூக்கும் நிலைமை.

**✱மருந்துக்கு அப்பால்**

வெறுமனே ஒரு நோயாளி மருந்துகளால் மட்டும் குணமடைய முடியாது.

**✱சாட்சிகளுக்கு அப்பால் (2002)**

தமிழ்க் குடும்பத்தினர் ஒரு சிங்களப் பெண்ணைத் தத்தெடுத்து வளர்த்துத் தமது ஆசாரப்படி திருமணம் செய்கின்றபோது பின்புலத்தில் இனத்துவஞ் சார்ந்த கருத்துக்கள் இடறுகிறது.

**✱விடைகளுக்கு அப்பால் (2004)**

சமூகவியல் பரீட்சைக்காகத் தயாரிக்கப்படும் கேள்விக் கொத்துகள் ஒருவிடய உண்மையை வெளிப்படுத்துவதற்கு ஆம்/இல்லை என்ற பதங்கள் மட்டும் போது மானதல்ல என்பதும் பாலியல் வன்முறை சார்ந்த இப்படிவத்தை மையமாகக் கொண்டு கதையை நகர்த்துவதன் மூலம் குடும்ப சமூக உறவுகளில் வளரும் இளம் பெண்கள் சுரண்டப்படும் பாங்கினை எவ்வித விரசமுமின்றி வெளிப்படுத்துகிறது.

முதலில் கதைகளை நோக்கும் போது முரண்களில் முனைப்புப் பெறும் கூரிய பார்வைமிக்க ஒருகலைஞனின் ஆக்க சூட்சுமங்களும் அனுபவ உண்மைகளும் சமூகப் பெறுமானங்களின் கருத்தியல் தளங்களும் விமர்சனத்திற் குள்ளாகின்றன. தமிழர் வாழ்வில் இறுகிப் போயிருக்கும் முன்முடிவு சார்ந்த விதிகளை முற்றாக இறுக்கிப் பிடித்திருக்கும் நாம், கதை முடிவில் புதிய புரிதல்களுக்கும் சிந்தனைகளின் பொறிகளுக்கும் எதிர்பாராது தூக்கி எறியப்படுகிறோம்.

சத்தியத்துக்கு அப்பாற்பட்ட உயிர்ப்புடன் துடிக்கும் சம்பவங்கள் சார்ந்த மரபை உடைக்கும் கால, தேச வர்த்தமாணங்களுக் கப்பாற்றப்பட்ட அழகியல் அநுபவம் என்பதைவிட வாழ்க்கை சார்ந்த ஆழம் யதார்த்தத் தளத்திற்கு ஊடுருவிச் சென்று அதிர்வுகளை உண்டாக்கி புதிய தளத்திற்கும் பரிமாணத்திற்கும் இட்டுச் செல்பவை இக்கதைகள். முறையே சாதீயம், பெண்ணியம், மருத்துவம், இனத்துவம், பாலியல் வன்முறை சார்ந்த இக்கதைகளின் காலகட்டங்களும் இவரது பார்வையில் பட்டுத் தெறித்த பாங்கும் கலைஞனுக்கு அப்பால் கருத்துநிலை சார்ந்த விவாதங்களையும் விமர்சனங்களையும் எம்முள் ஏற்படுத்துகின்றன.

இப் படைப்புகள் மிகக் கூர்மையான சமூக ஆயுதமாக மாறி, வாசகர் மனத்தில் மிகுந்த பாதிப்பினை ஏற்படுத்தி ஆற்றல் மிக்க கலையாக்கமாக உருமாறியுள்ளன. அறிவுப் புலமையைப் படைப்பு மனத்துடன் இணைத்து பிரச்சினைகளின் முழுமையை ஆராய்ந்து, நிகழ்ந்ததில், தான் கண்ட அனுபவ உண்மைகளை ஓர் எழுத்தாளன் வெளிப்படுத்தும்போது புற உலகில் நடந்தவை உண்மையின் தளத்திற்கு நகர்த்தப்பட்டு, விருப்பு வெறுப்பற்ற மனங்களின் ஆராய்வுக்குரிய உள்ளடக்கமே சிறுகதையின் உருவத்தைத் தீர்மானிக்கிறது என்பதை விளங்கிக் கொள்ளலாம். சிறுகதை என்பது மிகுந்த உழைப்பையும் கவனத்தையும் சிரத்தையையும் எதிர்பார்க்கும் ஓர் உருவம். மின்னி மறையும் ஒளிக்கீற்றை ஒத்த இவ்விலக்கிய வடிவே அப்பாலான சிந்தனைகளுக்குக் களமாகின்றது.

தத்துவம், சமயம், இலக்கியம் ஆகியவற்றில் விசேட ஈடுபாடும் விஞ்ஞானத்தை- மருத்துவத்தைத் தனது தொழிலாகக் கொண்ட இவரது பார்வைப் பரப்பே படைப்புக்கு வலு சேர்க்கின்றது.

குடும்ப, சமூக நிலைவரங்களை ஆழமாக நோக்குதல், உணர்வுகளுக்கப்பால் விடயங்களைத் தர்க்க பூர்வமாக ஆராய்தல் என்பனவே இருப்புக்கும் வாழ்க்கைக்குமான வேற்றுமைகளைப் பதிவு செய்வதில் இவரை வெற்றியடையச் செய்தன. தான் பிறந்து வளர்ந்த மண்ணையும் கலாசாரத்தையும் கடல் தாண்டிய தேசங்களில் நம்மவர் நிலைமைகளையும் இவ்வுலகின் முழுமை சார்ந்து சிந்தித்தவர்.

கற்பனைக் கோலங்களைக் கடந்து அவற்றின் தளங்களையும் தகர்த்துக் கொண்டு நேரடி அனுபவ ரீதியான ஊடுருவல்களுக்குரிய இலக்கிய உருவங்கள் எமக்குப் பரிச்சயமான உலகில் எம்மைச் சஞ்சரிக்க வைக்கின்றன. இக் கதைகளை விரிவாக நோக்குவதற்கு இக்கட்டுரை போதுமானதல்ல. அவை பற்றிய புரிதல்களும் படைப்பாளியின் பார்வை, சிறுகதைப் பிரக்ஞை உத்தி, உருவத்தளங்கள் என்பன விரித்து நோக்கப்பட வேண்டியவை.

இது இப்படித்தான் என்று கோடிட்ட இறுக்கமான சமூகக் கட்டமைப்பில் இப்படியும் நிகழ்கின்றன எனச் சூட்சுமமாக உணர்த்தி, சூட்சுமங்களின் சிக்கல்களைப் புரிந்து கொள்ள உதவும் இவரது சிறுகதைகள் விளக்க முடியாத அல்லது விளங்க மறுக்கின்ற விடயங்களைக் கதைசொல்லியாக, தானே மாறி, மனித மனங்களின் இயல் புகளையும், ஊனங்களையும்கதைப்போக்கினூடாகவே உணர்த்திச் செல்லும் படைப்பு மனம் இவருடையது.

சமூக வியலாளரும் ஆய்வுத் தளமாகக் கொள்ளதக்க கதைக் களங்களாக இவரது கதைகள் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்க இன்னொரு விடயம்.

சமூக அக்கறையுடனும் மனிதனேயச் சிந்தனையும் கொண்ட மருத்துவத்துறைப் பேராசான் கருத்தியல் அணுகு முறையில் கை தேர்ந்து விளங்கியதனா

**விமலாதாஸ்**

லேயே சமூகம் சார்ந்த சிறந்த சிறுகதைப் படைப்பாளியாக என்றும் நினைவு கூரப்படுவார் என்பது உறுதி.

வாசகரின் அநுபவத்தை அடிப்படையாகக் கொண்டு நகர்த்தப்படும் சிறுகதை இலக்கியம் காவிச் செல்லும் கதைக் கருக்கள் சமூகத்திலேயே விதைக்கப்பட்டுள்ளன. இவற்றை உள்ளடக்கிய இலக்கிய ஆக்கங்களை வாசிக்கும் பழக்கம் இளந்தலை முறையினிடையே அருகி வருவது மன வருத்தத்துக்குரியதாகும். ✱

> பேராசான் நந்தியின் பிறந்த நாளை ஒட்டி ஒன்றுகூடல் நிகழ்வு இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்ற மண்டபத்தில், யு.என்.எச்.சி.ஆர் அலுவலகத்துக்கு அருகில், இடம்பெறவுள்ளது.

# யாருக்கு விளையாட்டுப் போட்டி?

**கோணல் லங்கள்**

**ஓடுகாலி**

ரீச்சர்! நான் அம்மாட்ட போகப் போறன்!

வெடித்துக் கிளம்புகிற அழுகையினூடே அந்தப் பிள்ளை தன் ஆசிரியரிடம் இவ்வாறு அடம் பிடித்துக் கொண் டிருந்தது. ஆயினும் அந்தப் பிள்ளையின் கண்ணீர்க் கோரிக்கையை நிறைவேற்றும் அவகாசம் ஆசிரியருக்கு இருக்கவில்லை. அவரை நம்பி அனுப்பப்பட்ட ஏனைய பிள்ளைகளை அவர் மைதானத்துக்கு தயார் செய்து அனுப்ப வேண்டும். பாலர்களின் விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள் இன்னும் சிலநிமிடங்களில் இடம் பெறவுள்ளதால் போட்டிக்குரிய மாணவர்களை உடனடியாக மைதானத்துக்கு அனுப்புமாறு வேண்டுகின்றோம் - ஒலி பெருக்கியினூடே தவழ்ந்து வந்த வார்த்தைகள் ஆசிரியரை இயந்திரமாக்கியது.

அழுத பிள்ளை, அழாத பிள்ளை என்றெல்லாம் பேதம் பார்க்காமல் முயல் பாய்ச்சல், ஆமையோட்டம், தவளைப் பாய்ச்சல், ஓட்டம் எனப் பல்வேறு விளையாட்டுக்களிலும் பங்கு பற்றுகின்ற பிஞ்சுகளை அவசரமாக போட்டி நடைபெறும் இடத்துக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். போட்டிகள் ஆரம்பமாகின.

ஆயினும் ஒலிபெருக்கியில் அறிவித்தபடி பாலர்களின் விளையாட்டு நிகழ்வு நடை பெறாமல் பயிற்சி ஆசிரியர்கள் பங்குபற்றும் நிகழ்வுகளே மைதானத்தை ஆக்கிரமித்துக் கொண்டன. உச்சி வெயிலில் நீண்ட நேரக் காத்திருப்பின் பின்னரே குழந்தைகளின் போட்டிகள் தொடங்கின.

இத்தனைக்கும் முன்பள்ளி மாணவர்களின் (அதுவும் சர்வ தேசப் பாடசாலை ஒன்றின் [illegible] பள்ளி) விளையாட்டு [illegible] அது. அவர் களுக்கான போட்டி தொடங்குவதற்கிடையில் வெயிலில் வாடியதாலும், தொடர்ச்சியாக அழுதுகொண்டே இருந்த தாலும் பெரும்பாலான பிள்ளைகள் நோஞ்சான் குஞ்சுகளாகவே மாறிப் போயிருந்தனர்.

இதைவிட பகல் 10 மணிக்கே அந்தச் சர்வ தேசப் பாடசாலையின் பிராந்தியக் கிளைப் பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் அனைவரும் யாழ். நகரை அண்டியுள்ள பிரபல பாடசாலை ஒன்றுக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

நீண்ட நேரமாகிவிட்டதால் இயற்கை உபாதைகளாலும் அந்தப் பிஞ்சுகள் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தனர். தம்மையுமறியாமல் உடையுடன் ஒண்டுக்கு, ரண்டுக்கு போய் [illegible] பயத்தில் அந்த அவஸ்தைகளையெல்லாம் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டிருந்தனர்.

ஆனாலும் போட்டிகளின் போது சில மாணவர்கள் சிறுநீர் கழித்தபடியே பங்குபற்றுவதை எவராலுமே தடுக்க முடியவில்லை. தம்முடைய மழலைகளின் விளையாட்டுத்திறனை நேரில் பார்த்து மகிழ்வதற்கென வந்திருந்த பெற்றோர் மைதானத்தின் பார்வையாளர் கூடத்தில் இருத்தப்பட்டு, அங்கிருந்து நகர வேண்டாமெனக் கண்டிப்புடன் அறிவுறுத்தப்பட்டனர்.

இதனால் குறித்த பார்வையாளர் பகுதியில் இருந்து 200 மீற்றருக்கும் அதிகமான தொலைவில் நடைபெற்ற பிள்ளைகளின் நிகழ்வுகளை ஒரு கைக்கணக்கிலேயே பார்க்க வேண்டிய நிலை பெற்றோருக்கு. ஒருபுறம் போட்டிகள்நடைபெற்றுக்கொண்டிருக்க மறுபுறத்தில் ஏற்கனவே முன்னொரு நாளில் நடைபெற்ற குறித்த விளையாட்டு நிகழ்வின் முன்னோடிப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப் படத் தொடங்கின. அதிலும் பாலகர்களை விட பயிற்சி ஆசிரியர்களே ஒப்பீட்டள வில் வெற்றிப் பீடங்களில் ஏற்றப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப் பட்டன.

இதன்போது அழைக்கப்பட்ட ஒரு குறித்த நிகழ்வில் வெற்றியீட்டிய பாலகர்கள் நீண்ட நேரமாக வெற்றிபீடங்களில் ஏறி நின்று பங்குனி வெயிலால் மண் புழுப்போல துடித்தபடி வதைபட்டுக் கொண்டிருக்க அதைப் பற்றி எவருமே கணக்கெடுக்காதவர்கள் போல இருந்தார்கள். ஏறக்குறைய 20 நிமிடங்களுக்கும் மேலாக அந்தபிஞ்சுகள் கொதிக்கும் வெயிலில் துடித்துக் கொண்டிருக்க, சான்றிதழ்களை அவர்களுக்கு வழங்கவென எவருமே அங்கு எட்டியும் பார்க்கவில்லை.

அதற்கிடையில் இடைவேளை உடற்பயிற்சி நிகழ்வுகள் ஆரம்பமாவதாக அறிவிக்கப்பட, பரிசில் பெறும் கனவுடன் வெற்றிப் பீடங்க ளின் மேலே சுட்டெரிக்கும் வெயிலையும் தாங்கிக் கொண்டிருந்த சிறிசுகள் அங்கிருந்து அகற்றப்பட்டனர்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கியூபா தலைநகர் ஹவானாவில் நடக்கும் பொருளாதாரக் கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காக, அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஜிம்மி கார்ட்டர் ஹவானா விமான நிலையத்தில் வந்திறங்கி கையசைக்கின்றார்.

### பெனாஸிர் கொலை வழக்கு:

# சர்வதேச பொலிஸ் உதவியுடன் முஷாரப்பை கைது செய்ய உத்தரவு

ராவல்பிண்டி, மார்ச் 30

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப்பை சர்வதேச பொலிஸ் (இண்டர்போல்) உதவியுடன் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு ராவல்பிண்டி தீவிரவாதத் தடுப்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ 2008ஆம் ஆண்டு தேர்தல் பிரசார பேரணியின்போது தீவிரவாதிகளால் குண்டு வைத்து கொல்லப்பட்டார்.

அப்போது முஷாரப் அங்கு ஜனாதிபதியாகப் பதவி வகித்தார். பதவி இழந்த அவர் தற்போது லண்டனில் தங்கியுள்ளார். இந்த நிலையில் சரியான பாதுகாப்பு வழங்காததால்தான் பெனாஸிர் கொல்லப்பட்டார் எனக் கூறி முஷாரப் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.தற்போது இந்த வழக்கு விசாரணை ராவல் பிண்டியிலுள்ள தீவிரவாதத் தடுப்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. எனவே நீதிமன்ற விசாரணையில் ஆஜராகும்படி லண்டனில் தங்கியிருக்கும் முஷாரப்புக்கு பல தடவைகள் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

இருந்தும் அவர் நீதிமன்றத்தில் ஆஜராக வில்லை. எனவே, அவர் பிணையில் வர முடியாதபடி பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அதையும் அவர் பொருட்படுத்தவில்லை. இந்த நிலையில், பெனாஸிர் கொலை வழக்கு ஞாயிற்றுக்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது முஷாரப்பை சர்வதேச பொலிஸ் (இண்டர்போல்) உதவியுடன் கைது செய்து ஆஜர்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டது. இதற்கான நடவடிக்கையில், பாகிஸ்தான் அரசு தீவிரமாக உள்ளது. (த)

# ஆப்கானில் 50 பொலிஸார் தலிபான்களால் கடத்தல்

காபூல், மார்ச் 30

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 50 பொலிஸாரைத் தலிபான்கள் கடத்திச் சென்றுள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் மத்திய மாகாணமான கூனார் மாகாணத்திலுள்ள கண்டி மாவட்டத்தில் பாதுகாப்புப் பணியில் பொலிஸார் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அப்போது ஏராளமான வாகனங்களுடன் வந்த தலிபான்கள் திடீரென தாக்குதல் நடத்தினர். பதிலுக்குப் பொலிஸாரும் தாக்குதல் நடத்தினர்.

எனினும் தலிபான்கள் 50 பொலிஸாரை கடத்திச் சென்றனர் என தலிபான்களின் செய்தித் தொடர்பாளர் ஜபிஹூல்லா முஜாகித் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

கூனார் மாகாணத்தைச்சுற்றி பாதுகாப்பு வலையம் அமைத்து படையினர் தலிபான்களைத் தேடி வருகின்றனர் என செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. (த)

### யாருக்கு விளையாட்டு போட்டி

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடைசி வரைக்கும் அவர்களுக்கான சான்றிதழ் வழங்கப்படவேயில்லை.

ஒருவாறு விளையாட்டு நிகழ்வு முடிய இரவு ஏழு மணியாகி விட்டது. மேடையில் மின்னிக் கொண்டிருந்த வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுக் கொள்ளும் ஆவலுடன் இருந்த பிள்ளைகளில் ஒரு சிலருக்கே அவை கிடைத்தன. ஏனையவை எல்லாம் பயிற்சி ஆசிரியர்களுக்குத்தான்.

அதுவும் தனியே விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றி பெற்ற நபர்கள், குழு என்பவற்றுக்கு மாத்திரமல்லாது வலைப்பந்தாட்ட ராணி, உதைபந்தாட்ட ராஜா என்பன போன்ற விருதுகளும் அறிவிக்கப்பட்டு அதற்குரிய கேடயங்களும் பயிற்சி ஆசிரியர்களுக்கு அள்ளி யள்ளிக் கொடுக்கப்பட்டன.

நிகழ்வு முடிந்து வீடு செல் கையில் அம்மா! நான் பெர்ஸ்டா தானே வந்தனான். அப்ப ஏன் எனக்கு ஒரு பிறைசும் தரேலை? என்று கேட்டபடி பல பிள்ளைகள் செல்வதைக் காணமுடிந்தது.

சிறுவர் உள நலன், புதிய உலகியலுக்கான கல்வி முறைஎன்பவற்றை விருத்தி செய்வதாகக்கூறியே பல சர்வதேசப் பாடசாலைகள் நம் மண்ணில் முளைத்து வருகின்றன.

எனினும் அவை அந்த விடயங்களை எந்தளவு தூரம் பின்பற்றுகின்றன என்பது கேள்விக் குறியான விடயம்தான். யார் யாரோ வெல்லாம் சம்பல் அரைப்பதற்கு நம்முடைய சிறார்களின் தலைகளையல் லவா அம்மியாக்குகிறார்கள். பாலர் விளையாட்டுப் போட்டி என்ற பெயரில் அந்தப் பிஞ்சுகளை வாட்டிவதைத்து, அவர்களுடைய வினைத் திறனை சிதைத்து, மனதளவில் பாதிப்பை உண்டு பண்ணி, பயிற்சி ஆசிரியர்கள் என்ற பெயரில் பெரியவர்க ளுக்கான நிகழ்வை நடத்துவது தான் சர்வதேச கற் பித்தல் முறையா? இதுதான் புதிய உலகு நோக்கி சிறுவர்களை ஆற்றுப்படுத்தும் முயற்சியா? சிறுவர்களின் மனங்களை நோகடிக்காது அவர்களுக்கான களங்களைத் திறக்க இனியாவது இத்தகைய சர்வதேசப் பாடசாலைகள் முயலவேண்டும். *



## மணிவிழா நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்



எழுதுமட்டுவாழ் தெற்கு
உயர்திரு. இராஜையா
தெய்வேந்திரம்பிள்ளை
சிறந்த சமூக சேவையாளரும் சமாதான நீதிவானும்
யாழ்.பல்கலைக்கழக கழகத்தில் சேவையாற்றி
26.03.2011 தனது 60 ஆவது அகவையைப் பூர்த்தி செய்துள்ளார்.
அவரது ஓய்வுகாலம் சிறக்க நலமுடன் பல்லாண்டு காலம் வாழ பாராட்டி வாழ்த்துகிறோம்.

எழுதுமட்டுவாழ் தெற்கு மக்கள்.

(38-19)




உ

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## 75 ஆவது அகவை அழைப்பு

## சரவணமுத்து கந்தசாமிப் பத்தர்



சரவணமுத்து கந்தசாமிப்பத்தரின்
75ஆவது அகவையை இன்று (30.03.2011) புதன்கிழமை நண்பகல் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய அன்னதான மண்டபத்தில் கொண்டாட இருப்பதால் அனைவரையும் வருகைதந்து மதிய போசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்பு:
மகன், மகள்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

601, காங்கேசன்துறை வீதி,
தட்டாதெரு,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(49,25,27)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலி பிரதமர் மிலன் நகர நீதிமன்றில் ஆஜர்

மிலன், மார்ச் 30

இத்தாலி பிரதமர்சில்வியோ பெர்லுஸ் கோனி(வயது - 74), ஊழல் வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் திங்கட் கிழமை ஆஜரானார்.

இத்தாலிய பிரதமர் பெர்லுஸ்கோனி மீது ஊழல், பாலியல் ஆகியவை தொடர்பாக, ஏராளமான முறைப்பாடுகள் கூறப்பட்டு வருகின்றன. தற்போது இவர் மீது நான்கு வழக்குகள் நிலுவையில் உள்ளன.

ஊழல் முறைப்பாடு தொடர்பாக மிலன் நகர நீதிமன்றத்தில் பெர்லுஸ் கோனி திங்கட்கிழமை ஆஜரானார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணை இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை பெர்லுஸ்கோனி தனக்கு சொந்தமான சேனல்-5 தொலைக் காட்சியில் உரையாற்றுகையில், ''இந்தப் பிரபஞ்சத்திலேயே அதிகப்படியான குற்றச்சாட்டுகள் என் மீது தான் கூறப்பட்டுள்ளன. வரலாற்றிலேயே என் மீது தான் முறைப்பாடுகள் அதிகம் கூறப்பட்டுள்ளன. என் மீது கூறப்படும் குற்றச்சாட்டுகள் கேலிக்குரியவை, அடிப்படையில்லாதவை'' எனத் தெரிவித்துள்ளார்.

பெர்லுஸ்கோனி மீதான குற்றச் சாட்டு நிரூபிக்கப்பட்டால், அவருக்கு 12 ஆண்டு வரை சிறைத்தண்டனை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (த)

## தற்கொலைத் தாக்குதலில் 20 தொழிலாளர்கள் பலி!

காபூல், மார்ச் 30

கிழக்கு ஆப்கானிஸ்தான் அருகே வெடிமருந்து நிரப்பிய லொறியை தற் கொலைப் படையினர் வெடிக்கச் செய்தனர். இதில், திங்கட்கிழமை வீதி கட்டுமான நிறுவனத்தில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் 20 பேர் உயிரிழந்தனர். 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பாக்திகா மாகாணத்தின் பர்மால் மாவட்டத்தில் இந்தத் தாக்குதல் நடைபெற்றது என உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். ஜாகிர் கட்டுமான நிறுவனத்தை நோக்கி, சக்திவாய்ந்த வெடி பொருள்கள் நிரப்பிய லொறியில் வந்த 3 பேர், காவலாளியைச் சுட்டுக் கொன்று விட்டு தொழிற்சாலை வளாகத்தை நோக்கி முன்னேறியபடியே லொறியை வெடிக்கச் செய்துள்ளனர்.

லொறி வெடித்ததில் அப்பகுதி முழுவதும் சின்னாபின்னமானது. இச்சம்பவத்திற்கு தலிபான்கள் பொறுப்பேற்கின்றனர் என தலிபான் செய்தித்தொடர்பாளர் ஜபியுல்லா முஜாகிதீன் தெரிவித்துள்ளார்.(த)

பிரமுகர் சந்திப்பு...



லித்துவானியா தலைநகர் வில்னியசில் அந்த நாட்டு அதிபர் தாலி யாகிரை, பாஸ்காய்டியை (வலது) குரோசியன் அதிபர் ஜோசிபோவிக் சந்தித்துப் பேசுகின்றனர்.

## கார் சாவியை கிரேன்மூலம் மீட்டார் ஹோட்டல் அதிபர்

மெல்போர்ன்,மார்ச் 30

நியூஸிலாந்தில் ஹோட்டல் அதிபர் ஒருவர் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட தனது வீட்டிலிருந்த கார் சாவியை கிரேன் மூலம் மீட்ட செயல் விமர்சனத்துக்குள்ளானது.

நியூஸிலாந்தில் பெப்ரவரி 22ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தில் கிறிஸ்ட்சர்ச் நகரம் வெகுவாகப் பாதிப்படைந்தது.

இதனால் 5 வாரங்களாக மக்கள் அபாய வலயப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இந்நிலையில் வெளியூர் சென்றிருந்த ஜோன் பட்டர்பீல்ட் என்ற ஹோட்டல் அதிபர், அபாய வலயப் பகுதியில் 13ஆவது மாடியில் இருந்த தனது வீட்டிலிருந்து, தனதும் மனைவியினதும் கார் சாவிகள் மற்றும் ஏனைய பொருள்களை கிரேன் மூலம் எடுத்துள்ளார்.

'தி ஸ்டார்' என்ற தினசரிக்கு பேட்டியளித்த பட்டர்பீல்ட், கிரேன் பயன்படுத்த தான் முறையாக அனுமதி பெற்றிருக்கிறார் எனத் தெரிவித்தார்.

ஆனாலும் அவரின் இச்செயல் மக்களிடையே கடும் விமர்சனத்துக்குள்ளானது. (த)

# ஏமனில் அல்-குவைதா தாக்குதல்: தொழிற்சாலை தீக்கு 70 பேர் பலி!

துபாய், மார்ச் 30

ஏமனில் அல்-குவைதாவினர் நடத்திய தாக்குதலில் அரசுக்குச் சொந்தமான ஆயுத தொழிற்சாலை தீப்பிடித்தது. இதில் 70 பேர் உடல் கருகி பலியாயினர். ஏமனில் அதபிர் அலி அப்துல்லா சலே பதவி விலகக்கோரி பொதுமக்கள் கிளர்ச்சி செய்து வருகின்றனர்.

ஏமனின் தெற்கு மாகாணமான அபிதினிலிருந்து 15 கி.மீ. தொலைவிலுள்ள ஜார் என்ற நகரில் துப்பாக்கி தோட்டாக்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று உள்ளது. இங்கு 150இற்கும் மேற்பட்டோர் பணியாற்றிக் கொண்டிருந்தனர். சம்பவத்தன்று திடீரென வெடிகுண்டு தாக்குதல் நடத்தியதில் தொழிற்சாலை தீப்பிடித்து எரிந்தது. இந்த விபத்தில் 70இற்கும் மேற்பட்டோர் உடல் கருகி பலியாயினர் என அல்-ஜெஸீரா தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து இந்தத் தொழிற்சாலையின் நிர்வாகி மொஹிம் சலீம் கூறுகையில், ''ஏற்கனவே அரசுக்கெதிராக மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்ற னர். இப்பகுதியில் அல் - குவைதாவினர்தான் இந்த வெடிகுண்டு தாக்குதலை நடத்தியிருக்கலாம்'' என்றார். சம்பவ இடத்திற்கு வந்த பாதுகாப்புப் படையினர் கருகிப்போன உடல்களை மீட்டனர். மேலும் நாட்டிலுள்ள பல்வேறு தொழிற்சாலைகளுக்கும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## தென்கொரியாவிலும் கதிர்வீச்சு அபாயம்

கடந்த 11ஆம் திகதி ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பம், ஆழிப்பேரலை ஆகியவற்றை தொடர்ந்து அங்குள்ள புகுஷிமா அணுஉலை வெடித்தது. அதிலிருந்து கதிர் வீச்சு வெளியேறி வருகிறது.

தற்போது, அதன் கதிர் வீச்சு பக்கத்து நாடான தென் கொரியாவிலும் பரவி உள்ளது. கொரிய அணு பாதுகாப்பு மையம் தென் கொரியாவிலுள்ள 12 இடங்களில் காற்றில் ஆய்வு மேற்கொண்டது. அதில், ஓரளவு கதிர்வீச்சு பரவியுள்ளமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. (த)

# அலி பூட்டோ தூக்கிலிடப்பட்ட வழக்கு மீள் விசாரணைக்கு பாக்.அரசு முடிவு

இஸ்லாமாபாத், மார்ச் 30

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜூல்பிகர் அலி பூட்டோ தூக்கிலிடப்பட்ட வழக்கை மீண்டும் விசாரணைக்கு உட்படுத்த அமைச்சரவை முடிவு செய்துள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானில் ஜனநாயக ரீதியில் நடந்த தேர்தலில் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் ஜூல்பிகர் அலி பூட்டோ முதல் பிரதமராக தேர்வு செய்யப்பட்டார்.

எனினும் அப்போதைய ஜனாதிபதி ஸியா-உல்ஹறத்க், 1977ஆம் ஆண்டு பூட்டோவின் ஆட்சியை கவிழ்த்து விட்டு இராணுவ ஆட்சி நடத்தினார். பின்னர் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் திகதி ஜூல்பிகர் அலி பூட்டோவை தூக்கிலிட்டார்.

பாகிஸ்தான் அமைச்சரவையில் பூட்டோ தூக்கிலிடப்பட்ட வழக்கை மீண்டும் மறு விசாரணைக்குட்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சம்பவம் குறித்து உரிய முறையில் விசாரணை நடத்தப்படவுள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்திலும், லாகூர் நீதிமன்றத்திலும் மனு செய்திருந்தும் தள்ளுபடி செய்யப்பட்டது. தற்போது பூட்டோ தூக்கிலிடப்பட்ட வழக்கு மீண்டும் மறுவிசாரணைக்குட்படுத்தப்படவுள்ளது. (த)

# கதிர்வீச்சு அளவு ஒரு கோடி மடங்கு என்று பீதி கிளப்புவதா?

## ஜப்பான் அரசு கண்டனம்

புகுஷிமா,மார்ச் 30

ஜப்பானின் புகுஷிமா நகரிலுள்ள அணு மின்சார உற்பத்தி நிலையத்தின் 2ஆவது எண் அணுஉலையிலிருந்து கசிந்த கதிரியக்க அளவு ஒரு கோடி மடங்கு என்று சரியாகக் கணக்கிடாமல் அறிவித்து அனைவரையும் பீதிக்கு உள்ளாக்கலாமா? - என்று அதை நிர்வகிக்கும் டோக்கியோ எலக்ட்ரிக் பவர் கம்பனி (டெப்கோ) என்ற நிறுவனத்தை ஜப்பானிய அரசு கண்டித்திருக்கிறது.

அணு உலைகளைக் குளிரவைக்க ஜப்பானிய அரசு தன்னாலியன்ற அனைத்தையும் செய்து வருகிறது.

இந்த நிலையில் கடல் நீரில் கரைந்த அணுக் கதிர்களால் ஏற்பட்ட கதிர்வீச்சை அளந்த தொழிலாளி ஒருவர் ஆலைப் பகுதியில் நிலவிய கடுமையான அணுக் கதிர் வீச்சு காரணமாக, அவசர அவசரமாக ஒரு முறை மட்டுமே கதிர்வீச்சு அளவுமானியைப் பார்த்துள்ளார். பின்னர் அவர் ஒரு கோடி மடங்குக்கு கதிர்வீச்சு ஏற்பட்டிருக்கிறது என அறிவித்துள்ளார்.

இதனால் உலகம் எங்கும் அதிர்ச்சியும் கவலையும் ஏற்பட்டன. ஜப்பானில் இது மிகப் பெரிய பீதியை ஏற்படுத்தியது. இதனால் சர்வதேச அணுவிசை ஏஜென்சியே செய்வதறியாது திகைத்தது.

இந்த நிலையில் கதிர்வீச்சை மற்றொரு முறை அளவிட ஜப்பானிய அரசு நடவடிக்கை எடுத்தது. அப்போது தான் ஒரு லட்சம் மடங்கு மட்டுமே கதிர்வீச்சு உயர்ந்திருப்பது தெரிந்தது.

இதுவும் மனித குலத்துக்கு ஆபத்துத்தான் என்றாலும், ஒரு கோடி மடங்கு அளவுக்கு இல்லை. அத்துடன் பசுபிக் கடலோரத்தில் வாழும் நாடுகள் சற்றே நிம்மதிப் பெருமூச்சு விடலாம். இந்தக் கதிர்வீச்சும் கடலில் கரைந்து நீர்த்துப் போகும். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம், மார்ச் 30

நீர்வேலி கந்தசுவாமி கோ்யிலின் வருடாந்தப் பெருவிழா இன்று புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும், 17 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (ற-26)

***

தாவடி ஸ்ரீ அம்பலவாணர் வேத விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து 18 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ற-313)

***

ஊரெழு கிழக்கு நாவலம்பதி ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

மறுநாள் 2 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அலங்கார உற் சவம் கொடியேற்றம் ஆரம்பமாகித் தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பரத்திருவிழாவும், மறுநாள் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் 16 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ற-313)

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள **LANKA TILES PLC** காட்சி அறையில் பணியாற்றுவதற்கு இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

1. கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உட்பட க.பொ.த. (சாதாரணதரம்) சித்தி.
2. கணினி அறிவு

மேற்படி பதவிகளில் பணியாற்ற விரும்புவோர் சுயவிவரக்கோவை அடங்கிய விண்ணப்பத்துடன் 02.04.2011 சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் கீழ்வரும் முகவரியில் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

87, நாராயணா கட்டடப் பொருள் வர்த்தகர்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்

## குத்தகை ஏலம் கூறல்

கிளி.அருள்மிகு கந்தசுவாமி ஆலய வயல் காணி குத்தகை ஏலம்கூறல் நாளை [31.03.2011] வியாழக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு இந்த ஆலய மண்டபத்தில் நடைபெறும். ஆலய வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இயங்கும் யாபேரும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டும் என அன்பாக வேண்டுகின்றோம். மேலும் சுவாமி எழுந்தருளும் வாகனங்களும் சில விற்பனைக்குண்டு. இவற்றையும் கலந்து பேசித் தீர்மானிக்கலாம்.

செ.செல்வரத்தினம் — செயலாளர்.
ச.ஸ்ரீகௌரிபாலா — தலைவர்.
(C/577052) (41,19,24)

## பணிப்பெண் தேவை

அரச உத்தியோகத்தர்களின் ஒன்றரை வயது நிரம்பிய பிள்ளையைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் மற்றும் மல்லாகம் பகுதியைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:- 0771541847
(2711) (41,19,20)

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். கச்சேரிக்கு அண்மையில் A9 வீதிக்கு அருகில் இல.90, புங்கங்குளம் வீதியில் 2600 சதுர அடி விஸ்தீரணம் உள்ள 4அறை, 2 குளியல் அறையுடன் கூடிய வாகனதரிப்பிட வசதியுடன் வீடு வாடகைக்கு உண்டு. அரசு/அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0772208417

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் குமாரசாமி
செல்வநாயகம் (கந்தசாமி)

தந்தையாக
12.04.1942

தெய்வமாக
22.03.2009

நெஞ்சிருக்கும் வரை என்றும் மறவோம்
உங்கள் நினைவுகளை.

8ஆம் வட்டாரம்,
மண்டைதீவு. (19,20,42) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து செல்லத்துரை



அல்லைப்பிட்டி, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல. 72/50, பணிக்கர்வளவு, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து செல்லத்துரை நேற்று (29.03.2011) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து- சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்- சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிவமணியின் அன்புக் கணவரும் கலைவாணி(ஜேர்மனி), கலாமோகன் (சுவிஸ்), கலையரசி (லண்டன்), கலைமதி (அஞ்சல் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்), கலைராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் விமலநாதன், செல்வகுமாரி, நாகரூபன், கணேசகுமார் ஆகியோரின் அன்பு மாமனும் பிரசாந்தி - திருநாவலன், சிந்துஜன், விதுஜன், பவித்திரா, அனுருத்திரன், அபிரதன், நர்த்தனன், அனுமிதா, மிதுரன் ஆகியோரின் அன்புப் பேரனும் திருமதி சிவயோகலட்சுமி -மார்க்கண்டு (கனடா) வின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2011) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.72/50, பணிக்கர் ஒழுங்கை,
திருநெல்வேலி.
தொ.பே: 021 222 6589 (40-19-20)(2705)
தகவல்: குடும்பத்தினர்.




## மரண அறிவித்தல்

### கனகசபாபதி புஸ்பராசமணி



மயிலு வீதி, ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபாபதி புஸ்பராசமணி (26.03.2011) சனிக்கிழமை மாலை 7 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - துரையம்மா தம்பதியரின் அன்பு மகளும் கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் அருமை மருமகளும் காலஞ்சென்ற கனகசபாபதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மகாதேவா மற்றும் வாமதேவா (சீராளன்), சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகேஸ்வரி, சறோஜினிதேவி, சிறிகமலநாதன், சூரியகுமார், சூரியதர்சினி, சூரியரஞ்சன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் சத்தியபாமா, சிவயோகம், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மச்சாளும் காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் விஜயலக்சுமி, பத்மாவதி, சத்தியசீலன், கீதா (கனடா) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற தமிழகன் மற்றும் தமிழ் மாறன், அகல்யா (கனடா), தமிழரசி, தமிழழகி, தமிழரசன், தமிழினி, கமலினி, விமலினி, பிரியதர்சினி, கிரிசாந்தினி காலஞ்சென்ற கபிலன் மற்றும் சிந்துஜா, முகிலன், சங்கீதா, விதுசன், யதுசன் காலஞ்சென்ற பிரசன்னா மற்றும் பிந்துஜா, பிருத்திகா, சத்தியபாலன் (கனடா), கேமலதா, லோஜன் (கனடா), மயூரன் (கனடா), கிஷாந் (கனடா), மாலா, பாஸ்கரன் (கனடா), குமணன், நந்தகுமார், பாலசுப் பிரமணியம், உதயரூபன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் திஷானி (கனடா), ரிஷிகா (கனடா), டெஷிகா (கனடா), கவிநயா, லகுசிகன், துஸ்யந்து, தர்சனா, தனுசன், ஷானுஜன், சஸ்மிதா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.03.2011) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மயிலு வீதி,
ஆறுகால்மடம். (19,20,42)
தகவல்: குடும்பத்தினர்.
க.சத்தியசீலன் (மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமை உதவியாளர்களாக 297 பேருக்கு நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

வடமாகாண முகாமை உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்பில் 297 பேருக்கு எதிர்வரும் 4 ஆம் திகதி நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் அன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வில் வைத்து இதற்கான நியமனக் கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு கையளிக்கப்படவுள்ளன.

நியமனக் கடிதங்களைப் பெற்று வழங்கப்பட்ட சேவை நிலையத்தில் கடமைப் பொறுப்பேற்க வேண்டும் என வடமாகாண பொது நிர்வாக செயலகத்தின் உதவிச் செயலாளர் பா.ஜெயகரன் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் 169 பேரும், மன்னார் மாவட்டத்தில் 37 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 22 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 25 பேரும், வவுனியா மாவட்டத்தில் 44 பேரும் நியமனம் பெறுகின்றனர்.

**யாழ்ப்பாண மாவட்டம்**

திருமதி குமுதினி மாறன் - ஊரெழு கிழக்கு, திருமதி கிறிஸ்ரி நிலானி காண்டிபன் - உயரப்புலம், செல்வி இமயவல்லி வேலாயுதபிள்ளை - மிருசுவில் வடக்கு, அருளம்பலம் சுஜந்தன் - மானிப்பாய் வீதி , யாழ்., செல்வி விதுஷா தியாகராஜா- உடுவில், செல்வி சிவரஞ்சினி கணேசமூர்த்தி - புலோலி தெற்கு, செல்வி மாலதி செல்வச்சந்திரன் - மாரீசன்கூடல், கனகராசா ரங்கநாதன் - சாவற் கட்டு, செல்வி ஜனனி சிவப்பிரகாசம் - அல்வாய் கிழக்கு, அரியரட்ணம் தாரங்கன் - ஆசீர்வாதப்பர் வீதி, செல்விரஜீந்தினி இராசையா - சண்டி லிப்பாய், இரத்தினேஸ்வரன் செந்தில் - பெரிய விளான்-

சுப்பிரமணியம் சுபாஸ்கரன் - கொக்குவில் கிழக்கு, செல்வி நித்தியா தேவராசா - புலோலி தெற்கு, முத்துலிங்கம் ஜதீஸ்வரன் - அச்செழு, செல்வி பாமினி நடேசன் - இமையாணன் கிழக்கு, இரவீந்திரசர்மா ஜனார்த்தன் - பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி, விமலேஸ்வரன் கிஷோ - சுதுமலை தெற்கு, கந்தசாமி கனகரட்ணம் அமர்நாத் - நீர்வேலி வடக்கு, சந்திரசேகரம்பிள்ளை திவ்ஜன் - சுதுமலை வடக்கு, கந்தசாமி சிறீதரன் - ஸ்ரான்லி வீதி,யாழ்., சுப்பிரமணியம் சுதாகரன் - கொக்குவில் மேற்கு, திருமதி கஜந்தினி சிவசொரூபன் - கரம்பகம், மிருசுவில், செல்வி கிரிஜா கதிரமலை - உடுவில் கிழக்கு, செல்வி நித்ஜா நடராசா - குமரக்கோட்டம், கோண்டாவில்

செல்வி நிவேதிகா பேரின்பநாயகம் - மாட்டீன் ஒழுங்கை, யாழ்., திருமதி சுபோதினி திஷாகரன் - பறாளாய் வீதி, சுழிபுரம், மதுரநாயகம் சுதாகர் - 4ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை, விஜயநாதன் துவாரகன் - அல்வாய் தெற்கு, செல்வி சியாமினி இராஜரட்ணம் - அச்சுவேலி தெற்கு, செல்வி அகல்யா செகராசா - அரசடி வீதி, கந்தர்மடம், செல்வி பிரதீபா பொன்னுச்சாமி - கைதடி தென் கிழக்கு, திருமதி கார்த்திகா அருட்செல்வம்-பொலிகண்டி கிழக்கு, செல்வி நர்மதா மகேந்திரன் - கரணவாய், செல்வி தாரணி துரைலிங்கம் - பண்ணாகம், செல்வி ஜெலானி விவேகானந்தன் - அல்வாய் கிழக்கு, செல்வி அர்ஜனா கிருஷ்ணானந்தசெல்வம்-வதிரி, சின்னத்தம்பி பத்மநாதன் ஜெயதர்சன் - கரவெட்டி மேற்கு-

செல்வி அனுசா சிவப்பிரகாசம்- அல்வாய் வட மத்தி, திருமதி மதுராம்பிகை நவநீதமோகன் - இராஜேந்திரா வீதி, யாழ்.,செல்வி ஹம்சத்தனி இராசரத்தினம் - ஐந்து சந்தி, யாழ்., சோமசுந்தரம் முத்துக்குமாரு ரூபன் - பெரியமாவடி, சாவகச்சேரி, செல்வி றமணி இரத்தினம் - அல்வாய் மேற்கு, மகேந்திரன் ஜெயதமிதுன் - பெரியப்புலம், மல்லாகம், செல்வி சொரூபினி முருகையா- கோயில் வீதி, யாழ்ப்பாணம், செல்வி ராதிகா இராசையா - நீர்வேலி வடக்கு, செல்வி வஜீனா இரத்தினம் - ஊரெழு மேற்கு, சிறீராம்குமா நதிபரன் - நல்லூர் வடக்கு, மகாலிங்கம் புவனதீபன் - மந்துவில் கிழக்கு, செல்வி தர்சிகா பரம்சோதி - மீசாலை மேற்கு, செல்வி பிரசாந்தி பாலசுப்பிரமணியம் - பொலிகண்டி மேற்கு-

மோகனசுந்தரம் தெய்வேந்திரா - கந்தஉடையார்ஒழுங்கை, பருத்தித்துறை, மாக்கண்டு செல்வதாஸ் - இமையாணன் கிழக்கு, சிதம்பரநாதன் பிரசாத் - கரவெட்டி கிழக்கு, கதிகாமநாதன் அனுஜன் - கோப்பாய் வடக்கு, வேலுப்பிள்ளை தவராசா - நடுத்தெரு, காரை நகர், செல்வி கோபிகா நல்லதம்பி - பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி, கழுகாசலம் வைகுந்தன் - புலோலி வட கிழக்கு, திருமதி தாரணி சாந்திகுமார்- புலோலி மேற்கு, செல்வி இந்துஜா மகாலிங்கம் - பாடசாலை வீதி, தாவடி தெற்கு, நடராசா செந்தூரன் - நவாலி கிழக்கு, செல்வி மயூரி நேசலிங்கம் - உரும்பிராய் கிழக்கு, திருமதி சிவநயனி சர்வேஸ்வரா - அளவெட்டி வடக்கு, செல்வி றாஜீவி சிவகுமாரன் - உடுவில்,

செல்வி சுவாதிகா சுப்பிரமணியம் - சங்கரத்தை, தியாகராஜா பிரணவன் - கிறீன் வீதி, திருகோணமலை, செல்வி ரோகினி விஸ்வலிங்கம் - கோப்பாய் வடக்கு, செல்வி கனிஸ்ரா மேரி பிரான்சிஸ் - தும்பளை, பருத்தித்துறை, செல்வி நிஷாந்தினி பேரின்பம் - அல்வாய் வட மத்தி, இராமச்சந்திரன் நிரூபன் - புலோலி தெற்கு, சின்னத்துரை சுதர்ஜன் - கரவெட்டி கிழக்கு, செல்வி அனுசா சந்திரதாஸ் - சுருவில் வீதி, ஊர்காவற்றுறை, கிருபானந்தன் பிரசாந்தன் - கோண்டாவில், வேலும்மயிலும் சுதன் - வத்திராயன் வடக்கு, தாளையடி, நவரத்தினசிங்கம் மனோகரன் சஞ்ஜிற் - மீசாலை வடக்கு, பரமானந்தன் சிறீ சங்கநாதன் - தும்பளை, பருத்தித்துறை, செல்வி சியாமளா தங்கராஜா - தம்பசிட்டி, பருத்தித்துறை =

கோபாலபிள்ளை குகன் - கந்தர்மடம், திருமதி பௌத்திரா ஜெகதீஸ்வரன் - மாதகல், நடேசபிள்ளை ஜமுகன் - இளவாலை, செல்வி தேவகி செல்வநாதன் - சீனியர் ஒழுங்கை, யாழ்., சிறீபாலன் வேலழகன் - சுதுமலை தெற்கு, செல்வி ஹாயத்திரி சிறிதீபன் - நவாலி வடக்கு, செல்வி மிதுர்ஷியா விமலரட்ணம் - ஒட்டுமடம், செல்வி நதிக்காகுலசபாநாதன் -சாவகச்சேரி வடக்கு, செல்வி சங்கமி நாகமுத்து - கரணவாய் கிழக்கு, திருமதி அனுராதா பிரதீபன் - வியா பாரி மூலை, பருத்தித்துறை, செல்வி துளர்சிகா பாலகுமார்- ஆவரங்கால், செல்வி துளஷி குமாரவேல் - கோவில் வீதி, நல்லூர், மாணிக்கவாசகர் குகரூபன் - லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை, பத்மநாதன் கணநாத் - கொக்குவில் கிழக்கு-

செல்வி கிருத்திகா சிவகுமாரன் - இணுவில் தெற்கு, செல்வி லாவணியா சிவகுமாரன் - அளவெட்டி வடக்கு, செல்வி லுஷாந்தி தேவராசா - மூளாய் வீதி, வட்டுக்கோட்டை, வயிரவநாதன் ஜெனார்த்தனன் குப்பிளான் வடக்கு, செல்வி மிதுலா ஜெயசிங்கம் - மட்டுவில் தெற்கு, மாக்கண்டு சிவசோதி - கரவெட்டி மேற்கு, இராமதாஸ் ரமேஸ் - ஊரணி, வல்வெட்டித்துறை, செல்வி நவகார்த்திகா சண்முகராஜா - புலோலி வடக்கு, செல்வி துஷிதா கமலநாதன் - செம்மணி வீதி, நல்லூர், செல்வி புஸ்பவதனி கந்தசாமி - இராமநாதன் வீதி, யாழ்., செல்வி குணஜா குணரத்தினம்- கோப்பாய் வடக்கு, நாகேந்திரம் சிவரூபன் - நீர்வேலி வடக்கு,

செல்வி கலாரஞ்சினி பத்மநாதன் சிறுப்பிட்டி கிழக்கு, செல்வி அபர்ணா சதாசிவஐயர் - கம்டன் லேன், கொழும்பு செல்லையா கண்ணதாஸ்- சுதுமலை தெற்கு, அழகேசன் பிரதீபன் - சாவகச்சேரி வடக்கு, மகேந்திரன் சரி தாஸ் - மட்டுவில் தெற்கு, செல்வி தர்மினி அனந்தநடராசா - இராசாவின் தோட்டம் வீதி, யாழ்., செல்வி சுபாசினி நாகேந்திரம் - ஆனைப்பந்தி, யாழ். திருமதி ஜேன் ஜெசிக்கா நிமால் ஜெய்கிஷன் - கோயில் வீதி, யாழ்., செல்வி சுரேகாபரமானந்தம் - தொண்டமானாறு, செல்வி யாழினி பரமேஸ்வரன் - சங்கரத்தை, திருமதி சிவகௌரி பிரதாபன் - சீனியர் லேன், யாழ்., செல்வி சிவகாமி இராஜதுரை - ஆவரங்கால், செல்வி தர்ஷிகா இராஜேந்திரன் - புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்-

செல்வி ஜனனி செல்வநாதன்-பண்டாரக்குளம் வீதி, நல்லூர், செல்வி ஷோபிகா சிறீதரன் - கோண்டாவில் கிழக்கு, செல்வி மதுரா துரைராஜசிங்கம் - புத்தூர் கிழக்கு, செல்வி சுகிர்தா உலகநாதன் - பத்தானை, தொல்புரம், செல்வி சிவாஜினி வெள்ளியம்பலம் - சங்கரத்தை, செல்வி சுபாஜினி செல்லத்துரை - நெல்லியடி கிழக்கு, அருந்தவராஜா நித்தியநர்மதன் - தெல்லிப்பழை, திருமதி அபிராமி கலைச்செல்வன் - புகையிரத வீதி, கந்தர்மடம், குணபாலசிங்கம் ராஜ்குமார்- அச்சுவேலி வடக்கு, செல்வி பார்மிளா நடராசா - கோணப்புலம் வீதி, மல்லாகம், செல்வி ஜெயசுதர்ஜினி இராஜதுரை - அச்சுவேலி தெற்கு, செல்வி கௌசிகா இரத்தினசிங்கம் - அரியாலை, யாழ்., செல்வி இலாவண்யா சிவசுப்பிரமணியம் - அளவெட்டி தெற்கு, சிறீஸ்கந்தராசா சுனந்தன் - ஊரெழு கிழக்கு, செல்வி மாலதி மகேந்திரா - மந்துவில் மேற்கு, ஆழ்வாப்பிள்ளை கிருபாகரன் - பொலிகண்டி கிழக்கு, அருஞ்செல்வம் அகிந்தன் - அல்வாய் வடக்கு, செல்வி யோதிகா யோண்சன் - றக்கா ஒழுங்கை சுண்டுக்குளி, திருமதி ஜனார்த்தனி கஜீரன் - கந்தர்மடம், செல்வி ஜெயபுஷ்பா கந்தையா - தெல்லிப்பழை கிழக்கு, கிருபராஜா மதுராஜ் - சுன்னாகம் கிழக்கு, குகானந்தன் நிரஞ்சன் - வண்ணார்பண்ணை, யாழ்., லோகேஸ்வரன் மயூரன் - இருபாலைச்சந்தி, கோப்பாய், செல்வி மதுரா மகேந்திரநாதன் - கட்டுவன் மேற்கு, செல்வி லூஜின்வேணுகா மரிய கிறிஸ்ரி றொபேட் - பழைய பூங்கா வீதி, யாழ்., சச்சிதானந்தன் அரிகரன் - விதானையார் வீதி, சுண்டுக்குளி,

செல்லத்துரை வசீகரன் - பத்தமேனி, அச்சுவேலி, செல்வி விதுஜா சண்முகராசா - உடுவில் தெற்கு, சொர்ணலிங்கம் குணவர்சன் - இணுவில் மேற்கு, செல்வி பிரியாநந்தினி சோதிலிங்கம் - தோணிக்கல், திருமதி பிரசாந்தி இரவீந்திரன் - வேப்பங்குளம், செல்வி ராஜமல்லிகை ஜெகநாதசர்மா - மறவன்புலோ மத்தி, செல்வி சுபாஜினி மகாலிங்கம் - சங்கத்தானை, செல்வி கௌரிஷா ஈஸ்வரநாதன் - நெல்லியடி, திருமதி தாட்சாயினி பார்த்தீபன் - கரணவாய் தெற்கு, செல்வி பிரார்த்தனாதேவி செல்லத்துரை- மாலு சந்தி, கரவெட்டி, பாலசிங்கம் வித்தியானந் - கல்வியங்காடு, செல்வி அனிதா கெங்காதரன் - மூளாய் கிழக்கு, குமாரலிங்கம் ரஜீதன் - புகையிரத நிலைய வீதி, கொக்குவில் கிழக்கு,

செல்வி ராஜி மகேந்திரன் - பருத்தித்துறை வீதி, இருபாலை, செல்வி சசிரேகா நடராசா - நீராவியடி, யாழ்., செல்வி ஐங்கரி சாந்தகுலசிங்கம் - உரும்பிராய் கிழக்கு, சிவநேசன் சிவதீபன் - புன்னாலைக்கட்டுவன் தெற்கு, செல்வி ஹம்ஷிதா சிவபாலன் - கோண்டாவில் மேற்கு, சிவ்சீலன் ராஜீவ் - நீர்வேலி வடக்கு, செல்வி துஷி தர்மராஜா - ஆவரங்கால் மேற்கு, துரைசிங்கம் முகுந்தன் - உரும்பராய் வடக்கு, செல்வி பிரிஜந்தினி உலகநாதன் - பத்தானை, தொல்புரம், தில்லை நாதன் திவாகரன் - வியாபாரிமூலை, பருத்தித்துறை, கிருஷ்னா யோகேந்திரன் - இமையாணன் வடக்கு, செல்வி மேகலா முருகேசு - நெல்லியடி கிழக்கு, இரா சையா கமலதாசன் - கரவெட்டி மேற்கு, செல்வி கவிதாம்பிகை சிவானந்தம் - கரணவாய் மேற்கு-

**மன்னார் மாவட்டம்**

செல்வி றொமிலா அனோஜினி செபமாலை குருஸ் - ஆஸ்பத்திரி வீதி, மன்னார்,அமிர்தலிங்கம் பிரதாப் -புக்குளம் வடக்கு,திருமதிபிறைற்றி ஆஞ்சலின் குரூஸ்ரவீந்திரன்- 8ஆம் வட்டாரம்,பேசாலை, செல்வி றிப்தா முகம் மது அபுபக்கர் எருக்கலம்பிட்டி நாக வில்லு, பாலாவி, அக்பர் தாபித்- ஹீனசனியா புரம், பாலாவி , செல்வி மனோகரி முத்துத்துரை - பெரியமடு, குருசுதாசன் லக்ஸ்மன் - பள்ளக்கமம் முருங்கன்.

செல்வி பபியோலா அல் பிறெட்- காத்தான்குளம், வட்டக்கண்டல், செல்வி டிஷாந்தினி சதாசிவம்-பெரிய பண்டிவிரிச்சான், மடு, சென் பீற்றர் போல் ஆன் வரேஸ் சொய்சா - வங் காலை, செல்வி அருணோசியா மரிய நாயகம் - பாலைக்குளி, அடம்பன், சாள்ஸ் மசனட் றெயினோல்ட் றோச்- பள்ளிமுனை, ஹயா முஹதீன் முகமட் இம்தியாஸ் - மணல் குன்று, புத்தளம்

செல்வி மதுவந்தி மகேந்திரன்- நுணாவில் மத்தி, செல்விஜெசிக்கா பறுனாந்து கிறிஸ்ததாசன் ஆன்- 8ம் வட்டாரம், பேசாலை, செல்வி அமலினி சொப்னா பெரேரா மரியதாஸ் - சென். ஜோசப் வீதி, தாழ்வுப்பாடு, இராம சாமி செல்வலக்ஷன் - வட்டக்கண் டல், செபஸ்தியாம்பிள்ளை நிக்ஷன் - முருங்கன்பிட்டி முருங்கன், செல்வி மலர்விழி சிறினி வாசன்- செல்வ நகர், எழுத்தூர்,றெமிஜிய அன்ரன் பஸ்ரியன் பீரிஸ் - வங்காலை - 6 செல்வின கிறி சாந்தி லோகு சவிரியான் -முத்தரிப் புத்துறை, சிலாபத்துறை, செல்வி அல் போன்சா பிகிறாடோ அன்ரன் பேணாட் -பள்ளி முனை கிழக்கு , முத்து வேல் கிருஸ்ண சேகர்- தலைமன்னார் படப்படி, செல்வி நாகஜோதி ஆண்டி - தலைமன்னார் நிலை யம், செல்வி துஷ்யந்தி பாஸ்கரன் இத்திக் கண்டல், அடம்பன், முகம் மது அன்ஸாமுகம் மது நிஸாத் -உப்புக்குளம் தெற்கு, செல்வி ஆன் சிந்துஜா நிக்கிலாம்பிள்ளை- ஒலிமடு, நனாட்டான், சகாயம் அன்ரன் பெரேரா - தாழ்வுபாடு, செல்வி ஷாந் தினி செல்வநாயகம்- பிரதான வீதி, கீரி, செல்வி கஜனி சிறீ சற்குண நாதன் -மூர்வீதி, செல்வி சிப்றா நஜூறு முல் ஹூதா- நாகவில்லு, பாலாவி, அலஸ் யுட்பிரதீவ்ராஜ்- கள்ளிக்கட்டைக் காடு, உயிலங்குளம், அமீன் ஹாபிஸ் - மறிச்சுக்கட்டி, முத்து முகைதீன் இல் முதீன் - பெரியமடு , பத் ஹுல்லா முகம் மது நிஸ்மி - சிலாபத்துறை, முஹமட் லாபிர் நிஜாத் - உப் புக்குளம்.

**கிளிநொச்சி மாவட்டம்**

கணபதிப்பிள்ளை கஜேந்திரவேள்- கறுக்காய்த்தீவு, பூநகரி, செல்லையா கணபதிப்பிள்ளை சசிகுமார்- ஸ்கந்த புரம், செல்வி தர்ஷா கங்காதரன் - பேராலை, பளை, திருமதி கங்கா தயாகரன் -நெற்புலவு, பூநகரி, சுப்பிரமணியம் மகேந் திரன் - வன்னேரிக் குளம், செல்வி விதூஷா ரமணன், உருத்திர புரம், திருமதி தமிழரசி அஜந்தன் - கட்டடங்கள் திணைக்கள விடுதி , வவுனியா, செல்வி வித்யா ரமணன்- உருத்திர புரம், செல்வி ஜனனி கார்திகேசு - கச்சேரி, யாழ்., திருமால் செட்டியார் பாலச்சந்திரன்-பிரமந்தனாறு, தரு மபுரம் , செல்விதுவாரகா சிவ லிங்கம்- 6ஆ ம் யுனிற், இராமநாதபுரம், தாமோதரம் பிள்ளை தனேஸ் - கோணாவில் கிழக்கு, தர்மலிங்கம் நிசாந்தன் -திருநகர் வடக்கு, தியாகராசா ஜெயதுகிலன்- புகையிரத கட்டடப் பரிசோதகர் அலுவலகம்,வவுனியா, குமாரசாமி கலைதீபன்- கரணவாய் வடக்கு, செல்வி சாரதா பழனியாண்டி - கோண்டாவில் கிழக்கு, இராசநாதன் விமல்ராஜ் - குமரபுரம், பரந்தன், யோண் அன்ரனி றொபின்சன்- பல்லவராயன் கட்டு, திருமதி நிசாந்தி கிருஷ்ணா பிரதீபராஜ் - 5 ஆம் யுனிற், தருமபுரம் , அழகையா நிலோ ஜன் - முகமாலை, செல்லத்துரை விஜயந்தன் - கச்சாய் தெற்கு, செல் வானந்தம் அசந்தன்- செட்டிக் குளம் வீதி, விநாயகபுரம்.

**முல்லைத்தீவு மாவட்டம்**

குணசேகரம் விக்கினேஸ்வரன்- 4 ஆம் வட்டாரம், கோம்பாவில், செல்வி

(26 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரப் போட்டி

நல்லூர் கோட்டமட்ட பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான சித்திரப் போட்டிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக் கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆரம்பப் பிரிவான தரம் 1, 2,3, மாணவர்களுக்கு காலை 9 மணிக்கும், தரம் 4, 5 மாணவர்களுக்கு முற்பகல் 11 மணிக்கும் போட்டிகள் நடைபெறும். சித்திரப் போட்டிக்கான விதிமுறைகளை நல்லூர் கோட்டக்கல்விப் பணிமனையுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளுமாறு நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா அறிவித்துள்ளார். (த-311)

## 'தவறிப்போனவனின் கதை' வெளியீடு

தெணியானின் தவறிப்போனவனின் கதை நாவல் வெளியீட்டு அரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அல்வாய் கலை அகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் நயப்புரைகளை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன், யாழ் பல்கலைக்கழக விரிவுயாளர் இ.இராஜேஸ் கண்ணா ஆசிரியை திருமதி எஸ்.தனேஸ்வரி ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (த-9)

## புதுவருடத்தையொட்டி கடைகள் ஞாயிறு திறக்கப்படும்

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட வணிக நிலையங்கள் அனைத்தும் புதுவருட பண்டிகையை முன்னிட்டு ஏப்ரல் 3,10 ஆகிய திகதிகளில் ஞாயிற்றுக்கிழமைகளில் வியாபாரத்துக்காக திறந்திருக்குமென வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் அறிவித்துள்ளார். (த-200)

## மாணவர் காயம்

கொக்குவில் இந்துக்கல்லூரியில் தண்ணீர் அருந்தச்சென்ற சமயம் மாணவன் தடக்கி விழுந்து தலையில் காயமுற்று மயக்கமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டடார்.

இந்தச் சம்பவம் நேற்று பி.ப. 1.45 மணிக்கு இடம்பெற்றது. சம்பவத்தில் திருநெல்வேலியைச்சேர்ந்தஎஸ். சஜீவன்(வயது-15) என்பவரே காயமடைந்தவர் ஆவார். (ஒ-10-04)

**விற்பனைக்கு**

253 - XXXX இலக்கமுடைய வெள்ளை நிற நீள மொடல் வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு:-0772454993

## முகாமை உதவியாளர்...

(25 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேணி மெற்றில்டா சாள்ஸ் பாலகி ருஷ்ணா , தங்கன்குளம் செட்டிகுளம் , திருமதி கஜீவனா மயூரன் - கொக்குவில் கிழக்கு, முஹம் மது றஷீட் முஹம் மது ஹாரிஸ் - அ ல் - ஹிஜ்ரா மாவத்தை, மதுரங்குளி - நடராசா ஜெயசுதன்- வலதுகரை, முத்துஐயன் கட்டு, திருமதி ஊர்மிளா சிறீகரன் - கைதடி மத்தி, நாகராசா ஜெனனன்-பழம்பாசி, நெடுங்கேணி, திருமதி சுஜிதா முரளிதரன் - 3 ஆவது ஒழுங்கை பண்டாரிக்குளம், செல்வி சுகிதாசினி சுப்பிரமணியம் -3 ஆம் வட்டாரம், முள்ளியவளை, திருமதி தர்ஷா யினி பரணீதரன் - பண்ணாகம் தெற்கு, செல்வி தர்சிகா கனகநாயகம் - கனுக்கேணிமேற்கு, முள்ளியவளை , செல்வி செந்தூரி நாகரத்தினம்- புகையிரத நிலைய வீதி, வைரப்புளியங்குளம் தயா, பரன்சுலஷ்சன் - வசந்தன் குடி யிருப்பு, அண்ணாநகர், திருமதி மேரி பிறில்டா அன்ரன் சுதர்சன் - வண்ணாங்குளம், செல்வி நந்தினி அமிர்தலிங்கம் - தென்னியன்குளம் அ.த.க பாடசாலை, துணுக்காய், செல்வி ஜனனிசெல்வராஜசேகரம் - ஏகாம்பரம் வீதி உப்பு வெளி, செல்வி ஸாகித்யா தெய்வேந்திரன் மணற்குடியிருப்பு, செல்வி அம்புஜா தவராஜா - கம்பஸ் வீதி திருநெல்வேலி, தர்மலிங்கம் சயந்தன்- 7 ஆம் வட்டாரம், குமுளமுனை, மாயவன் பிரபு -ஊப்பு மாவெளி, அளம் பில், செல்வி கவிதா நல்லையா -கோவில் வீதி, குருமன்காடு , சுவாம்பிள்ளை சுபராஜ் - செல்வபுரம், இரத்தினதுரை விஸ்னுநாதன் - கோட்டைகட்டியகுளம், தம்பிராசா திலீபன் - வற்றாப்பளை, செல்வராசா சுகுணன் - கோப்பாய் மத்தி.

### வவுனியா மாவட்டம்

திருமதி சிவமதி விவேகானந்தராசா- கிடாச்சூரி, சாஸ்திரி கூழாங்குளம், செல்வி ஜனனி அன்ரன் விஜேந்திரன்- வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா, செல்வி கலைச்செல்வி திருக்கேதீஸ்வரநாதன் - துடரிக்குளம் வீதி, செட்டி குளம் , கருணாகரன் தர்சன் - ஆலடி வீதி, தோணிக்கல் வவுனியா, ஜுனைட் ராஜா சிறீன்ராஜ் - கரப்பன் காடு -சிவராசா தினேஸ்குமார்- தோணிக்கல் , செல்வி கிருஜா சிவசுப்பிரமணியம் - மன்னார் வீதி, நெளுக்குளம், காந்திராசா காந்தீபன் -மன்னா வீதி, பூவரசங்குளம், கருணாகரன் நிஷாகரன்- தோணிக்கல் , திருமதி விஜித்திரா விஜயசீலன் - அம்மன் கோயில் வீதி , கூமாங்குளம் , செல்வி நிம்ஸியா முஹம்மது இஸ்மாயில்- பட்டகாடு, திருமதி தர்சினி சுதர்சன் - வைரவப் புளியங்குளம், செல்வி டனோஷனா சூரியகுமார்- காங்கேசன்துறை வீதி, யாழ்., செல்வி தாட்ஷாயினி பத்மநாதன் -வைரவப் புளியங்குளம் , சிவசுப்பிரமணியம் ஜயந்த -சமளங்குளம், செல்வி சுகன்யா சிறீகுசன் - 2 ஆம் குறுக்குத் தெரு நவரத்தினம் றமேஸ் - கல்வீரங்குளம் , செல்வி செல்வலூட்ஸ் றோஜானி கயசிந் றவீந்திரன் - திருநாவற்குளம், செல்வி கீர்த்தனா கனகராசா- முதலியா குளம்,செட்டி குளம், கந்தையா சிறீ ஜெயராம் - 5ஆம் யுனிற்வாரிக் குட்டியூர், சிவகுருநாதன் சுரேந்திரகுமார் - மன்னார் வீதி, நெளுக்குளம் , செல்வி சிவகௌரி சிவமைந்தன் -பூந்தோட்டம், கமலேஸ்வரன் ஜெனஷன்- கதிரேசு வீதி, செல்வி-சோபனா சண் முக மாதேவன் - எல்லப்ப மருதங்குளம் , சண்முகநாதன் அருள்மொழி வேந்தன்- உக்குளாங்குளம், திருமதி லௌகிதாசுபசிங்க - மடுகந்த, அரசரத்தினம் பிரஷாந்தன் -பண்டாரிக்குளம்,

ஜாபீர் முகம்மது ஜவாஸ் - வேப்பங்குளம், செல்வி உதயகுமாரி கனகசபை- பூந்தோட்டம், நடராஜா கிருஸ்ணமூர்த்தி -கூமாங்குளம், திருமதி அகல்யா சுரேந்திரன்- மன்னார் வீதி, செல்வி பிரியதர்ஷனா குணரட்ணம்- வேப்பங்குளம், கந்தசாமி கலைச் செல்வன் -பண்டாரிக்குளம் - செல்வி நிருசிகா இரவிசங்கர் - குரு மண்காடு , ரவிச் சந்திரன் அபினேஸ் - வைரவப்புளியங்குளம் - தணிகாசலம் சுஜீபன் -வேப்பங்குளம், செல்வி சக்திகமலம் தருமலிங்கம்-காந்தி நகர் செட்டிகுளம், சுபசிங்ஹ முதியன் சேலாகே நிலுக சுபுன் சுபசிங்ஹ - மடுகந்த சந்தி , திருமதி வீரசேகரகே சஞ்சலா மதுபாஷினி -ஹேமபால மாவத்த, நவகம, செல்வி ஹபு ஆரச்சிகே சசிகலா ஜீவந்தி ஜயவர்தன -3ஆம் கட்டை, மடு கந்த, செல்வி ராஜ பக்ச ராஜகருணா வாசல ரத்னாயக முதியன் சலாகே சுமுது கும்புறேகம - நிகவவ மேற்கு, அதவ டுனுவவ, அமல புத்திக குமாறஹேவகே- அம்பலாங் கொடல்ல, செல்வி கருணாதிலக ருசிரா நிஷானி - மஹா மயிலங்குளம் , சிரான் புத்திக ஜயந்த சேனா நாயக - வெலிங் குளம்.

**குஞ்சுப்பரந்தன் பொறிக்கடவை கண்ணகை அம்மன் ஆலய விழாக்கால வியாபார நிலைய அறிவித்தல்**

பங்குனித்திங்கள் வேள்வி விழாக்காலத்தில் தற்காலிக வியாபார நிலையங்கள், உந்துருளி, ஈருருளி பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கவிரும்புவோர் நாளை மறுதினம் (01.04.2011) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆலயத்தில் நடைபெறும் பகிரங்க ஏலத்தில் கலந்துகொண்டு தமக்குரிய நிலையங்களை உடன் பணம் செலுத்தி உறுதிசெய்துகொள்ளவும்.

04.04.2011 பங்குனித்திங்கள் வேள்வி விழா பகல், இரவு முழுவதும் வழமைபோல் நடைபெற்று செவ்வாய்க்கிழமை நீர்ச்சோறும் வழங்கப்படும். அடியார்கள் அனைவரும் பங்கு பற்றி அன்னையின் அருள்பெறவும்.

பொறிக்கடவை,
குஞ்சுப்பரந்தன்.

ஆலய அறங்காவல் சபையினர்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**


ச.ஜெசிந்தா


சி.சங்கீதா

யாழ். இராமநாதன் கல்லூரியில் க.பொ.த (சா.த) -2010இல் "9 A" சித்தி பெற்ற மாணவர்களான செல்வி.ச.ஜெசிந்தா, சி.சங்கீதா ஆகிய இருவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/இராமநாதன் கல்லூரி மருதனார்மடம்

**பாராட்டி வாழ்த்துகின்றேன்**



உயர் திரு
யோ. ரவீந்திரன்
(SLEAS . II)

எமது யாழ். கல்வி வலயத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளராக (நிர்வாகம்) கடமையாற்றிக்கொண்டிருக்கும்

உயர்திரு யோ. ரவீந்திரன்

அவர்கள் SLEAS . II என்ற தரத்திற்கு பதவி உயர்வுபெற்றமையால் பெருமையடைவதுடன், எமது வலய கல்வி வளர்ச்சிக்கு அயராது கண்டிப்பாகவும், அன்பாகவும் செயற்பட்டு வரும் அவரை மேன்மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

அன்புடன்:
குகன் மாஸ்ரர்.

ஆரவங்கால்/ இடைக்காடு (2725) (35)

**75 ஆவது பிறந்தநாள் வாழ்த்துகள்**

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக



காமாட்ஷி அம்பாள் தேவஸ்தான முன்னாள் தலைவரும் எங்கள் அன்பு மைத்துனரும், மாமாவும் ஆகிய

சரவணமுத்து கந்தசாமி

அவர்கள் தமது 75 ஆவது பிறந்தநாளை இன்று (30.03.2011) வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.
அவரை காமாட்ஷி அம்பாளின் அருள்பெற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
திரு.திருமதி நடராஜா (பஞ்சாட்சரம் குடும்பம்),
திரு.திருமதி சதீஸ் குடும்பம்.
சாருஜன் ஜூவல்ஸ் சிற்றி,
நாச்சிமார் கோயிலடி. யாழ்ப்பாணம்.

**முதலாம் ஆண்டு நினைவலைகள்**

மலர்வு
12
★
01
★
1978



உதிர்வு
30
★
03
★
2010

அமரர் சந்திரவதனன் சாந்தகுமார்
(பொறிவலர், இ.போ.ச, பருத்தித்துறைசாலை)

அன்புக்கும் பண்புக்கும் பாசத்துக்கும்
எடுத்துக்காட்டாக விளங்கிய அன்பு நண்பனே!
காலம் ஓடிச் சென்றாலும் - என்றும்
எங்கள் மனதில் நீ வாழ்ந்துகொண்டிருக்கிறாய்.
நிலைத்துவிட்ட உன் அன்பால்
நினைவிழக்க முடியாமல் - என்றும்
உன் நினைவில் நாம்

சாலை முகாமையாளரும்
பொறியியல் அதிகாரியும்,
அனைத்து ஊழியர்களும்.

இ.போ.ச,
பருத்தித்துறைசாலை. (2699) (35)

உ

**தசாக கிருஹயக்ஞ அழைப்பு**

விகிர்தி வருடம் பங்குனி மாதம் 7ஆம் நாள் 22.03.2011 செவ்வாய்க்கிழமை திருதியை திதியில் சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

அமரர் செ. பொன்னையா ஐயர் இராமச்சந்திரக் குருக்கள்

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

30.03.2011 புதன்கிழமை மு.ப 10.00 மணி - தசாகம்.
31.03.2011 வியாழக்கிழமை ஏகோதிஷ்டம் மாசியம்.
01.04.2011 வெள்ளிக்கிழமை சபிண்டீகரணம்.
02.04.2011 சனிக்கிழமை கிருஹயக்ஞம் (மதிய போசனம்)

மேற்படி நிகழ்வுகளில் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திக்கான பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

ஞானவைரவர் கோயில்,
கம்பளை,
அலவெட்டி.
தொ.பே:0776675082

(ஏ/577051)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.பற்றிக்ஸ், முத்துத்தம்பி வலய மட்டத்தில் சம்பியனாகின

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்.வலயமட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 19,17 வயதுப் பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, முத்துத்தம்பி மகா வித்தியாலயம் ஆகியன சம்பியனாகின.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரியும் முத்துத்தம்பி மகா வித்தியாலயமும் மோதின.

முத்துத்தம்பி மகா வித்தியாலய அணி தன்னை எதிர்த்து விளையாடிய யாழ்.மத்திய கல்லூரி அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரியும் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மோதின.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி தன்னை எதிர்த்து விளையாடிய யாழ். இந்துக் கல்லூரி அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு மூன்றாமிடத்தைத் தனதாக்கியது.

தொடர்ந்து இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் நாவாந்துறை ஆர்.சி. வித்தியாலயமும் மோதின.

ஆட்டம் முடிவடைந்தபோதும் இரு அணிகளும் கோல் எதுவும் பெறாததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி, தோல்வியை நிர்ணயிக்க 5 சமநிலைத் தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

இரண்டு அணியினரும் வழங்கப்பட்ட 5 சமநிலைத் தவிர்ப்பு உதையினை கோலாக்கியதினால் ஆட்டம் மீண்டும் சமநிலையில் முடிவடைந்தது. இரு அணியிலிருந்தும் ஒருவருக்கு மேலும் ஒரு சமநிலை தவிர்ப்பு உதைவழங்கப்பட்டது.

நாவாந்துறை றோ.க. பாடசாலை வீரர் கிடைத்த சமநிலை தவிர்ப்பு உதையை வெளியே அடித்தார். சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரன் கிடைத்த சமநிலைத் தவிர்ப்பு உதையைக் கோலாக்கினார்.

இதனால் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 6:5 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை றோ.க வை வென்று சம்பியனானது. (ஐ-23)

# யாழ்.பிரதேச உதைபந்தாட்டம்; பாடும்மீன், சென்.மேரிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்.பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பாடும் மீன், சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகங்கள் வெற்றி பெற்றன.

துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும் ஜெட் லைனர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய ஜெட் லைனர்ஸ் விளையாட்டுக்கழக அணியை 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றைய ஆட்டத்தில் முஸ்லிம் ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துப் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய முஸ்லிம் ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (ஐ-23)

# சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 7 அணிகள் மாவட்ட மட்டத்துக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 30

பாடசாலைக்கிடையிலான பெருவிளையாட்டுக்களில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 7 அணிகள் மாவட்ட மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளதாகக் கல்லூரியின் அதிபர் குருசாமி விமலன் தெரிவித்தார்.

வலய மட்டத்தில் அண்மையில் நடைபெற்ற போட்டிகளில் வலைப்பந்தாட்டத்தில் 15,17,19 வயதுப் பிரிவு அணியினரும், கரப்பந்தாட்டத்தில் 15,17,19 வயதுப் பிரிவு அணியினரும், பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் 17 வயதுப் பிரிவு அணியினரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட மட்டப் போட்டிகள் அடுத்த மாத நடுப் பகுதியில் நடைபெறும் என்று அவர் தெரிவித்தார். (ஐ-9)

# போட்டி நிரல் தயாரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்.வலய மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுப் போட்டித் தொடர்பான நிரல் தயாரிக்கும் கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வலயக் கல்விப் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

எனவே மேற்படி போட்டிகளில் பங்கு கொள்ள விரும்பும் பாடசாலைகளின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களை இதில் கலந்து கொள்ளுமாறு உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்தயாளன் கேட்டுள்ளார். (த-23)

# பாடசாலைகளிடையே தடகளப் போட்டிகள்

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் பாடசாலை அணிகளுக்கு இடையேயான தடகளப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வருடாந்தம் நடைபெறும் இந்தப் போட்டிகளில் கலந்து கொண்டு தம்மைச் சங்கத்தின் அங்கத்தவர்களாகப் பதிவு செய்த பாடசாலைகளுக்கான விண்ணப்பங்கள் மெய்வன்மைச் சங்கத்தினால் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் பாடசாலைகள் இலங்கைப் பாடசாலைகள் மெய்வன்மைச் சங்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ-26)

## விளையாட்டு விழா

தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பிரதேச தடகளப் போட்டிகள் எதிர்வரும் ஒன்பதாம் பத்தாம் திகதிகளில் வரணி மகா வித்தியாலய மைதானத்தில் பிரதேச செயலர் திருமதி அ.சாந்த சீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்றவுள்ள போட்டியாளர்களுக்கான இலக்கங்கள் அந்தந்த விளையாட்டுக்கழகங்களின் செயலாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளன என பிரதேச உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ஐ-207)


**வீடு வாடகைக்கு**

சியம்மளா மில் ஒழுங்கை, மீசாலை வடக்கில் மீளக் கையளிக்கப்பட்ட வீடு திருத்தி அமைத்து வசதிகளுடன் உண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

தொடர்பு: T.P.No 0772719323, 0771298175

(198) (41.)

**தவறவிடப்பட்டது**

G.C.E A/L ஓகஸ்ட் 2011 பரீட்சை எழுதவுள்ள எனது 930060348V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை மானிப்பாய் பகுதியில் (25.03.2011) அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் விலாசத்தில் ஒப்படைக்கும் படி அன்பாகக் கேட்டுக் கொள்கிறேன். விலாசம்: பெஞ்சோ நரேஷ் இராஜ்குமார், C/O குரு இல்லம், CACM தேவாலயம், மானிப்பாய் (மருதடி முன்பாக)

தொ.பே: 0776526685, 021 300 7887

**இறைச்சிக்கோழி விற்பனைக்கு**

புறொயிலர் இறைச்சிக்கோழி சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் தினமும் காலை 6 தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். விலைக் கழிவு உண்டு

தொடர்பு: மல்ரி பாம் சென்ரர் 61, இராமநாதன் வீதி,கலட்டி.

(2716) (41-19-24)

**இறைச்சிக்கோழி விற்பனைக்கு**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் சுத்தம் செய்தது (1kg 440/=) கல்பேட் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர், தொடர்பு: 021 222 6944

(2713) (41-19-20)

**வாழ்த்துக்கள்**



திரு.S.Q.P மொறாய்ஸ் B.A, Dip.in.Ed, SLPS 2.II

10.03.2011 முதல் எமது பாடசாலையின் அதிபராகக் கடமையேற்றுள்ள திரு S.Q.P மொறாய்ஸ் அவர்கள் மேலும் பல உயர்வுகள் பெற்று சிறப்பான சேவையாற்ற எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரிய நலன்புரி கழகம், யா/சென்மேரிஸ் வித்தியாலயம் (OLR), யாழ்ப்பாணம்.

(40)(2717)

**கொவிசெத**

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 800

சீட்டிழுப்பு திகதி 28.03.2011

எழுத்து: Y

வெற்றி இலக்கங்கள்: 11 16 25 70

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 11,618,984.80 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 20,000/= | 11 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 2,000/= | 352 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000/= | 642 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 100/= | 16898 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரு. 40/= | 9461 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரு. 20/= | 239925 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரு. 20/= | 38093 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 10,194,600.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 12,243,175.20

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

**ஜயோதா**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 737 திகதி 28-03-2011

வெற்றி எண்கள்: 05 15 24 51 X

ஜக்பொட் பரிசு ரூ. 13,754,500/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 13,754,500/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 21 | 2,000/= | 42,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 437 | 1,000/= | 437,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 699 | 1,000/= | 699,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 18223 | 60/= | 1,093,380/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8611 | 40/= | 344,440/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 216176 | 20/= | 4,323,520/= |
| | | மொத்தம் ரு. | 7,739,340/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 600934580-3-13 |
| களுத்துறை | 600926137-5-45 |
| அநுராதபுரம் | 600935102-1-31 |
| கம்பஹா | 600937216-5-25 |
| பதுளை | 600927381-1-41 |
| மாத்தளை | 600923608-9-39 |
| திருகோணமலை | 600923647-9-29 |
| கேகாலை | 600933826-5-05 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,139,340 /=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூ. 14,342,560 /=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 மார்ச் 31 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10

வளமான வாழ்விற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## திருமதி சபாபதி பாக்கியம்

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் கல்முனையை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி பாக்கியம் (22.03.2011)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு - பொன்னம்மா தம்பதியரின் மகளும் இராசரட்ணம் (அராலி) காலஞ்சென்ற பத்மாவதி, சண்முகநாதன் மற்றும் தேவராசா (கனடா), யோகாம்பிகை (கல்முனை), சிவசோதி (புள்ளிவிபரவியலாளர், யாழ்.போதனா வைத்தியசாலை), காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், சரோஜாதேவி (அராலி), காலஞ்சென்ற அனந்தசேனன் மற்றும் இராசமணி (கொழும்பு), பவி (கனடா) விஜயாகனகசபை (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை, கல்முனை), கேமலா (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்.பி.உ.உ.ஆணையாளர் அலுவலகம்) கிருபநாயகி (கல்முனை) ஆகியோரின் அன்பு மாமியாரும், அன்பழகன் (அராலி), சத்தியவதி (இத்தாலி), ஜெகசோதி, சுசித்திரா, யசிந்தா, கிரேப்சன், டிலக்சன் (கொழும்பு), யதுர்சன் (கனடா), யாழினி (கனடா), சர்மிளா இராஜேஸ் (முகாமைத்துவ உதவியாளர், சுகாதாரத் திணைக்களம், கல்முனை), பிரதீபன் (கொழும்பு), பிரதீபா, சிந்துஜன், பிரசாந் (யாழ்.இந்துக்கல்லூரி மாணவர்கள்), சிவதர்சன் (லங்கா புத்திர வங்கி, மட்டக்களப்பு), சிவதர்சிகா (கல்முனை), ஆகியோரின் பேர்த்தியும், அட்சயா, தனுஸ்ஹரி, இராகவி, பிரதிக்ஷா, ஜெதுஷா, நிஷானி, அமிர்தா, அட்சியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (23.03.2011) புதன்கிழமை கல்முனையில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வநாயகம் வீதி,
கோண்டாவில் கிழக்கு. (C/577059) (37)

தகவல்:
ச.சிவசோதி (மகன், புள்ளிவிபரவியலாளர்,
யாழ்.போதனா வைத்தியசாலை)

## கணேசு ஸ்ரீகாந்தா (ஸ்ரீ)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் கணேசு (ஐயா) ஸ்ரீகாந்தா 27.03.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கணேசு - சரஸ்வதி மற்றும் தனபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகனும், கிருஷ்ணகுமாரியின் (வசந்தி) அன்புக் கணவரும், சரசாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான லோகநாதன்- நாகேஸ்வரி தம்பதியரின் மூத்த மருமகனும், கனகலிங்கம் கனகேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரி (ஞானம்), மற்றும் கமலேஸ்வரன் (கண்ணன்), கமலேஸ்வரி, சசிகலா, தயாபரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிருஷ்ணதாசன், கிருஷ்ண குமார், கிருஷ்ணவதனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் நவநீதன் (நவம்), பிரதீபன் (தீபன்), கோகுலன் (கோபி), மோகனமுரளி (முரளி), காலஞ்சென்ற நர்மதா மற்றும் கபிலேசன் (கபில்), தர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் சமாதிக் கிரியைகள் இன்று (30.03.2011) புதன் கிழமை மு.ப 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சமாதிக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இணுவில். (2732)(41,20,25)

தகவல்:
குடும்பத்தினர்.

**Computer Express**
Institute of Information Technology
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
0774907444, 021 222 8250, 0777222422

விசேட கட்டணக்கழிவுடன் புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 1000/= 3 Months | Diploma in Desktop Publishing 1000/= 4 Months | Diploma in Web Page Designing 1000/= 3 Months |
| Diploma in Graphic Designing 1000/= 4 Months | Diploma in Hardware Engineering 1000/= 3 Months | Diploma in Auto CAD 1000/= 3 Months |
| Diploma in Computer Science 1000/= 4 Months | Honors Diploma in Computer Science 1000/= 3 Months | Advances Courses: Diploma in Video Editing 4Months 1000/-; Diploma in Multimedia 4Months 1000/- |

25/03/2011 இது முதல்

Batch I - 30.03.2011-9AM or 3PM
Batch II - 01.04.2011- 9AM or 3PM
Batch III - 02.04.2011-9AM or 2PM
Batch IV - 03.04.2011-9AM or 2PM

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Graphic Designing (Monday to Friday 8Am to 3.30Pm)
Diploma in Video Editing
Diploma in Acc.Package.
Course Fee 1000/=
மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...

கம்பனிக்கணக்குகளை உள்ளடக்கி முன்னணி Accounting Software களினூடாக
Diploma in Computerized Accounting
ACCPAC + Quick Book + MYOB
Tally Accounting Package
Tally Date மாற்றலாமா?? முடியும்.....
Course Fee - 1000/=
ஆரம்பம் : 02-04-2011 03-04-2011 2PM

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 19.02.1958
விண்ணில்: 09.04.2010



அமரர் இராமசாமி விமலாதேவி

திதி: ஏகாதசி
30.03.2011

பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி. (48)

குடும்பத்தினர்.

## சாவகச்சேரி ஆஸ்பத்திரி டச்சுவீதி வாசல் திறப்பு

தென்மராட்சி, மார்ச் 30

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வரும் கிளினிக் நோயாளர்களின் நலன்கருதி சனிக்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் வைத்தியசாலை வளாகத்தில் உள்ள டச்சு வீதி வாசல் திறந்து விடப்படுகிறது.

வைத்தியசாலைக்கு மேலும் ஒரு பாதுகாப்பு சேவை உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளதை அடுத்து டச்சு வீதியில் உள்ள வாசல் கிளினிக் தினங்களில் திறந்துவிடப்படுகிறது.

சனிக்கிழமை நீரிழிவு கிளினிக்கும் செவ்வாய்க்கிழமை பொது மருத்துவக் கிளினிக்கும் நடைபெறுவதால் இக் கிளினிக்குகளுக்கு வரும் பெருமளவு நோயாளர்களுக்காக இக் கடவை திறந்து விடப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-207)

## சாரதியைத் துரத்தி பிடித்தனர் பொலிஸார்

தென்மராட்சி, மார்ச் 30

பொலிஸ் சோதனைச் சாவடியில் வாகனத்தை நிறுத்துமாறு பொலிஸார் சமிக்ஞை செய்தபோதிலும் நிறுத்தாமல் சென்ற வாகனச் சாரதியை துரத்திப் பிடித்தனர்.

இந் நபரை சோதனையிட்ட போது சாரதிய அனுமதிப்பத்திரம், காப்புறுதி, வாகனவரி ஆகிய ஆவணங்கள் இல்லாமை கண்டு பிடிக்கப்பட்டது.

இவருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். விசாரணையின்போது இந் நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத்தவறின் மூன்றுமாத சாதாரணச் சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-27)

**வீடு வாடகைக்குத் தேவை**
யாழ். நகரின் பிரதான வீதி, ஆஸ்பத்திரி வீதி, கோயில் வீதி, முதலாம், இரண்டாம், மூன்றாம் குறுக்குத் தெரு 2 -3 அறைகளுடன் கூடிய வீடு/ANNEX ஒரு சிறிய நிறுவனத்துக்கு வாடகைக்குத் தேவை
தொடர்புகளுக்கு: 0777767818

**வாடகைக்குத் தேவை**
நிறுவனம் ஒன்றுக்கு யாழ்.நகருக்குள் வீடு அல்லது கடைதேவை. 1KM தூரத்தில் இருத்தல் வேண்டும். வாடகை 15,000 உட்படல்.
தொடர்பு:-0773427843

**வீடு வாடகைக்குண்டு**
5 மருத்துவப் பிரிவு மாணவிகளுக்கு அல்லது பயிற்சி ஆசிரியைகளுக்கு சிறிய வீடு வாடகைக்கு உண்டு. பலாலி வீதியிலிருந்து 300 மீற்றர் தொலைவில் திருநெல்வேலி.
T.P-0213215792, 0774583278

**அபூர்வ ஜோதிடம்**
நீண்ட காலம் தீர்க்க முடியாத ஆஸ்மா, எலும்புகளை பாதிக்கசெய்யும் வாதம், மகப்பேற்றுநோய் குணமாக்கல்.
சனி, ஞாயிறு 8.30-2.pm
உயரப்புல பிள்ளையார் கோயிலடி, தபால் பெட்டி லேன், ஆனைக்கோட்டை.

**உடனடி வேலை வாய்ப்பு**
யாழ்ப்பாணத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் D.M.I.Multi National Companyக்கு முகாமைத்துவ பயிற்சிக்காக பின்வருவோர் தேவை.
Supervisor, Asst.Manager, Manager
(12 பேர் மட்டும்)
6 மாதகாலப் பயிற்சியும் இதன்போது 15,000/= 25,000/= வரை பெறமுடியும். O/L, A/L தகைமையுடையோர் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதி இலவசம்.
மேலதிக விவரங்களுக்கு - 0776219536

**காணி விற்பனைக்கு**
கொழும்புத்துறை துண்டிவீதியில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நிறுவனங்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
தொடர்பு : 0778588994 (2744) (37)

**கோழிக்குஞ்சு விற்பனைக்கு**
35 நாள்களில் 2Kg இற்கு வளரக்கூடிய மிட்லண்ட் (கிறிஸ்போ) இன கோழிக்குஞ்சுகளை 02.04.2011 அன்று 80ரூபாவுக்கு எம் [illegible] பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு : [illegible]
343, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல - 0212223353, 0212228495

## மரம் நடுகை தொடர்பான இறுவட்டு

தென்மராட்சி, மார்ச் 30

ஜனாதிபதியின் மரம் நடுகைத் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு மரம் வளர்ப்பது தொடர்பாக அறிவுறுத்தல்கள் வழங்குவதற்கான இறுவட்டு தென்மராட்சி கல்வி வலயத்தினால் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளின் அதிபர்கள் வலயக் கல்வி அலுவலகத் திட்டமிடல் பிரிவில் உரிய இறுவட்டினைப் பெற்று அனைத்து மாணவர்களுக்கும் காண்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (த-207)

# மரண அறிவித்தல்

## முத்துக்குமாரு இராசேந்திரா

(இளைப்பாறிய எழுதுநர்)



கோள்ளை வளவு, தும்பளை மேற்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மு.இராசேந்திரா நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு - இராசம்மா தம்பதியரின் மகனும், திருமதி லோகராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் திருமதி தி.மனோன்மணி (கனடா), திருமதி ச.கமலாவதி, காலஞ் சென்ற ஸ்ரீமதிலீலாவதி மற்றும் மாணிக்கவாசகர் ஆகியோரது பாசமிகு சகோதரனும், திருமதி ஸ்ரீ பிறேமா (தாதிய உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை, மந்திகை), இ.லோகேந்திரா (எழுதுநர் - பிரதேச செயலகம், கோப்பாய்), இ.பாலேந்திரா (பொறியியலாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு அதிகாரசபை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீரங்கநாதன், கலைச்செல்வி (ஆசிரியை, கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்), வேளினி (உதவிக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி வலயம்), ஆகியோரின் மாமனாரும், கணதீபன், கார்த்தீபன், ஜனனி, தமிழினி, ஹேஜனி, பாலவேணுஜன் ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (30.03.2011) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை மூர்க்கம் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளை மேற்கு,
பருத்தித்துறை. (சி/577065) (37)

தகவல்:
இ.லோகேந்திரா (மகன்)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி அந்தோனி திரேசம்மா



வேலணை பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக பணிபுரியும் திரு.அ.வேதநாயகம் அவர்களின் அன்புத் தாய் திருமதி அந்தோனி திரேசம்மா (29.03.2011) நேற்று செவ்வாய்க்கிழமை காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், வேலணை.

# மரண அறிவித்தல்

## செல்லத்தம்பி வீரசிங்கம்



நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி வீரசிங்கம் (29.03.2011) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - இராமாசிப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சௌந்தரநாயகி தம்பதியரின் மருமகனும், நல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற புஸ்பவதி மற்றும் கோபாலபிள்ளை, நல்லம்மா, காலஞ்சென்ற அமரசிங்கம் மற்றும் பரநிருபசிங்கம், குலசிங்கம், பரிமளாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகலிங்கம், காலஞ்சென்றவர்களான மிதிலாவதி, தேவராசா மற்றும் புவனதாசன், சிறிஸ்கந்தராஜா ஆகியோரின் மைத்துனரும், தேவிகா காலஞ்சென்ற உதயகுமார் (ஆசிரியர், யா/புனித அந்தோனியார் கல்லூரி) மற்றும் மேனகா, ஜெயக்குமார் (ஆசிரியர் யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்), வேணுகா (கனடா), விஜயகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேஸ்வரன் (உரிமையாளர், கணேஸ்வரன் அன்ட்சன்ஸ், ஊர்காவற்றுறை), ஜெயலட்சுமி (விரிவுரையாளர், கோப்பாய் கல்வியியற் கல்லூரி) காலஞ்சென்ற சுரேந்திரன் மற்றும் பேரின்பநாயகி, சந்திரநேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தனேசன், தணிகைவாசன், கிரிசாந், பார்த்தீபன், கோபிஸா, சாகித்தியன், கௌசிகா, சஜீகன், சானுஜா, லக்ஸா, சித்தேஸ் (கனடா), சிபி (கனடா), சுஜீவன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2011) புதன் கிழமை மு.ப. 10 மணியளவில் கீழ்வரும் முகவரியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No. 95 "காந்தினி"
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
நல்லம்மா
(மனைவி, பிள்ளைகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாவசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவு வீழ்ச்சியடைந்திருப்பதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன மீன் விலை தற்பொழுது குறைந்துள்ளது எனத் தெரிவித்தார். எவ்வாறாயினும், இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின் விலை கடந்த டிசெம்பர் மாதத்திலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டு இருக்கின்றது.

மக்களிடையே கோதுமை மா பாவனை குறைவடைந்து அதற்குப் பதிலாக புரதச்சத்துடனான உணவுப் பொருள்களின் பாவனை உயர்வடைந்துள்ளது.

எவ்வாறாயினும் மக்களினதும் பாடசாலைப் பிள்ளைகளினதும் போக்கை உயர்த்துவதற்கு நிபுணர்கள் குழுவின் அறிவைப் பெற்று வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்கும்படி ஜனாதிபதி இங்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

மேலும் காய்கறிகளை எடுத்துச் செல்வதற்கு பிளாஸ்டிக் கொள்கலன்களைப் பயன்படுத்துவதை ஒழுங்கு முறைப்படுத்தும்படி ஜனாதிபதி சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

அதன் பிரகாரம் யாழ்ப்பாணம், நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலிருந்து கொண்டு வரப்படுகின்ற அனைத்து காய்கறிகளையும் பிளாஸ்டிக் கொள்கலன்களில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி இதன்போது ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

## கல்வியியற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனமாகத் தாக்கினர். பதற்றமடைந்த நாம் அங்கிருந்து சிதறி ஓடினோம்'' என்றார் பாதிக்கப்பட்ட மாணவர் ஒருவர்.

தாக்குதலால் விரக்தியடைந்த முதலாமாண்டு மாணவர் ஒருவர் கல்லூரியின் பின்பக்கச் சுவர் ஏறிக் குதித்துத் தப்பியோட முயற்சித்துள்ளார். தகவல் தெரிய வரவே அந்த மாணவனை பீடாதிபதியும் ஏனைய அலுவலர்களும் மடக்கிப் பிடித்துள்ளனர்.

அப்போது, மூத்த மாணவர்கள் தாக்கியதால் விடுதியை விட்டுத் தப்பிச் செல்லத் தான் முயற்சித்தார் என்று அந்த மாணவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இதை அடுத்து உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. மாணவர்கள் தாக்கப்பட்டனர் என்று தெரிய வந்ததை அடுத்து பீடாதிபதி கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தார்.

நள்ளிரவில் கல்லூரி விடுதிக்கு வந்த பொலிஸார் பாதிக்கப்பட்ட 11 மாணவர்களிடமும் விசாரணைகளை நடத்தினர். பொலிஸாரின் அறிவுறுத்தலின் பேரில் மாணவர்கள் அனைவரும் நேற்று யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து தேசிய கல்வியியற் கல்லூரிகளின் பிரதம ஆணையாளர் திஸ்ஸ கேகல விதானகேவுக்குத் தான் அறிவித்தார் என்று பீடாதிபதி தெரிவித்தார்.

பகிடிவதையில் ஈடுபட்ட அனைத்து மாணவர்களுக்கு எதிராகவும் உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பிரதம ஆணையாளர் உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் அடையாளம் காட்டியதன் அடிப்படையில் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் 15 பேர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் யாழ். நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அங்கு விசாரணை நடத்திய நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா இரண்டாம் ஆண்டு மாணவர்களை 15 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்வதற்கு அனுமதியளித்தார். ஆனால், அவர்களைப் பிணையெடுக்க எவரும் இல்லாத காரணத்தால் இரண்டு நாள்கள் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

அரசகுமார் சபேசன், சதீஸ்குமார், சூரியமூர்த்தி, ருத்ஸிவி, ரதீசன், வாரீஸ், சஞ்சித், தர்சிகன், பிரதீஸன், றொபின்சன், செந்தாளன், அசோக் குமார், விவகரன், விமல்ராஜ் ஆகிய சந்தேகநபர்களே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவர்களில் பலர் அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

சம்பவத்தை அடுத்து கல்வியியற் கல்லூரியைச் சுற்றிப் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. (உ-9)


## மரண அறிவித்தல்



### செல்வன் இரத்தினம் கிருபானந்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் இரத்தினம் கிருபானந் நேற்று (29.03.2011) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் பங்கயவல்லி தம்பதியரின் அன்பு மகனும் ரதிகலா (செல்வி), தேவானந்(ஜேர்மனி), அனுஷா (சோபனா), ஸ்ரீசங்கர்(டோகா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அனுராஜ் (ரூலிங்ஸ் Pvt. Ltd.) திருவதனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஐஸ்வினி(வேம்படி மகளிர் கல்லூரி), கேஷினி, அபிஷினி (யாழ்.புனித ஜோன்.பொஸ்கோ) ஆகியோரின் பாசமிகு மாமனும் சிவனயா(ஜேர்மனி) அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2011) புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

22/4A, விநாயைார் வீதி, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ப.அனுராஜ்(மைத்துனர்)

(2754)


## புதிய துணைவேந் ...

ஜனாதிபதி செயலகத்தால் பல்கலைக் கழகப் பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

யாழ்.பல்கலைக் கழகத்தின் புதிய துணைவேந்தரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் கடந்த வருடம் நவம்பர் மாதம் 27ஆம் திகதி நடைபெற்றது. பேரவை உறுப்பினர்களின் தெரிவுப்படி பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் 14 வாக்குகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றிருந்தார். பேராசிரியர் ரட்ணஜீவன் கூல், தற்போதைய பதில் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் ஆகியோர் தலா 9 வாக்குகளைப் பெற்று அடுத்த நிலையில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

நடைமுறையின் பிரகாரம் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் பெயர்களை பல்கலைக்கழகப் பேரவை பரிந்துரைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் சிபாரிசுக்காக அனுப்பி வைத்தது. பல் கலைக்கழக

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானியங்கள் ஆணைக் குழுவின் பரிந்துரையின் பின்னர் துணைவேந்தர் ஒருவரை ஜனாதிபதியே நியமிப்பார். மாதக் கணக்கில் இந்நியமனம் இடம்பெறாமல் இழுபறிப் பட்டு வந்தது. அதன் பின் கடந்த வருட இறுதியில் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் பதில் துணைவேந்தராக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் நியமிக்கப்பட்டிருந்தார்.

வசந்தி அரசரட்ணம் : கல்வித்துறை வரலாறு
1984 : விரிவுரையாளராக இணைவு
1990 : துறைத் தலைவர்
1996 : இணைப் பேராசிரியர்
1998 : பேராசிரியர்
2000 - 03 : முதலாவது பெண் மருத்துவ பீடாதிபதி
2007 : முதுநிலை பேராசிரியர்
2011: துணைவேந்தர்.

(உ-319)

## உரிமைகளைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கடந்த 30 வருடகால கொடூர யுத்தத்தால் அழிந்துபோன எமது மக்களின் வாழ்வியல் உரிமைகளை மீண்டும் வென்றெடுக்க நாம் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை என்ற தளத்தில் உறுதியாகவுள்ளோம்.

அதன் அடிப்படையிலேயே கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழீழ மக்கள் விடுதலை இயக்கம்(புளொட்), தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் ஒன்றிணைந்து போட்டியிட்டன. நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் 12 பிரதேச சபைக ளைக் கைப்பற்றி தமிழ் மக்களின் ஒன்று பட்ட பலத்தை தென்னிலங்கைக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

தமிழ் மக்களின் தாயக பூர்வீக நிலங்கள் நாளுக்கு நாள் அபகரிக்கப்படுகின்றன. சிங்கள, பௌத்தமய ஆதிக்கம் படிப்படியாக மேலோங்கி வருகின்றது. இது ஓர் ஆபத்தான சமிக்ஞை ஆகும். இது ஆபத்தான விடயம் என்று தெரிந்தும் கூட அரசுடன் இணைந்து செயற்படும் அரசியல் தலைமைகள் வாய்மூடி மௌனிகளாகவே உள்ளனர்.

இதற்குப் பல்வேறுபட்ட காரணங்கள் உள்ளன என்பதை எமது மக்கள் நன்கு அறிவார்கள். கடந்தகாலத் தேர்தல்களில் எமது ஒற்றுமை சிதைக்கப்பட்டமை காரணமாக எமது மக்கள் இன்று பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

வடக்கு -கிழக்கில் தமிழ்ப் பிரதசங்களில் அபிவிருத்தி, புனர்வாழ்வு என்பவை பூச்சியமாகவே உள்ளன. ஆனால் தேவையற்ற பகுதிகளில் தேவைக்கு அதிகமான அபிவிருத்தி நடவடிக்கை கள் பல்வேறு அமைச்சர்களினால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எமது மக்களின் அத்தியாவசிய அபிவிருத்திகள் குறித்து நாம் அரச தரப்பினரின் நேரடிக் கவனத்துக்குப் பல தடவைகள் கொண்டுவந்த போதிலும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே காணப்பட்டன. எமது மக்களின் எதிர்கால வாழ்வியல் நலன்களை எமது மக்கள் பிரதிநிதிகள் கண்காணிப்பில் முன்னெடுக்க வேண்டும் என்பதையே சர்வதேச சமூகத்துக்கும் அரசுக்கும் உறுதியாகத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

அந்த அடிப்படையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுகளில் ஈடுபட்டு வருகிறோம். அத்துடன் சர்வதேச சமூகத்தின் கருத்துகளுக்கு முன்னுரிமை அளிப்பது எமது கௌரவமான அரசியல் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றோம்.

எனவே எந்த ஒரு சலுகைக்கும் அடிபணிந்து போகாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கான தமது அரசியல் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும்.

- இப்படி செல்வம் அடைக்கலநாதனின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ-சி)

## வீடுகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்படவில்லை.

மீண்டும் இப்பிரச்சினை தொடர்பாக ஏனைய ஆயர்களுடன் இணைந்து ஜனாதிபதியை நேரில் சந்தித்துப் பேசிய போது, அம் மக்களுக்கு எல்லா வசதியும் செய்து கொடுக்கப் பட்டுள்ளது. இது தொடர்பாக அரச தரப்பினர் திருச்சபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வர் எனக் கூறினார். இதுவரை அரச தரப்பினர் எவரும் என்னிடம் பேசவில்லை.இந்த நாடு எங்களுடைய நாடு. நாம் எமது சொந்த வாழ் விடங்களில் வாழ்வதற்கு உரிமை இல்லையா என அக் கிராம மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். அடிப்படை வசதிகள் எது வும் இல்லாத நிலையில் அவதியுற்று என்னிடம் வந்தபோதே மன்னார் மேற்கில் தரவன் கோட்டை என்ற இடத்தில் அவர்கள் வசிப்பதற்கு காணிகளை ஒதுக்கிக் கொடுத்துள்ளேன்.

நாம் அரசிடம் எங்களுக்கு காணிகளைத் தாருங்கள்; வீடுகளைக் கட்டித் தாருங்கள் என்று வற்புறுத்தவில்லை. அவர்களது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் இடையூறு விளைவிக்கவில்லை.ஆனால், எங்களின் சொந்த நிலங்களைப் பறித்துவிட்டு எங்களுக்குத் தருவதாகக் கூறியவற்றை நாம் கேட்கின்றோம்.

இந்த மக்களுக்குரிய வாழ்விட வசதிகள், தொழில் வசதிகள் கிடைக்காவிடில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தொடர நாம் தயாராக உள்ளோம்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீ அணையும் வரை யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு அங்கு தலைகாட்டவே இல்லை.

தீ விபத்து ஏற்பட்டவுடன் யாழ். மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவைத் தொடர்புகொண்ட போது '' தீயணைப்பு வாகனம் இல்லை. அது திருத்த வேலைகளுக்காகச் சென்றுள்ளது. சாரதியும் இல்லை. மாற்று ஏற்பாடுகளுக்காகக் காத்திருக்கின்றோம்'' என்று தெரிவிக்கப்பட்டதாக அங்கு கூடியிருந்தவர்கள் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட கடைக்காரர்களும் இதனை உறுதிப்படுத்தினர். இந்தச் சம்பவம் மின் ஒழுக்கால் ஏற்பட்டது அல்ல; இது திட்டமிட்ட ஒரு அக்கிரமச் செயல் என்றார் பாதிக்கப்பட்ட கடைக்காரர்களில் ஒருவர்.

நேற்றைய தீ விபத்து சம்பவம் தொடர்காக மேலும் தெரிய வருவதாவது:-

கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்த சமயத்தில் திடீரெனத் தீப்பற்றிக் கொண்டது.

விரைவாக தீ பரவியதால் மூன்று கடைகள் எரிந்து நாசமாகின.தீப்பிழம்புகள் வானைத் தொடுவது போன்று மேல் எழுந்தன. அவ்விடத்தை நெருங்கமுடியாதளவுக்கு அங்கு பெரும் தீச்சுவாலைகள் பரந்து விரிந்து அச்சமூட்டின.

சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த இராணுவத்தினர் பெரும் பிரயத்தனத்துடன் தீயை அணைக்கப் பாடுபட்டனர். அவர்களுடன் பொதுமக்களும் கூடி தீயை அணைத்தனர்.

அருகில் உள்ள புல்லுக்குளம் மற்றும் கழிவு வாய்க்கால் என்பவற்றில் இருந்து கையால் அகப்பட்ட பாத்திரங்களில் தண்ணீர் எடுத்து வந்து வீசினர்.

உடனடியாக சுற்றுச் சூழலில் இருந்து வரவழைக்கப்பட்ட இராணுவத்தினரும் தீயை அணைப்பதற்கு நீண்டநேரம் போராடினர். அவர்களின் முயற்சி வீணாகவில்லை. சுமார் ஒரு மணி நேரம் பொதுமக்களுடன் இணைந்து சளைக்காமல் நின்று ஒருவாறு தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதற்கிடையில் எரிந்து அழிந்த கடை ஒன்றின் உரிமையாளர் அழுது புலம்பியவாறு இது மின் ஒழுக்கால் ஏற்பட்ட சம்பவம் அல்ல நாங்கள் கடையை மூடிச் செல்லும்போது விளக்கும் கூட எரியவிடுவதில்லை. எனவே எவரோ திட்டமிட்டு இந்தப் படுபாதகச் செயலைப் புரிந்துள்ளனர் - என்றார்.

சம்பவ இடத்துக்கு யாழ். நகரப் பொலிஸார் வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (ஒ-10-14-26)


## கண்ணீர் அஞ்சலி



கௌரி பான்சி ஹவுஸின் உரிமையாளர்

### செல்லையா இராமேஸ்வரன்

அவர்களின் திடீர்மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கொழும்பு சென்ரர் - CC - கொழும்பு,
ஸ்ரீ குகன் பான்சி,கமல் பான்சி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவும் சாத்தியம் உள்ளது.

## சர்வதேச றோட்டறிக் கழகத்தால் 5 கோடி ரூபா செலவில் கட்டப்பட்ட

# குடாநாட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய குடத்தனை கரையூர் றோ.த.க. பாடசாலை திறப்பு

## நேற்று வடமராட்சி கிழக்கில் கோலாகல நிகழ்வு

வடமராட்சி, மார்ச் 30

ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் முற்றாகச் சேதமடைந்த குடத்தனை கரையூர் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கென புதிதாக 5 கோடி ரூபா செலவில் சர்வதேச றோட்டறிக் கழகத்தினால் கட்டி முடிக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று மு.ப. 10.30 மணிக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

11 வகுப்பறைகள், கணினிக் கூடம், ஆய்வு கூடம், பிரார்த்தனை மண்டபம் மற்றும் பெரிய மண்டபம் போன்ற அனைத்து வசதிகளும் கொண்ட இந்தப் பாடசாலை திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சர்வதேச றோட்டறிக் கழகத் தலைவர் றோட்டேரியன் றே கிளின்ஜின்ஸ்மித் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட மாவட்ட கவர்னர் றோட்டேரியன் இம்தியாஸ் இஸ்மாயில், கொழும்பு வடக்கு றோட்டறிக் கழகத் தலைவர் றோட்டேரியன் டுலிப் ஜெயமகா, சர்வதேச றோட்டறிக் கழக இயக்குநர் றோட்டேரியன் கே.ஆர்.ரவீந்திரன் -

றோட்டறிக் கழக யாழ்.மாவட்ட முன்னாள் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், வட மாகாண கல்வித் திணைக்களச் செயலாளர், இளங்கோவன், யாழ்.மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் மற்றும் றோட்டறிக் கழக நிர்வாக உறுப்பினர்கள் போன்றோர் பாடசாலை நுழைவாயிலில் இருந்து வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா, அதிபர் எஸ்.தர்மரட்ணம் ஆகியோரால் மாலை அணிவித்து 'பாண்ட்' வாத்தியம் இசைத்து பாடசாலை வாசல்வரை அழைத்து வரப்பட்டனர்.

வாசலை அடைந்ததும் தேசியக் கொடியை றோட்டறிக் கழக கவர்னர் றோட்டேரியன் இம்தியாஸ் இஸ்மாயிலும், சர்வதேச றோட்டறிக் கொடியை பிரதம விருந்தினரும் பாடசாலைக் கொடியை அதிபரும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து ஆழிப் பேரலையால் அப் பகுதியில் மரணமானோரை நினைவு கூரு முகமாக அமைக்கப்பட்ட நினைவுச் சிலை, புதிய கட்டடத்துக்கான நினைவுக் கல் என்பன பிரதம விருந்தினரால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டன. தொடர்ந்து றோட்டேரியன் மாவட்ட கவர்னர் இம்தியாஸ் இஸ்மாயில் நாடா வெட்டிக் கட்டடத்தை திறந்து வைத்தார்.

பின்னர் விருந்தினர்கள் வரவேற்பு நடனத்துடன் மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டு மேடை நிகழ்வுகள் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகின.

கொழும்பு வடக்கு றோட்டறிக் கழகத் தலைவர் டுலிப் ஜெயமகா, பாடசாலை அதிபர் எஸ். தர்மரத்தினம், மாவட்டக் கவர்னர் றோட்டேரியன் இம்தியாஸ் இஸ்மாயில், றோட்டறிக் கழக சர்வதேச இயக்குநர் றோட்டேரியன் கே.ஆர்.ரவீந்திரன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா, பிரதம விருந்தினரான சர்வதேச றோட்டறிக் கழகத் தலைவர் றோட்டேரியன் றே.கிளின்ஜின்ஸ்மித் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இப்பாடசலை மாணவியான சிறுமி ஒருவர் ஆங்கிலத்தில் நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

இப்பாடசாலையை நிர் மாணித்துக் கொடுக்க முன்வந்த றோட்டறிக் கழக சர்வதேச தலைவர், றோட்டறிக் கழக சர்வதேச இயக்குநர் கே.ஆர்.ரவீந்திரன் ஆகியோருக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நினைவுக் கேடயங்களை வழங்கினார்.

அழகான, சரியான உச்சரிப்பில் ஆங்கில மொழி மூலம் நன்றி உரையாற்றிய மாணவி சபையோரால் பாராட்டப்பட்டதுடன் பிரதம விருந்தினர் அச்சிறுமிக்கு முத்தம் கொடுத்து தனது மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்.

விஞ்ஞான கூடம், கணினி அறை, ஆசிரிய ஓய்வு அறை, விளையாட்டு மைதானம், மலசல கூடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் மிக நவீன முறையில் மேற்கத்திய தரத்தில் இந்த பாடசாலைக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் வடமராட்சி வலய பிரதி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், அயற்பாடசாலை மாணவர்கள் பெற்றோர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

சர்வதேச றோட்டறிக்கழகம் பாடசாலை மாணவர்களுக்கு 5 ஆயிரம் சோடி சப்பாத்துக்கள் வழங்கும் திட்டத்தில் இப் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தொகுதி சப்பாத்துகள் வழங்கப்பட்டுள்ளன. (236,14,319)







பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சர்வதேச றோட்டறிக் கழகத் தலைவர் றே கிளின்ஜின் ஸ்மித் நாடாவை வெட்டிப் பாடசாலையை திறந்து வைப்பதை முதல் படத்திலும் குடத்தனையில் பாடசாலையை நிர்மாணித்து கொடுத்ததைப் பாராட்டும் முகமாக யாழ். மாவட்ட றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவர் ஈ.சரவணபவன், சர்வதேச றோட்டறிக் கழகத் தலைவர் றே கிளின்ஜின் ஸ்மித்துக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் சர்வதேச றோட்டறிக் கழகத் தலைவர் பாடசாலை மாணவர்களுடன் நிற்பதை கீழேயுள்ள படத்திலும் காண்கிறீர்கள்.

## தந்தை செல்வா பிறந்த நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 30

தந்தை செல்வாவின் 113 ஆவது பிறந்த தின நிகழ்வு நாளை வியாழக்கிழமை தந்தை செல்வா நினைவிடத்தில் நடைபெறவுள்ளது.

தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவின் தலைவர் வணக்கத்துக்குரிய ஆயர் சு.ஜெபநேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தந்தை செல்வாவின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பொதுமக்களை கலந்துகொள்ளுமாறு தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

(ஒ-10)

## வெற்றிபெற்ற ஐ.தே.க. உறுப்பினர்கள் ரணில் முன் இன்று சத்தியப்பிரமாணம்

கொழும்பு, மார்ச் 30

நடந்துமுடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் 897 பேர் இன்று கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றிய ஒன்பது உள்ளூராட்சிச் சபைகளுக்கான தலைவர்களும் இன்றைய நிகழ்வில் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு நியமனக் கடிதங்களும் வழங்கப்படும்.

வாக்களித்த மக்களுக்கு நியாயமான முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்றும் ஏனைய சபைகளுக்கு முன்னுதாரணமாக நடந்துகொள்ள வேண்டும் என்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் இன்று அறிவுரை வழங்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க இத்தகவலைத் தெரிவித்தார். (ஒ-சி)

# நிகழ்வுகள்

### ஆன்மீகக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 30

சின்மயா மிஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொக்குவில் கலைமகள் சர்வதேசக் கல்லூரியில் ஆன்மிகக் கருத்தரங்கு இன்று புதன்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை நடைபெறவுள்ளது.

''குழந்தைகளுக்கு கல்வியை எவ்வாறு கற்பிக்க வேண்டும்'' என்னும் தொனிப்பொருளில் கல்லூரியின் முன்பள்ளி ஆசிரியர்களுக்காக நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கில் யாழ். சின்மயா மிஷன் துறவி பிரமசாரி ஜாக்கிரத் சைத்தன்யா. சுவாமிகள் ஆன்மிகச் சொற்பொழி வினை நிகழ்த்தவுள்ளார்.

(ற-313)

### செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 30

அரச பாடசாலைகளின் பௌதிக வளங்கள் தொடர்பாக பருத்தித்துறை கல்விக் கோட்ட அதிபர்களுக்கான செயலமர்வு இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி மி.மி.த.க பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் பாடசாலை அதிபர்களையும் பொறுப்பாசிரியர்கள் ஒவ்வொருவரையும் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ம.செல்வராசா அறிவித்துள்ளார்.

அதனைத்தொடர்ந்து கரவெட்டிக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு நாளையும், மருதங்கேணிக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு நாளைமறுநாள் வெள்ளிக்கிழமையும் நடைபெறும் என அவர் அறிவித்துள்ளார். (ற-313, 190)

### மாதாந்த பொதுக்கூட்டம்

யாழ். மாநகர சபையின் 2011 ஆம் ஆண்டுக்கான மூன்றாவது மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அலுவலக மாநாட்டு மண்டபத்தில் மாநகரசபை முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (ற-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒத்திவைக்கப்பட்ட தேர்தல்களை வெஸாக் தினத்தின் பின் நடத்துக

## ஐ.தே.கட்சி அரசிடம் கோரிக்கை



கொழும்பு, மார்ச் 30

ஒத்திப்போடப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை வெஸாக் தினத்துக்குப் பின்னர் நடத்துமாறு தேர்தல்கள் ஆணையாளர், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோரிடம் ஐ.தே.க. வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

''உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி காரணமாகவும் சட்டச்சிக்கல்கள் காரணமாகவும் உள்ளூராட்சி சபைகள் பலவற்றுக்குத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன. வெஸாக் தினத்துக்கு முன்பாக ஒத்திவைக்கப்பட்ட சபைகளுக்குத் தேர்தலை நடத்த அரசு தயாராகி வருகின்றது என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

வெஸாக் தினத்துக்கு முன்னர் தேர்தல் நடத்துவதை நாம் எதிர்க்கின்றோம். வெஸாக் தினத்துக்கு முன் தேர்தலை நடத்தினால் வெஸாக் நிகழ்வுகளுக்கும் புத்தஜெயந்திக்கும் இடையூறுகள் ஏற்படும்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கு இடையூறு ஏற்படும் என்று கூறியே அரசு மாநகர சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைத்தது. கிரிக்கெட் போட்டிக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை ஏன் அரசு வெஸாக்குக்கு கொடுக்க மறுக்கின்றது?

ஆகவேதான் இத் தேர்தலை வெஸாக்குக்குப் பின்னரே நடத்துமாறு நாம் ஜனாதிபதி, தேர்தல்கள் ஆணையாளர், பிரதமர் மற்றும் ஜனாதிபதி செயலாளர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்''-என்றார். (ஒ-4)

# நாவற்குழிச் சந்தியில் விபத்து



கைதடி, மார்ச் 30

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த 'பிக்கப்' வாகனம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் நாவற்குழிச் சந்தியில் தொலைத் தொடர்புக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

சாரதி தமது கட்டுப்பாட்டை இழந்ததால் இந்த விபத்து நேர்ந்ததாகக் கூறப்பட்டது. நீர் வழங்கல் அதிகார சபைக்குச் சொந்தமான இந்த வாகனத்தில் அலுவலர்கள் சிலர் வந்தனர் என்றும் தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-288)

# சென்.ஜோன்ஸில் 'இன்ரறக்ற்'கூட்டம்: விருந்தினர்களுக்கு உற்சாக வரவேற்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30

சென்.ஜோன்ஸ் கல்லூரியின் இன்ரறக்ற் கூட்டம் நேற்றுப் பிற்பகல் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் அருட்திரு ஞானப் பொன்ராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சர்வதேச றோட்டறிக் கழகத்தின் தலைவர் றோ கிங்ஸ் ஸ்மித் பணிப்பாளர் கே.ஆர்.ரவீந்திரன், யாழ்.மாவட்ட றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், கொழும்பு வடக்கு றோட்டறிக் கழக பிரதிநிதி துலிப் ஜெயமகா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

நேற்றைய நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களுக்கு அங்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் போது சர்வதேச றோட்டறிக் கழகத் தலைவர் றோ கிங்ஸ் ஸ்மித் பிரதம விருந்தினர் உரையை நிகழ்த்தினார். சர்வதேச றோட்டறிக் கழகத்தினரும் யாழ்.மாவட்ட றோட்டறிக் கழகத்தினரும் பரஸ்பரம் நினைவுச் சின்னங்களை வழங்கினர்.

நிகழ்வில் முன்னதாக விருந்தினர்கள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு மங்கள இசை முழங்க நிகழ்விடத்துக்கு அழைத்து வரப்பட்டனர். மங்கள விளக்கை ஏற்றிவைக்கப்பட்டதைத் தொடர்ந்து தேசிய கீதம் இசை வடிவத்தில் ஒலிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வரவேற்புரையை கல்லூரி அதிபர் அருட்திரு ஞானப்பொன்சாரா நடத்தினார். இந்த நிகழ்வின் போது சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ஒ-14, 319)

# விபத்தில் காயமுற்ற இளைஞன் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 30

15 நாள்களுக்கு முன்னர் மீசாலையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த இளைஞர் சிகிச்சை பயனளிக்காது யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்று அதிகாலை மரணமானார்.

தலைக்கவசம் அணியாமலும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த 49 ரக மோட்டார் சைக்கிளுடன் மோதியே இந்த விபத்து ஏற்பட்டிருந்தது. சம்பவத்தின் போது குறித்த இளைஞன் மது அருந்தியிருந்தார் என்று விசாரணையின் போது தெரியவந்தது.

திருநெல்வேலியைச் சேர்ந்த இரத்தினம் கிருபானந் (வயது-29) என்பவரே காயடைந்து மரணமானவர் ஆவார். அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை 2.30 மணிக்கு மரணமானார். இவர் சவூதிஅரேபியா நாட்டிலிருந்து 2மாதங்களுக்கு முன்னர் இங்கு வந்திருந்தார் எனத்தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர்.எஸ்.சிவரூபன் உடற்கூற்று பரிசோதனை மேற்கொண்டார். விசாரனை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிவான் எம்.கணேசராஜா சடலத்தை உறவினரிடம் கையளிக்கும்படி உத்தரவிட்டார். (ஒ-4)

# மு.காங்கிரஸ் பேராளர் மாநாடு இம்முறை வன்னியில்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாடு மே 15ஆம் திகதி வன்னியில் நடைபெறும் என்று அதன் செயலாளர் ஹஸன் அலி நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

முதன்முறையாக வன்னியில் நடைபெறும் இப் பேராளர் மாநாட்டில் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். அத்துடன் அரசியல் உயர்பீடத்துக்கான உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவர் என்றும் அவர் சொன்னார்.

## நகரில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின்

# திடீர் சோதனையில் பாவனைக்குதவாத இறைச்சி வகைகள் சிக்கி அழிப்பு

யாழ்ப்பாணம் மாநகர சபையின் பொது சுகாதார பரிசோதகர்கள் யாழ் பழைய பூங்கா வீதியில் உள்ள பிரபல ஹோட்டலிலும் மடம் வீதியில் உள்ள தனியார் வீடொன்றிலும் நடத்திய திடீர் பரிசோதனையில் பாவனைக்கு உதவாத இறைச்சி வகைகளை கைப்பற்றியுள்ளனர்.

பொதுசுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட சோதனையில் பிரபல ஹோட்டல் ஒன்றில் 235 கிலோ இறைச்சி வகைகளையும் தனியார் வீடொன்றிலிருந்து 15 கிலோ இறைச்சியையும் கைப்பற்றி அவற்றை உடனடியாகவே குழிவெட்டி புதைத்து விட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த திடீர் வேட்டையில் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான மாடு, கோழி இறைச்சி வகைகள் பயன்படுத்தும் பொருட்டு குளிரூட்டப்பட்ட நிலையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன.

மாநகர சபையின் பொதுசுகாதார பரிசோதகர்கள் வி.சிவகுமார், ஜே.பேடினைட் தலைமையில் சென்ற பொது சுகாதார பரிசோதகர்கள் குழு நடத்திய திடீர் பரிசோதனையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த இறைச்சியில் பொது சுகாதார பரிதசோதகர்களின் அடையாளம் இடப்பட்டிருக்கவில்லை என்பதாலும் பழுதடைந்த இறைச்சியில் மாட்டிறைச்சியும் கலக்கப்பட்டிருந்தது என்றும் கூறப்பட்டது. (ஒ-எ-7)

# 300 தாதியர், 300 குடும்ப நல உத்தியோகத்தர் வடக்கு மாகாண வைத்தியசாலைகளுக்கு

## வருட மத்தியில் நியமனம் பெறுவார்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 30

வட மாகாணத்திலுள்ள வைத்திய சாலைகளுக்கு இந்த வருட நடுப்பகுதியளவில் 300 தாதிய உத்தியோகத்தர்களும், 300 குடும்ப நல உத்தியோகத்தர்களும் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வட மாகாணத்திலுள்ள பல வைத்திய சாலைகளிலும் தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை போதாமலுள்ளது. இதனை நிவர்த்திக்கும் பொருட்டு முதற் கட்டமாக இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண தாதியர் கல்லூரியிலும், வவுனியா தாதியர் கல்லூரியிலும் இந்த 600 பேரும் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி முடிவடைந்ததும் இந்த வருட நடுப்பகுதியில் வெற்றிடங்கள் உள்ள வைத்திய சாலைகளுக்கு இவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

யாழ்.மாவட்டத்தில் மட்டும் ஆதார வைத்தியசாலைகள், பிராந்திய வைத்திய சாலைகள், ஆரம்பப் பிரிவு வைத்திய சாலைகள் என 38 வைத்திய சாலைகள் உள்ளன.

வட மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களிலும் காணப்படும் இந்த வைத்திய சாலைகளுக்கு பயிற்சி பெற்று வெளியேறும் 600 பேரும் நியமனம் செய்யப்படுவர். இதன் மூலம் அங்கு நிலவும் வெற்றிடங்களை ஓரளவு நிரப்ப முடியும் - என்றார். (ஒ-4)

# மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண இரு நாட்டு அதிகாரிகள் இணக்கம்

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைகளை எப்படித் தீர்த்துக் கொள்வது என்பது தொடர்பான வழிகாட்டி வரைபடம் ஒன்றைத் தயாரித்துக் கொள்வது என்று புதுடில்லியில் கடந்த இரு நாள்களாக நடந்த இருதரப்புக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இரு நாட்டு மீனவர்களினதும் பாதுகாப்பு, வாழ்வாதாரம், வளங்களின் நிலைத்த தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில் மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் இந்த வழிகாட்டி வரைபடத்தைத் தயாரிக்க இருதரப்பு அதிகாரிகளும் இணங்கி உள்ளனர். திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் புதுடில்லியில் இலங்கை இந்திய அதிகாரிகள் சந்தித்து மீனவர் பிரச்சினை குறித்துப் பேசினர்.

இலங்கைக் குழுவுக்கு வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் ரஞ்சித் உயங்கொட தலைமை வகித்தார். இந்தியத் தரப்புக்கு அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர் ரி.எஸ்.திருமூர்த்தி தலைமை வகித்தார். (உ)

# லிபியாவில் கிளர்ச்சியாளரின் புதிய ஆட்சி கடாபியின் பிறந்த ஊரும் பறிபோனது

பெங்காசி, மார்ச் 30

ஏற்கனவே கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியிருந்த பிரகா, ராஸ்வனூப், கஷ்தாபியா உள்ளிட்ட நகரங்களை லிபியா இராணுவம் மீண்டும் கைப்பற்றி தன் வசம் வைத்திருந்தது. பெங்காசி நகரை மட்டும் லிபியா இராணுவத்தால் கைப்பற்ற முடியவில்லை. தற்போது அமெரிக்காவின் தலைமையிலான கூட்டுப் படைகளின் உதவியுடன் கிளர்ச்சியாளர் கள் அந்த நகரங்களை கைப்பற்றி மீண்டும் தங்கள் வசப்படுத்தியுள்ளனர். இவை அனைத்தும் எண்ணெய்வளம் மிக்க நகரங்களாகும்.

லிபியாவின் மேற்கு திசை நோக்கி முன்னேறி வரும் கிளர்ச்சியாளர்கள் திங்கட்கிழமை கிர்ட்டே நகரையும் பிடித்தனர். இது கடாபியின் சொந்த ஊராகும். இங்குதான் அவர் பிறந்து வளர்ந்தார்.

இந்த நகரில் அமெரிக்காவின் கூட்டுப் படைகள் ஏவுகணைகளை வீசி தாக்கின. இதைத் தொடர்ந்து லிபிய இராணுவம் அங்கிருந்து ஓட்டம் பிடித்தது. எந்தவித எதிர்ப்புமின்றி அது கிளர்ச்சியாளர்களின் வசமானது.

இதையடுத்து கிளர்ச்சியாளர்கள் தலைநகர் திரிபோலியை நோக்கி முன்னேறி வருகின்றனர். லிபியாவில் திரிபோலிக்கு அடுத்தபடியான 2ஆவது மிகப் பெரிய நகரமான பெங்காசி கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ளது.

லிபியாவின் பெங்காசி நகரை தலைநகராகக் கொண்டு புதிய ஆட்சியை அமைக்க கிளர்ச்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர். லிபியாவின் மேற்குப் பகுதியில் தங்கள் வசமுள்ள நகரங்களை உள்ளடக்கி ஆட்சி நடத்த திட்டமிட்டுள்ளனர். இதற்கான அமைச்சரவையையும் உருவாக்கி உள்ளனர்.

இந்த அரசின் தலைமையை போராட்டக்குழுத் தலைவரும் முன்னாள் பேராசிரியருமான மக்முத் ஜிப்ரில் ஏற்க உள்ளார் (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரியில் மரக்கன்றுகள் நடுகை

சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் தேவைகளுக்காகப் பயன்தரும் பழமரக்கன்றுகள் வைத்தியசாலையில் நடப்படவுள்ளன. இதன்படி வைத்தியசாலை வளாகத்தில் வாழை மற்றும் பப்பாசி மரக்கன்றுகள் நடுவதற்கான ஏற்பாடுகள் வைத்தியசாலை நிர்வாகத்தினால் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சத்து 58 ஆயிரத்து 800 புகலிட விண் ணப்பங்களே கிடைத்துள்ளன என்று ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதுவர் என்டோனியா கட்டர்ஸ் வெளியிட் டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தொகை 2009ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5 வீதத்தால் குறைவடைந்துள்ளது என அவர் கூறியுள்ளார்.

உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளில் அமெரிக்கா அதிகளவிலான அகதிகளை உள்வாங்கும் நாடாக விளங்குகிறது. அமெரிக்காவுக்கு கடந்த வருடத்தில் 55 ஆயிரத்து 500 புகலிடக் கோரிக்கைகள் கிடைத்துள்ளன.

அத்துடன், அந்த வரிசையில் பிரான்ஸுக்கு 47 ஆயிரத்து 800 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. அதற்கு அடுத்தபடியாக ஜேர்மனி, சுவீடன், கனடா ஆகிய நாடுகள் காணப்படுகின்றன. இப்படி அவர் தெரிவித்துள்ளார். (சி)

**April Intake - 22.04.2011** Study in UK

- IELTS அவசியமற்ற லண்டன் பயணம்
- Sponsor வசதிகள் மிகக் குறைந்த விலையில் 130,000/= (நம்பத்தகுந்த வங்கி ஊடாக எடுக்கப்பட்ட ஆவணம் / VFS இல் Refands ஆகாத ஆவணம்)
- 2 விதிமுறைகளில் உருவாக்கப்பட்ட ஒரு திட்டம்
  I வீசாவுக்கு முன் கட்டணம் II வீசாவுக்கு பின் கட்டணம்
- Course Fees குறைந்த விலையில் - 2500$

UK இல் 20 கல்லூரிகளுக்கு மேற்பட்ட தொடர்பு, வடமாகாண மக்களின் நம்பிக்கைமிக்க தெரிவு.

தொடர்பு - European College of Higher Studies,
3151/2 Parameaswara Junction, Palaly Road, Jaffna.
T.P - 0773537378, 0776327623, 0213734747.

**கட்டடவேலைகள் செய்து கொடுக்கப்படும்**

கட்டடங்கள் கட்டுதல், வீடுகட்டுதல், பழைய வீடுகளைத் திருத்துதல், குளியலறைகட்டுதல், சுற்றுமதில் கட்டுதல், மாபிள் பதித்தல், தச்சு வேலைகள், Plumbing, Electrical, Painting, Welding, பூந்தோட்டம் அமைத்தல் அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

அழையுங்கள் 0776679564
AXSHAYACONSTRUCTION, JAFFNA.

## மரண அறிவித்தல்



### கந்தையா சண்முகலிங்கம்

(முன்னாள் லிங்கம் ஹவுஸ் - உரிமையாளர்)

கருங்காலி காரைநகரைப் பிறப்பிடமாக வும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகலிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் மீனாட்சியின் மருமகனும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும், குகனேஸ்வரி (கணக்காளர் - நகரசபை, வவுனியா), சிவசோதி (பொறியியலாளர் - பிரான்ஸ்), கெங்காதரா (பொறியியலாளர், சிங்கப்பூர்), பத்மலோசனா (போதனாசிரியர் - கணினி அலகு, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான மீனாட்சி, நல்லதம்பி மற்றும் நடராசாவின் சகோதரரும் அருட்செல்வியின் மாமனும் தனிஷிகாவின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2011) வியாழக்கிழமை மு.ப.10மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.57, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில், யாழ்ப்பாணம். (2759) (37)

தகவல்:
குடும்பத்தினர்.

# புத்தாண்டு தினத்திலாவது எம்மை விடுவியுங்கள்

## போகம்பரை கைதிகள் கோத்தபாயவிடம் உருக்கம்



கொழும்பு, மார்ச் 30

''நாட்டில் தற்போது யுத்த சூழ்நிலை இல்லை; இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசம் என்று ஒன்றில்லை; நாடு முழுவதிலும் அரச நிர்வாகமே நிலவுகின்றது. அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்கு கொள்ள தமிழ் - சிங்கள புத்தாண்டு தினத்திலாவது எம்மை விடுதலை செய்யுங்கள். அல்லது பிணையிலாவது விடுதலை செய்யுங்கள்'' - என்று கண்டி, போகம்பரை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கேட்டுள்ளனர்.

அக்கடிதத்தின் முழுமையான விவரம் வருமாறு:-

கண்டி போகம்பரை சிறைச்சாலையில் பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளாகிய நாங்கள், பல தடவைகள் எமது விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை விடுத்திருந்தோம். இதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

தற்போதைய சூழலில் எம்மை விடுதலை செய்யுங்கள் அல்லது பிணையிலாவது விடுவிக்க எமக்கு உதவி செய்யுங்கள். பல வருடங்களாக எதுவித முடிவுகளும் இன்றி நாம் இருக்கின்றோம். எமது குடும்பங்கள் கடந்த மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற யுத்தத்தில் கடும் பாதிப்புக்குள்ளாகி பல இழப்புக்களைச் சந்தித்து வருகின்றன.

நீங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற முறையில் எமது விடுதலை தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்குப் பரிந்துரை செய்து பிறக்க இருக்கின்ற தமிழ் - சிங்கள புத்தாண்டிலாவது எமது குடும்பங்களுடன் சந்தோஷமாக வாழ்வதற்கு உதவி செய்யுங்கள்.

எமது நாட்டில் தற்போது யுத்த சூழ்நிலை இல்லை. தேசிய பாதுகாப்புக்கு எவ்விதமான அச்சுறுத்தலும் இல்லை; அத்துடன் எமது நாட்டில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமென்று ஒன்றில்லை; அனைத்து பிரதேசங்களும் அரச கட்டுப்பாட்டிலேயே காணப்படுகின்றன.

இந்தச் சூழ்நிலையில் எமது விடுதலையை ஏன் தாமதப்படுத்துகின்றீர்கள்? எம்மில் பலர் நாட்டில் அபிவிருத்தி நிலவவேண்டும் என்ற பெரும் சிந்தனை கொண்டவர்கள்.

அத்தோடு வெலிக்கடை சிறைச்சாலைப் பெண்கள் பிரிவில் குழந்தைகளுடன் உள்ள தாய்மார் மிகுந்த துன்பங்களை எதிர்நோக்குகின்றார்கள். அவர்களின் குழந்தைகளின் கல்வி சிதைந்து போயுள்ளது. அவர்கள் பலவிதமான வியாதிகளுடனும் போஷாக்கு குறைபாடுகளுடனும் வாழ்ந்து வருகின்றார்கள். அத்தோடு அங்கவீனர்களாகவும், மன நோயாளிகளாகவும் பல வருடங்களாக எந்தவிதமான முடிவும் இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதனை இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகமூட்ட விரும்புகின்றோம்.

எனவே மேற்கண்ட எமது விடயம் தொடர்பாக அக்கறை காட்டுங்கள். எமது விடுதலையைத் தாமதப்படுத்தாமல் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் மிகவும் பணிவுடன் இக்கடிதம் மூலம் வேண்டி நிற்கின்றோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-சி)

## சர்வமத பெரியார்கள் யாழ்.வருகை

யாழ்ப்பாணம், மார்ச் 30

வடபகுதிக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள சர்வமத சம்மேளனத்தைச் சேர்ந்த மதப் பெரியார்கள் இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள பல இடங்களுக்குச் சென்று மக்களை நேரில் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினர்.

குழுவினர் படைத்தரப்பையும் சந்தித்து தற்போதைய நிலைமை குறித்து விவரம் அறியவுள்ளனர். தொடர்ந்து யாழ். வேம்படி மகளிர் கல்லூரியை தம்பர் மண்டபத்தில் மனித உரிமைக் குழுவினர் மற்றும் பொதுமக்களையும் சர்வமதப் பெரியார்கள் சந்திக்கவுள்ளனர். யாழ்.நகர மேயரையும் அவர்கள் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

(ஒ-190-323)

**பதவி வெற்றிடம்**

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. Clerk (full time)
2. Instructor (MSO, DTP) full time

03.04.2011 க்கு முன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்

Softview Computer College
43,Thaddatheru Junction, Jaffna.

**யாழ் நகரில்** வரும் புதுவருடத்தை முன்னிட்டு

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES** வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

BCHS

To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now

100% நல்ல சம்பளம்

FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
FOUNDATION DIPLOMA IN MANAGEMENT

செல்லும் நாடுகளில் நல்ல வேலை வாய்ப்பு

- இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளில் கற்கலாம்.
- உங்களுக்கான விசா உத்தரவாதத்தினை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் உறுதிசெய்வார்கள்.

Qualification: G.C.E.[O/L] Plus IELTS 5.5

After G.C.E. A/L or O/L → 6 Months / 3 Months Foundation Diploma @ BCHS → 2½ Years Diploma & Degree குறைந்தது 3 வருடத்தில் நீங்கள் ஒரு பட்டதாரி தகுதியான வேலையுடன்

IELTS (International English Language Testing System) (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
We Gurantee Minimum 6.5 Band upwards

Diploma in English [2 Months] Advanced Diploma In English [2 Months]

100% பயிற்சி — ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர்கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புகளும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புகள் உண்டு — 100% வெற்றி

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.
பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100% உறுதி.

SPONSOR/SETTLEMENT VISA - EXAMS

பிரித்தானியா அரசாங்கத்தினால் அங்கிகரிக்கப்பட்ட நிரந்தர வதிவிட விசாவை பெற்றுக் கொள்ளுவதற்கான ஆங்கிலப் பரீட்சை தொடர்பான ஆலோசனைகளும், அதற்கான பரீட்சைகளும் (A1, PTE, ESOL) எங்களால் வெற்றிகரமாக நடாத்தப்படுகிறது.

Duration : 2 Months — புதிய பிரிவு 15-04-2011

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கோசி) Hotel மேலே)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913 0714299935

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
திகதி 15-04-2011 காலை : 10.00 மணி
16-04-2011 மாலை : 03.00 மணி

**உடனடியாகத் தேவை**

கணினி நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு உடனடியாக ஆள்கள் தேவை
1. அலுவலக உதவியாளர்
2. கணினிப் போதனாசிரியர்
MS-Office / DTP அனுபவம் போதுமானது. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
MIS,74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம். T.P-0718474239

**Personal Class (கணினி)**

- உங்கள் வீடுகளில் வந்து பின்வரும் கற்கை நெறிகள் கற்பிக்கப்படும்.
- MS Office, DTP, Internet and E-mail, Web Design, Graphic Design.
- பயிற்சியின் பின் சான்றிதழ் வழங்கப்படும்.
- குறிப்பு - கணினி இல்லாதவர்களுக்கு எனது Lap Top மூலமாகப் பயிற்சியளிக்கப்படும்.

ஆசிரியர் - KRC, T.P-0779672038 நல்லூர்.

**A/L ICT வகுப்புகள்**

2012 / 2013
புதிய பிரிவுகள் ஆரம்பம்
சனி, ஞாயிறு 5 pm
*Revision for 2011 Batch*
By R.Kumaran - B.Sc.
MIS, 74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்.
T.P - 0776577359

**திருமணக்கார் வாடகைக்கு**



*வெள்ளை நிறமுடைய குளிரூட்டப்பட்ட கார் வாடகைக்கு விடப்படும்.*

தொடர்பு:-0215673555, 0215673666

**வேலை ஆள்கள் தேவை**

1. சோட்டீஸ் தயாரிப்பாளர் (வடை, றோல், பற்றீஸ், சமோசா, கிழங்கு றொட்டி)
2. ஜூஸ் தயாரிப்பாளர் (சகல பழங்களிலும்)
3. சமையலறை உதவியாளர்
4. உணவு பரிமாறுபவர்கள்

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்,
நேரில் வரவும்
ருசி (RUSI) உணவகம்,
இல-67-B, 67-C மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாச நோய்கள் தீர நன்றாக பாடுங்கள்

மூச்செடுப்பதில் சிரமம் என்பது நோயாளியின் நாளந்த வாழ்வைப் பாழடிக்கக் கூடிய சிரமமான நோயாகும். நாம் எந்த நேரமும் சுவாசித்துக் கொண்டே இருக்கிறோம். ஆனால் அதை உணர்வதில்லை. அது இயல்பாக நடந்து கொண்டே இருக்கிறது. ஆஸ்த்துமா போன்ற நோய்கள் வரும் போதுதான் சுவாசிப்பது சிரமம் என்பதை உணர்கிறோம். ஆனால் ஆஸ்த்துமா தணிந்ததும் சுவாசம் இலகுவாகிறது.

ஆனால் நாட்பட்ட சுவாசத் தடை நோய் Chronic obstructive pulmonary disease என்பது வெறுமனே மூச்செடுப்பதில் சிரமம் அல்ல. அது வர வர மோசமாகிக் கொண்டு போகும் ஒரு நோயாகும். அத்துடன் ஆஸ்த்துமாவின் வரட்சியான இருமல் போல் அல்லாது இருமும் போது அதிகளவான சளி கொட்டும். ஆனால் ஆஸ்த்துமா போலவே நெஞ்சை அடைப்பது அல்லது இறுக்குவது போன்ற உணர்வையும் ஏற்படுத்தும்.

இது பொதுவாக புகைப்பிடிப்பவர்களிடையே தோன்றும் ஒரு நோயாகும். புகைத்தலைத் தவிர சுவாசப்பையை உறுத்தக் கூடிய பலவும் இந்நோய் வருவதற்குக் காரணமாகலாம். உதாரணமாக சூழல் மாசடைதல், வேறு புகைகள், இராசாயன மணங்கள், தூசி போன்றவையும் இது ஏற்படுவதற்குக் காரணமாகலாம். இந் நோயுள்ளவர்களுக்கு சுவாசிப்பது என்பது மிகச் சிரமமாக இருக்கும்.

இந்த நோய்க்கு ஒரு சிறந்த வழி பாடுவது தான். பாடுதல் என்பது ஒரு நுணுக்கமான கலையாகும். இதனைச் செய்வதற்கு எமது சுவாசத் தொகுதியில் உள்ள தசைகளின் இயக்கத்தை துல்லியமாக நாம் நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிறோம்.

தன்னிச்சையாக இயங்கும் நமது சுவாசத் தொகுதியானது இதன் மூலம் நமது மனதின் கட்டுப்பாட்டுக்குள் வருகிறது. இயங்க மறுக்கும் அல்லது இறுகிப் போயிருக்கும் நமது சுவாசத் தொகுதித் தசை நார்கள் இசைவாக இயங்கும்.

31 பேரைக் கொண்ட சிறிய ஆய்வு தான் இது. 12 வாரங்களாக இடம்பெற்ற பாடற் பயிற்சியின் பின் அத்தகைய நோயாளர்களின் சுவாசத்தில் முன்னேற்றம் காணப்பட்டதாம். 84 சதவீதமான நோயாளர்கள் இது ஆறுதல் அளிப்பதாகக் கூறினர். 64 சதவிகிதமானவர்கள் இது அசௌகரியமான பயிற்சியாக இல்லை என்றனர். மிகவும் முக்கியமான விடயம் 64 சதவீதமானவர்கள் தாம் இதனைத் தொடர்ந்து செய்யப் போவதாகத் தெரிவித்தனர்.

அவர்களது உடல் நலமும், சிரமமான சுவாசமும் தேறியதற்கு உளவியல் காரணங்களும் இருக்கக் கூடும். இசை கொடுக்கும் இதமான உணர்வுகளுக்கு அப்பால் தன்னால் முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்ததும் காரணமாக இருக்கலாம்.

காரணங்கள் எதுவாக இருந்தாலும் பாடுவது நல்லது. அது மன நிறைவைக் கொடுக்கும். மனச்சிறைகளிலிருந்து விடுபட உதவுகிறது. நோயைத் தணிக்கும் ஆற்றலும் இருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய்களுக்கு மருந்தாகும் அவரைக் காய்



இயற்கையுடன் இணைந்து வாழும் மனிதன் தன் இருப்பிடத்தைச் சுற்றி அதாவது வீட்டைச் சுற்றி தோட்டம் அமைத்தான். அதில் தமக்குத் தேவையான செடி, கொடி, மரங்களை நட்டு வைத்தான். அதிலிருந்து கிடைக்கும் பூ, இலை, காய், கனி அனைத்தையும் உண்டான். தன்னை வளர்த்து ஆளாக்கிய மனிதன் என்ற எஜமானுக்கு இவை நீண்ட ஆயுளை நன்றிக் கடனாக கொடுத்து வந்தன.

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எமது முன்னோர்கள் பருவகால சூழ்நிலைக்கேற்ப எந்த வகையான உணவுகளைச் சாப்பிடவேண்டும், அதை எப்படிச் சாப்பிடவேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர். அதன்படி வீட்டைச் சுற்றி மனிதனுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்கள் தரும் கீரைகள், மரங்களை நட்டு வளர்த்தனர். ஆனால் இன்று வீடுகளைச் சுற்றி கொங்கிரீட் தளங்கள், குரோட்டன்ஸ் என்று சொல்லப்படும் எதற்கும் உதவாத நச்சுச் செடிகள், அல்லது பிளாஸ்டிக் அலங்காரப் பொருள்கள்தான் உள்ளன. இதனால் வீட்டுத் தோட்டக் காய்கள் எதுவென்று நம் எதிர்கால சந்ததியினருக்குத் தெரியாமல் போகும் நிலை உள்ளது.

இன்று காய்கறிகள், கனிகள் கீரைகள் எல்லாம் இரசாயன உரமிட்டு வளர்க்கப்பட்டு சந்தைகளில் விற்கப்படுகிறது. அவை சில நேரங்களில் உடலில் நச்சுத்தன்மையை உண்டாக்குகிறது. ஆனால் இவற்றை எமது வீட்டிலும் வீட்டுக் கழிவுகளை உரமாக இட்டு வளர்த்தால் உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளலாம்.

அந்த வகையில் வீடுகளில் எளிதாக வளர்க்கப்படும் அவரைக்காய் பற்றி தெரிந்து கொள்வோம்.

அவரைக் கொடி வகையைச் சேர்ந்தது. ஜூலை மாதம் விதை விதைத்தால் அதன் பயன் ஜனவரி மாதத்தில்தான் கிடைக்கும். இது கொடியாக வளர்ந்து காய் காய்ப்பதற்கு ஆறு மாத காலமாகும். இந்த அவரைக் கொடிக்கு அழகான பந்தல் போடுவார்கள். அந்த பந்தலின் மேல் இந்த கொடி படர்ந்து காணப்படும். அவரைக்காயில் பிஞ்சுக்காயே அதிக அளவில் உணவாகச் சேர்க்கப்படுகிறது. நல்ல சுவையைக் கொண்டது.

அவரைப் பிஞ்சுகளை எடுத்து நறுக்கி அதனுடன் சின்னவெங்காயம், பூண்டு, மிளகு சேர்த்து வதக்கி உணவில் சேர்த்துக்கொண்டால் உடல் வலுப்பெறும். எளிதில் ஜீரணமாகும் தன்மை கொண்டதால் இதன் சத்துக்கள் விரைவில் உடலில் சேரும். இதில் சுண்ணாம்புச்சத்து, விற்றமின்கள் இருப்பதால் இளைத்த உடல் தேறும். நோய்க்கு மருந்துண்ணும் காலங்களிலும், விரதம் இருக்கும் காலங்களிலும் அவரைக்காயை அதிகம் சேர்த்துக்கொள்ளலாம். இது உடலுக்கு வலுவைக் கொடுப்பதுடன் விரத மன அமைதியைப் பெருக்கவும் உதவும். சிந்தனையைத் தெளிவுபடுத்தும். காமச்சிந்தனை, அதீத சிந்தனை, கோபம், எரிச்சல், இவற்றைப் போக்கும். உடலுக்கும், மனதிற்கும் சாந்தத்தைக் கொடுக்க வல்லது.

பித்தத்தினால் உண்டாகும் கண்சூடு, கண்பார்வை மங்கல் போன்ற கண் தொடர்பான பிரச்சினைகளுக்கு உகந்தது.

வாரம் இருமுறை சமைத்து உண்டுவந்தால் பித்தம் குறைந்து கண் நரம்புகள் குளிர்ச்சியடைந்து மங்கிய பார்வை தெளிவடையும். அவரைப் பிஞ்சில் துவர்ப்புச் சுவை உள்ளதால் இது இரத்தத்தைச் சுத்தப்படுத்தும். இரத்த நாளங்களில் உள்ள கொழுப்பைக் குறைக்கும். இரத்த அழுத்தம், இதயநோய் உள்ளவர்கள் அவரைக்காயை அதிகம் சேர்த்துக்கொள்வது நல்லது.

அதுபோல் நீரிழிவு நோய் உள்ளவர்கள் அவரைக்காயை அதிகம் சேர்த்துக் கொண்டால், நீரிழிவு நோயால் உண்டாகும் மயக்கம், தலைச்சுற்றல், கை, கால் மரத்துப்போதல் போன்றவை மட்டுப்படும். மலச்சிக்கலைப் போக்கும், வயிற்றுப் பொருமலை நீக்கும். மூலநோய் தாக்கம் உள்ளவர்கள் அவரைக்காயை உணவில் அதிகம் சேர்த்துக்கொள்வது நல்லது. சளி, இருமலைப் போக்கும், உடலுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுக்கும், சருமத்தில் உண்டாகும் பாதிப்புகளைக் குறைக்கும், இரவு உணவில் அவரைக்காய் சேர்த்துக் கொண்டால் சுகமான நித்திரை கிடைக்கும்.

முற்றிய அவரைக்காயை உணவாக சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். அதற்குப் பதிலாக முற்றிய அவரைக்காய், முற்றிய வெண்டைக்காய் போன்றவற்றை சேர்த்து சூப் செய்து அருந்தினால் உடல் பலமடையும். நினைவாற்றலைத் தூண்டும். முதுமையில் உண்டாகும் நோயின் தன்மையை அவரைப் பிஞ்சு மாற்றும். தசை நார்களை வலுப்படுத்தும்.

## 24 பற்களுக்கு குறைந்தால் பக்கவாத நோய் ஏற்படும்

பக்கவாதம் நோய் ஏற்படுவதற்கு பற்களும் காரணமாக உள்ளன என மருத்துவ ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஜப்பானில் உள்ள ஹீரோஷிமா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நிபுணர்கள், 50 முதல் 60 வயதுக்குட்பட்ட பக்கவாத நோய் பாதித்த நபர்களிடம் ஆய்வு மேற்கொண்டனர்.

அவர்களில் 24 மற்றும் அதற்கு குறைவான பற்கள் உள்ளவர்களே அதிகம் பாதிக்கப்பட்டிருந்தனர்.

அதே வேளையில் இதே வயதுடைய அதிக பற்கள் உள்ளவர்களுக்கு பக்கவாத நோய் பாதிப்பு அதிக அளவில் இல்லை. பக்கவாத நோய் ஏற்படுவதில் பற்களுக்கும் பங்கு இருப்பது தெரிய வந்துள்ளது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து மாநிலத் தேர்தலில் பிரதமர் பிரசாரம்

டில்லி, மார்ச்.30

பிரதமர் மன்மோகன் சிங் 5 மாநிலங்களிலும் தேர்தல் பிரசாரம் செய்யத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

முதலில் அவர் அசாம் மாநிலத்தில் ஒருநாள் பிரசாரம் செய்வார் என்று தெரியவந்துள்ளது. 126 தொகுதிகளைக் கொண்ட அசாமில் எதிர்வரும் 4ஆம், 11ஆம் திகதிகளில் இரண்டு கட்டங்களாகத் தேர்தல் நடைபெறவுள்ளது.

பிரசாரம் முடிவடையும் இறுதி நாளன்று அசாம் செல்ல பிரதமர் மன்மோகன்சிங் திட்டமிட்டுள்ளார். கவுகாத்தியில் நடைபெற உள்ள பொதுக் கூட்டத்தில் 2 அல்லது 7ஆம் திகதி அவர் பிரசாரம் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாதுகாப்பை கருத்தில் கொண்டு பிரதமரின் அசாம் பிரசார பயணம் இதுவரைக்கும் அறிவிக்கப்படாமல் உள்ளது.

தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி ஆகிய 3 மாநிலங்களிலும் எதிர்வரும் 13 ஆம் திகதி ஒரே நாளில் தேர்தல் நடைபெற உள்ளது. அசாமில் பிரசாரம் செய்த பின்னர் பிரதமர் கேரளாவுக்குச் செல்ல உள்ளார்.

அனேகமாக அடுத்த வார இறுதியில் அவர் கேரளா செல்லவுள்ளார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



கேரளாவில் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து இரண்டு அல்லது மூன்று பொதுக்கூட்டங்களில் பிரதமர் மன்மோகன் சிங் பேசுவார் என்று கூறப்படுகிறது. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பிரதமர் எப்போது பிரசாரம் செய்வார் என்பது இன்னமும் உறுதி செய்யப்படவில்லை.

294 சட்டசபைத் தொகுதிகளை கொண்ட மேற்குவங்காளத்தில் 6 கட்டங்களாகத் தேர்தல் நடக்கிறது. ஏப்ரல் 18, 23, 27, மே 3, 7, 10 ஆகிய திகதிகளில் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. எனவே ஏப்ரல் 2 ஆவது வாரத்தில் மேற்கு வங்காளத்தில் பிரதமர் மன்மோகன் சிங் பிரசாரம் செய்வார் என்று தெரிகிறது.

மேற்கு வங்க மாநிலத்தில் மன்மோகன்சிங் 2 அல்லது 3 தினங்கள் பிரசாரத்தில் ஈடுபடுவார் என்று தெரியவந்துள்ளது. (201)

## விஜயகாந்துக்கு எதிராக திண்டுக்கல் லியோனி பிரசாரம்

நகைச்சுவை நடிகரும் பட்டிமன்றப் பேச்சாளருமான திண்டுக்கல் லியோனி விஜயகாந்துக்கு எதிராக பிரசாரம் செய்யவுள்ளார்.

இதேவேளை நகைச்சுவையில் முன்னணி நடிகராக இருக்கும் வடிவேலு தே.மு.தி.க தலைவர் விஜயகாந்தை கடுமையாக விமர்சித்தும், தி.மு.கவுக்கு ஆதரவாகவும் பிரசாரம் செய்து வருகிறார்.

இந்தநிலையில் பட்டிமன்றங்களில் தனது நகைச்சுவைப் பேச்சால் மக்களைக் கவர்ந்த திண்டுக்கல் ஐ.லியோனி, சில திரைப்படங்களில் நகைச்சுவை வேடம் ஏற்று நடித்துள்ளார். இவர் தி.மு.க. தலைவர் கருணாநிதியை நேரில் சந்தித்தார்.

இந்த சந்திப்புக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தி.மு.க.வுக்கு ஆதரவாக நான் 15 தினங்கள் பிரசாரம் செய்ய விருக்கிறேன். நடிகர் ஒருவர், நான்தான், அடுத்த முதல்வர் என்று கூறிவருகிறார். அவருக்கு எதிராகப் பிரசாரம் செய்வதுதான் எனது குறிக்கோள். கலைஞர் தான் அடுத்த முதல்வர் என்று மக்களுக்கு புரியவைப்பேன் என்று அவர் தெரிவித்தார்.

## இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

உலகிலுள்ள 39 புலிகள் சரணாலயங்களில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது. கடந்த முறை எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் 1411 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை தற்போது 295 கூடுதலாக 1706 ஆக அதிகரித்துள்ளன.

2011 புலிகள் கணக்கெடுப்பை சர்வதேச புலிகள் கருத்தரங்கில் மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டார். ரஷ்யாவில் கடந்த ஆண்டு நடைபெற்ற புனித பீட்டர்ஸ்பர்க் மாநாட்டைத் தொடர்ந்து இந்த கருத்தரங்கு நடைபெறுகிறது. இந்தக் கருத்தரங்கில் பூகோள புலிகள் பாதுகாப்புத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான சவால்கள், திட்டங்கள் உள்ளிட்டவை விவாதிக்கப்படவுள்ளன.

நட்புறவு...




இரண்டு ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் டில்லியில் இந்திய-பாக். அதிகாரிகளுக்கிடையே சுமுகமான முறையில் நேற்று முன்தினம் பேச்சு நடந்தது. இந்திய உள்துறைச் செயலர் ஜி.கே.பிள்ளை (வலது) பாக்.உள்துறைச் செயலர் ஜமாமுடன் கைகுலுக்குகிறார்.

## ஷாகித் பால்வாவின் சகோதரர் கைது

2 ஜி ஊழல் தொடர்பாக டிபி ரியாலிட்டி நிறுவனத்தின் முன்னாள் நிர்வாக இயக்குநர் ஷாகித் பால்வாவின் சகோதரர் உள்ளிட்ட 2 பேரை சி.பி.ஐ கைது செய்துள்ளது.

ஆசிப் பால்வா மற்றும் ராஜிவ் அகர்வால் ஆகியோர் 2 ஜி ஊழல் தொடர்பாக கைது செய்யப்பட்டதாக சி.பி.ஐயின் செய்தித்தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஷாகித் பால்வா கடந்த பெப்ரவரியில் கைது செய்யப்பட்டார். இதேவேளை இந்த கைதுகள் தொடர்பாக டிபி ரியாலிட்டி நிறுவனம் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. (201)

# பார்வதி அம்மாளின் ஈமச்சாம்பல் நாளை கன்னியாகுமரியில் கரைப்பு

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளின் ஈமச்சாம்பலை கன்னியாகுமரிக் கடலில் கரைக்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ம.தி.மு.க பொதுச்செயலர் வைகோ, பழ. நெடுமாறன் உள்ளிட்டோர் கலந்துகொள்ள உள்ளனர்.

இதுதொடர்பாக வைகோ வெளியிட்ட அறிக்கை வருமாறு:

வல்வெட்டித்துறையில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ள, பார்வதி அம்மாளின் ஈமச்சாம்பலை மூன்று கடல்கள் சங்கமிக்கும் குமரி முனையில், கடல் அலைகளில் தூவி, நீர்க்கடன் ஆற்றும் நிகழ்வு அன்னையார் மறைந்த 40 ஆம் நாளாகிய நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற இருக்கிறது. நானும், பழ.நெடுமாறனும், தமிழ் உணர்வாளர்களும் பங்கு ஏற்க இருக்கின்றோம்.

ம.தி.மு.க. தலைவர் திருப்பூர் துரைசாமி, பொருளாளர் டாக்டர் மாசிலாமணி, துணைப் பொதுச் செயலாளர்கள், நாசரேத்துரை, மல்லை சத்யா, துரை.பால கிருஷ்ணன், ஆட்சிமன்றக்குழுச் செயலாளர்-நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி, கொள்கை விளக்க அணிச் செயலாளர் நாஞ்சில் சம்பத் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சத்யசாயி பாபா மருத்துவமனையில் அனுமதி

அனந்தபூர், மார்ச்.30

நிமோனியா காய்ச்சல் காரணமாக சத்யசாயி பாபா புட்டபர்த்தியில் உள்ள சிறந்த வசதிகளுடைய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சாயிபாபா குணமடைந்து வருவதாகவும், கவலைக்கிடமான நிலைமை இல்லை என்று பிரசாந்தி நிலையத்தினர் தெரிவித்தனர். இதனிடையே சாயி பாபாவுக்கு உடல் நலக்குறைவு என்றும் தகவல் பரவியதால் புட்டபர்த்தியில் கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்டன. அத்துடன் ஆயிரக்கணக்கானோர் மருத்துவமனை முன்பாக திரண்டனர்.

பாபாவின் உடல்நிலை சீராக இருப்பதாகவும், விரைவில் அவர் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்புவார் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# தேர்தல் ஆணையம் நடுநிலையாகச் செயற்பட வேண்டும்

திட்டக்குடி, மார்ச் 30

தேர்தல் ஆணையமானது மனித உரிமைகளை மீறும் வகையில் சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டு முறை யற்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனால் பொதுமக்கள் குறிப்பாக வணிகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவையும் ஆணையம் மதிப்பதில்லை. எனவே தேர்தல் ஆணையம் நடுநிலையாக செயற்பட வேண்டும். இவ்வாறு தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

காட்டுமன்னார்கோவில், திட்டக்குடி தொகுதிகளில் போட்டியிடும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்வதற்காக வந்திருந்த கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் திட்டக்குடியில் நிருபர்களுக்கு பேட்டி யளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

'விடுதலை சிறுத்தைகள் கட்சி தேர் தல் ஆணையத்தில் பதிவு பெற்ற கட்சியாகும். முன்னுரிமை அடிப்படையில் நாம் போட்டியிடும் அனைத்துத் தொகுதிகளிலும் ஒரே சின்னத்தைப் பெறவே தொகுதிகளை குறிப்பிட்டு மனு செய்திருந்தோம்.

இதில் நாம் தேர்தல் ஆணையத்தை ஏமாற்ற வேண்டிய அவசியம் இல்லை. கூட்டணியில்

### திருமாவளவன் கூறுகிறார்

எங்களுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்ட பின்பு அதன் விவரத்தை தேர்தல் ஆணையத்துக்கு தெரிவித்து விட்டோம். எதிர்வரும் தேர்தலில் தி.மு.க. கூட்டணி வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

நாம் கூட்டணி தர்மத்தை எப்போதும் மாறமாட்டோம். அனைத்துத் தொகுதிகளிலும் காங்கிரஸ் கட்சியினர் எங்களுடன் ஒன்றுபட்டு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்பது குறித்து கட்சியின் தலைவர் தங்கபாலு, மத்திய மந்திரி ஜி.கே.வாசன் ஆகியோரைச் சந்தித்து வலியுறுத்தியுள்ளோம்.

முன்பு நான் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தது அரசியல் காரணங்களுக்காக மட்டுமே தவிர வேறல்ல. இதனை தொகுதி மக்கள் தவறாகக் கருதவில்லை. என்னையடுத்து இங்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவரும் (செல்வப்பெருந்தகை) கட்சி மாறின்ாரே தவிர அமைச்சுப் பதவியை ராஜினாமா செய்யவில்லை.

2001 - 2011 ஆம் ஆண்டு வரை இடைப்பட்ட சில மாதங்கள் தவிர நாம் தி.மு.க. கூட்டணியில்தான் உள்ளோம். எனவே எங்களை அணி மாறுபவர்கள் என குற்றம் சாட்ட வாய்ப்பில்லை. சிலர் அரசி யல் காழ்ப்புணர்ச்சி காரணமாக எங்களை பழிசுமத்துவது பற்றி நாங்கள் கவலைப்படவும் இல்லை.

திட்டக்குடியில் தொகுதி வேட்பாளர் சிந்தனைச்செல்வன் 1986 ஆம் ஆண்டிலேயே இந்துவாக மீண்டும் மதம் மாறிவிட்டார். அவரது மனைவி மற்றும் குடும்பத்தினர் ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்தவர்கள் தான். இதனால் சிந்தனைச்செல்வன் வேட்பு மனுத்தாக்கல் செய்யும் போது தவறான தகவல் எதையும் கூறவில்லை.

எனவே அவர் தேர்தலில் போட்டியி டுவதில் எந்த சட்டச் சிக்கலும் இல்லை. (201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனாட்சி அம்மன் துணை

# அமரர் திருமதி. இராசமணி வீரசிங்கம் அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 04.03.2011 ல் இறைபதம் எய்திய எமது அன்பிற்கும் மதிப்புக்குமுரிய எமது குடும்பத் தலைவி திருமதி.இராசமணி வீரசிங்கம் அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு இல்லம் வந்து இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டும் எல்லா வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது காலத்தால் அழியாத நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 31.03.2011 வியாழக்கிழமை கீரிமலை புண்ணிய தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 02.04.2011 சனிக்கிழமை காலை 10.30 மணி தொடக்கம் அன்னாரின் நாவலர் வீதி இல்லத்தில் நடைபெறுமென்பதை தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வுகளிலும் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்போடு அழைக்கின்றோம்.

பாசத்தின் சிகரமென பாரினிலே எமையீன்று
வாசத்து மலரெனவே வாடாமல்
தினம் காத்து பேசற்கரும் தெய்வமென
நாம் போற்றிடவே வாழ்ந்திருந்த
நேசத்திரு மணியாம் இராசமணி அம்மாவார்
ஈசற்கே சேவை செய்து
இடையறாப் பக்தி கொண்டு
பூசனை கற்பூர தீபத்துட்புகுந்தின்று
மாசத்திலொன்று மனங்கலங்க முடிந்ததனால்
தேசத்தில் அவர் பாதம் தேடியே
நாம் போற்றுகின்றோம்.

*198/5, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*021-2222435*

பாசத்தால் நினைவு கூறும்
குடும்பத்தவர்கள்

(C/577066)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னை நம்புபவர்களில் சந்தேகம் கொள்பவர்கள் வாழ்வில் தோல்வியின் பாதைக்குச் செல்கின்றனர்

குடும்பங்களில் பல வாக்குவாதங்களும் சண்டைகளும் நடந்து கொண்டே இருக்கிறது. இதற்கு முக்கிய காரணியாக அமைவ்து சந்தேகமே.

ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி மீதோ மனைவி கணவன் மீதோ பெற்றோர்கள் பிள்ளைகள் மீதோ சந்தேகம் என்ற பார்வையைப் பிரயோகிப்பதால் அவர்களின் வாழ்வில் சந்தோஷம் விலகிச் சென்று விடுகின்றது.

இதனால்தான் தற்கொலைகள், கொலைகள் சித்திரவதைகள், குடும்பப் பிளவு, விவாகரத்துப் போன்றன மேலோங்கிக் காணப்படுகின்றன.

பறவைக் கூட்டம்போல் ஆனந்தமாக உள்ள குடும்பங்களில் சந்தேகம் எனும் பார்வை குடிகொள்ளுமானால் அதன் விளைவுகளும் மிகப் பாரதூரமாகவே அமைந்து விடுகின்றது.

ஒருவர் ஒருவர் மீது சந்தேகத்துடன் நல்ல மாதிரி கதைப்பது போலியான வாழ்வு தானே. திருமணமான பெண் தன் கணவனை சந்தேகம் கொண்டு அதைப் பற்றி வேறுயாரிடமும் கதைத்தால் அதைப் பெரிதாக எடுத்துக் கதைக்க மாட்டார்கள்.

ஆனால் கணவன் மனைவி மீது சந்தேகம் கொண்டால் அதனை விவரித்து இன்னும் பல மடங்கு கதைகளைக் கட்டி ஒரு பரபரப்பையே ஏற்படுத்தி விடுவார்கள்.

இதனாலேயே குடும்பங்களில் பிளவுகள் ஏற்படுகிறது. பெண்கள் இப்படித் தான் இருக்க வேண்டும் என்று எமது சமுதாயம் எல்லை போட்டு வைத்திருக்கிறது. இதனால்தான் இன்று நீதிமன் றங்களில் பல விவாகரத்துக்கள் அதிகரித்த வண் ணம் உள்ளது. அங்கு செல்பவர்களும் சந்தேகம் என்ற தொனியையே உச்சரிக்கின்றனர்.

ஓர் ஆண் பெண் மீது எப்போது முதன் முதலில் சந்தே கப்பட ஆரம்பித்தது என ஆஸ்திரேலியப் பழங்குடியினரின் நாட்டுப் புறக்கதையை இதற்கு ஒரு சிறந்த உதாரணம் கூறுகிறேன்;

நெருப்பில் இருந்தே பிறப்பு உண்டானது. நெருப்பே பிறப்புக்குக் காரணமானது. இது முன்னோர் கதை சூரிய நெருப்பிலிருந்து பூமி பிறந்தது என்றும் அப்படிப் பிறந்த பூமியில் ஜீவராசிகள் பெருகின. அதன்போது நெருப்பினை பெண்கள் அடி வயிற்றினுள் ஒளித்து வைத்தார்களாம்.



நெருப்பு இல்லாமல் பச்சை மாமிசத்தினை உண்டு வாழ்ந்த காலம். ஆண்களெல்லாம் வேட்டைக்குப் போன பிறகு இவர்கள் மட்டும் இரக சியமாகத் தங்கள் அடி வயிற்றில் இருந்து நெருப்பை எடுத்து மாமிசத்தை வாட்டி உண்பார்களாம். ஒரு நாள் எதிர்பாராது வேட்டைக்குப் போயிருந்த ஆண்கள் திரும்பி வந்துவிட்டார்கள். ஐயோ! ஆண்கள் திரும்பி வந்திட்டார்களே என்று சொல்லி அவசர அவசரமாகப் பக்கு வப்படுத்திய மாமிசத் துண்டங்கள் அவ்வளவையும் எடுத்துத் தங்கள் அடிவயிற்றில் ஒளித்து வைத்தபோது சில மாமிசத் துண்டுகள் தவறிவிட்ட தாம்.

அந்த ஆண்கள் அதையெடுத்து உண்டு பார்க்க மிகவும் சுவையாக இருந்ததைக் கண்டு இதை எப்படிப் பக்குவப்படுத்தினீர்கள்? நெருப்பு எங்கிருந்து எப்படி வந்தது? எங்கே கிடைத்தது? என்று கேட்டபோது தெரியாது என்று சொல்லி விட்டார்களாம். எப்படியாவது கண்டு பிடிக்க வேண்டும். விடக்கூடாது என்று தீர் மானித்தார்களாம் ஆண்கள்.

இப்படித்தான் முதன் முதலில் பெண் மீது ஆண்கள் சந்தேகப்பட ஆரம்பித்தது என்று ஓர் ஆஸ்திரேலியப் பழங்குடியினர் கதை சொல்கிறது.

இவ்வாறு ஒரு தென்னாபிரிக்க பழங்குடிகள் கதையில் பெண் தனக்குள் நெருப்பை ஒளித்து வைத்திருக்கிறாள் என்று சந்தேகப்பட்ட ஒரு போர் வீரன் அந்தக் கன்னிப்பெண்ணை கண்காணிக்கிறான். அவளுக்குத் தெரியாமல் அவளில் இருந்து எப்ப டியோ நெருப்பு வருகிறது. அதை இவனால் பார்க்க முடியவில்லை. ஒரு நாள் அவளை அவன் தனிமை யில் மடக்கி நெருப்பினை காட்டு என்கிறான். அவனிடமிருந்து அவள் தப்பிச் செல்லும் முயற்சி பலிக்கவில்லை. உடம்பு முழுவதும் தேடியும் அவனால் கண்டு கொள்ள முடியவில்லை. அப்போது தனது வாளினை உருவி அவளைக் கொல்லப் போகும் போது உயி ருக்குப் பயந்து நெருப்பினை விடுகிறேன் என தரையில் உட்கார்ந்து வயிற்றைப் பிடித்து உலுக்கியதும் அவளுடைய அடிவயிற்றில் இருந்து ஒளிரும் ஒரு நெருப்புத் துண்டம் விழுந்து உருண்டு ஓடியது. இவ்வாறு பெண் மீது சந்தேகப்பட்டதை அவள் நிவர்த்தி செய்கிறாள்.

இதனால்தான் சந்தேகப்பட வேண்டும். அதனைச் சந்தேகம் கொள்பவர்களுக்கு இல்லை என நிரூபிக்க வேண்டும் என உளவியல் அறிஞர் கூறுகின் றார். கல்விகள், தொழில்கள் இவற்றில் சந்தேகப்பட வேண்டும். அதைத் தீர்க்கும்போது பல விடயங்கள் எமக்குப் புரியும். ஆனால் குடும்பங்களில் சந்தேகம் கொண்டால் அது தோல்வியிலும் வருத்தத்திலும் தான் முடியும். எனவே சந்தேகத்தை விலக்கி நம்பிக்கையை வளர்த்துக் கொள்வோம்.

# பிள்ளைகளின் வளர்ச்சிப் பாதையில் முக்கிய பங்கு வகிப்பது அன்னையே!

சஞ்சீ, யாழ்ப்பாணம்



குழந்தைகளைச் சான்றோர்களாகவோ, நற்பிரஜைகளாகவோ ஆக்க வேண்டிய பொறுப்பு ஒரு தாயிடம்தான் உள்ளது.

''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவன் ஆவதும் தீயவன் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே'' என்பதுபோல ஒரு குழந்தை வளர்ந்து பெரியவன் ஆகும் வரை அவனது வாழ்க்கையில் அன்னை யின் பங்கு எந்தளவுக்கு முக்கியமான ஒன் றாக இருக்கின்றது என்று பார்த்தால் அவை குறிப்பிட்டுக் கூற முடியாத ஒன்றாகும்.

ஒரு பிள்ளைக்கு அன்பை வாரி வழங் குவது அன்னைதான். அதனால் அன்னையின் சொல்லுக்கு கீழ்ப்படிந்து நடக்காத பிள்ளைகளே இருக்க முடியாது என்றே கூறலாம். அதில் ஒரு சிலர் விதி விலக்கு.

பெண்கள் பொறுமை, அன்பு, இரக்கம் உள்ளவர்கள் என்பதால் தான் '' அன்னை'' என்ற திருநாமத்தையும் இறைவன் அவர்களுக்கே கொடுத்திருக்கின்றான்போல. ''தாயைப்போல பிள்ளை நூலைப் போல சேலை'' என்பதும் நம்மவர் கூறும் தத்துவம் தான். ஆனாலும் பிள்ளைகள் தவறுகள் செய்தால் "தாயின் வளர்ப்பு சரியில்லை'' என்பதே செவி வழியாக நாம் கேட்கும் வார்த்தைகள். எனவே குழந்தைகளின் ஒவ்வொரு நடவடிக்கைகளின்போதும் தாயானவள் எப்பொழுதும் கண்காணிப்பில் இருக்க வேண்டியது அவசியம்.

தனது குழந்தைகளில் மனதில் இருக்கும் எந்தவொரு விடயங்களையும் அறிந்து கொள் ளக் கூடிய சக்தியைத் தாயானவள் பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைக்குத் தீர்வுகளை வழங்க முடியும்.

எனவே ஒவ்வொரு பிள்ளையையும் தாய் நன்கு [illegible] யின் [illegible] யும் அடைந்து விடமுடியும்.



## பயணம்

நீண்டதூர
நெடுஞ்சாலைப் பயணத்தில்
உன் இரு விழிப் பார்வைக்காய்
எனது பாதங்கள் நகர்ந்தது
தொலை தூரம்
நான் கடந்து சென்றும்
உன் தரிசனம் கிடைக்கவில்லை
தொடரும் என் பயணம்
உன் வரவைக் காணும் வரை.



## கடவுள் தந்தது...

கிழிந்த சேலையுடன்
நடைப் பிணமாய்
நான் திரிவதற்கு
கடவுள் எனக்காகக்
கொடுத்தது ஏழ்மை
இளமையின் உருவம்
ஏழ்மையாய் இருப்பதற்கு
காரணம் நானா?
கடவுளா?

சுஜித்திரா, உடுவில்.

# பெண்களின் சமூகப் பொருளாதாரம் மேம்பட சமுதாய இணைப்பு அவசியம்

வலுவூட்டல் செயற்பாடானது அபிவிருத்திக்கு மிக அவசியமானது. ஆனால் வலுவூட்டலை யாரும் எவருக்கும் வழங்க முடியாது. இந்த வலுவூட்டல் ஆனது தொடர்ச்சியான கல்வி வழிகாட்டல். அதன்மூலம் பெறப்படும் அறிவை மூலாதாரமாகக் கொண்டதே வலுவூட்டல் ஆகும்.

பெரும்பாலான அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்தச் செயற்பட்டை நடைமுறைப்படுத்தி வந்தபோதிலும் அவற்றின் பயன்பாடு செயற்திறன் மிக்கதாக அமைவதில்லை. ஆனால் இன்றைய நிலையில் குறிப்பாக நாம் மையப்படுத்த வேண்டிய விடயங்களில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மீள் சமுதாய இணைப்பு முக்கியம் பெறுகிறது. எனவே இவர்கள் அபிவிருத்திப் பணியில் இணைத்துக் கொள்ளப்பட்டு அவர்களின் வாழ்வாதாரங்கள், சமூகதரம் என்பன மேம்படுத்தப்பட வேண்டும்.

அரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகள் நிவாரண உதவி 30 வீதத்தால் அதிகரிக்க தீர்மானம்

கொழும்பு மாநகர சபை நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 30

கொழும்பு நகரிலுள்ள 13500 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வரும் குழந்தைகள் நிவாரண உதவியை 30 வீதத்தால் அதிகரிக்கக் கொழும்பு மாநகரசபை தீர்மானித்துள்ளது.

அதற்கமைய தற்போது வழங்கப்பட்டு வரும் 1000 ரூபா நிவாரணம் 1300 ரூபாவாகவும் 400 ரூபா நிவாரணம் 600 ரூபாவாகவும் அதிகரிக்கப்படும் என கொழும்பு மாநகரசபையின் விசேட ஆணையாளர் ஒமர்காமில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக் கமைய பத்து வருடங்களின் பின் இந்தக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டடுள்ளதாக ஒமர்காமில் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இந்த நிவாரண உதவி வேறுபடும். இந்த கொடுப்பனவுக்கு மாதாந்தம் 22 லட்ச ரூபாவுக்கு அதிகமான தொகை தேவைப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மாநகரசபையின் பொதுமக்கள் நிவாரணப் பிரிவுக்கு இந்த நிதி ஒதுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (204-5)

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 29

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பாடசாலை அதிபர்கள் உதயனுக்கு அனுப்பிவைத்துள்ள பெறுபேற்று விவரங்கள் வருமாறு:

**பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி**

*தமிழ் மொழி மூலம்*

உதயமூர்த்தி கீர்த்தனன்- 9ஏ, தங்கவேல் திவாகர்- 9ஏ, கதிர்காமலிங்கம் நிதுசன்- 8ஏபி, சுந்தரலிங்கம் துளசிதாசன்- 8ஏஎஸ், சந்திரலிங்கம் பரணிதரன்- 8ஏபி, சிவலிங்கம் சிவதர்சன்- 7ஏ2பி, சண்முகநாதன் சுகசன்- 7ஏபிசி, சிவஞானசெல்வம் தினேஷ்- 7ஏ2சி, அருட்பிரகாசம் கிருஷ்ணராகவன்- 7ஏபி, குலசிங்கம் கௌரிசங்கள்- 6ஏ2பிசி, சுபேந்திரன் பிரதாப்- 6ஏ2பிசி, அமிர்தலிங்கம் சுபேதன்- 6ஏ2பிசி, இரவீந்திரன் கஜனன்- 6ஏ3பி, சந்திரபாலன் நிர்மலராஜா- 6ஏ2பி,சி, சாந்தகுமார் தனுசன்- 6ஏ, 3பி, ஜெயபாலன் சிந்துஜன்- 6ஏ,2பி,சி.

*ஆங்கில மொழிமூலம்*

சிவானந்தம் நிதுர்சன்- 9ஏ, சரவணபவான் திவாகர்- 9ஏ, காசிலிங்கம் கிரிதரன்- 8ஏபி, சத்தியமோகன் கௌரிசங்கர்- 8ஏசி,ஜெகதீசன் ஜெசிந்தன்- 7ஏ2பி, சிவசேகரன் ரூபின் பிரகாஷ்- 7ஏ2பி, தில்லைநாதன் சுதாகரன்- 7ஏபிசி, வைகுந்தராஜா கோபிநாத்- 6ஏ2பிசி, சிவமூர்த்தி கிருஷ்ண பிரதாப்- 6ஏபி2சி.

**யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி**

என்.எம்.ரீ. ஜோசவ்வாஸ்- 8ஏபி, ஏ.ஏ. எமில்- 8ஏபி, ஜே. நிஷான்- 7ஏபிஎஸ், ஜே. ஜெசிங்ரன் லோகு- 6ஏ2பிசி, ஜே.சரவணன்- , 5ஏ 2பி2சி, என். அனுதர்ஷன்- 5ஏ2பி2சி, வினோஷன்- 5ஏபி 2சிஎஸ், ஜே. சாம்சன்- 5ஏபி2சிஎஸ், ஸ்ரீபவன்- 4ஏ 4பிஎஸ், ஆர்.ராஜ்டிலக்சன்- 4ஏபி4சி, எஸ். திலக்ஷன்- 4ஏ 4சிஎஸ்.

**நாரந்தனை கணேச வித்தியாலயம்**

பு.கௌரிதரன்- 8ஏ, கே.அபர்ணா- ஏ4சி2எஸ், நே.தேனுசா- 2பி2சி4எஸ், அ.சோதிகா- 4சி2எஸ்.

**சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை**

செ. ஜனிதா- 3ஏ3பி2சி, யே. அன்ரனிற்றா சுமதினி, 2ஏ2பி2சி2எஸ், அ.வேஜின் லக்ஷிகா- ஏ2பி4சிஎஸ், ஜெ. நிறோஜினி- ஏ2பி3சி2எஸ், ம. பிரதாயினி- ஏ2பி4சிஎஸ், கி. கிருஷ் ஆனந்தன்- ஏ,2சி,5எஸ்.

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி கனகசபாபதி புஸ்பராசமணி

அவர்கள் 26.03.2011 அன்பு இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரம் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புதுவீதி, ஆறுகால்மடம்.

சகோதரன்-
க.சுந்தரலிங்கம் குடும்பம் (ரங்கசிவம்)

(40)(2721)

## யா/செங்குந்த இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

காலம்: 16.04.2011 சனிக்கிழமை பி.ப.4 மணி
இடம்: கல்லூரி மண்டபம்

சகல அங்கத்தவர்களும் 12.04.2011 இற்கு முன் அங்கத்துவத்தை புதுப்பித்துக் கொள்ளவும். புதிதாகச் சேரவிரும்புவோரும் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

| செ.குகதாஸன் | ச.குகனேசன் | த.ஜெயகாந்தன் |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

(40)(2720)

## மரண அறிவித்தல்

### வேதாரணியம் கணபதிப்பிள்ளை



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் தற்போது கொலண்ட் ROTTERADAM இல் வசித்தவருமாகிய வேதாரணியம் கணபதிப்பிள்ளை 24.03.2011 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேதாரணியம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்-பொன்னரியம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமணியின் (மணி) அருமைக் கணவரும், கணேசலிங்கம் (லிங்கம்- ஜேர்மனி), காலஞ்சென்ற புஸ்பலிங்கம் மற்றும் சந்திரலிங்கம் (ராசன்-கொலண்ட்), சாந்தராணி (ஜெயா-பிரான்ஸ்), திவ்வியராணி (ஜீவா-ஜேர்மனி), இராசலிங்கம் (கண்ணன்-ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கலைச்செல்வி (ஜேர்மனி), நந்தினி (கொலண்ட்), கிருபாகரன் (குட்டி-பிரான்ஸ்), சுந்தரலிங்கம் (ஜேர்மனி), தயாழினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வராசா, மல்லிகாதேவி (கனடா), லோகேஸ்வரி (பெல்ஜியம்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2011) வியாழக்கிழமை கொலண்டில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்.
திருமதி இராசமணி (மணி) நெதர்லாந்து
தொ.பே: 0031104770714
திரு.சந்திரலிங்கம் (ராசன்) நெதர்லாந்து
தொ.பே: 0031641524238

தகவல்:
சு.செல்வராசா
(மைத்துனர்)

(39-23-24)()

## விண்ணப்பத் திகதி நீடிப்பு

இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் நடத்தப்படவுள்ள ஒரு வருட காலத் திரைப்பட டிப்ளோமா (தமிழ்) பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது எனத் திரைப்படக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 0112585721, 0112564623 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது sirahununi @ gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியுடனோ தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாயில் 4 பரப்புக் காணியில் உள்ள சகல வசதிகளுடன் கொண்ட வீடு *(5அறைகள்)* விற்பனைக்கு உண்டு. (16 தென்னை/ 7பலா/ 4 மா மரங்களைக் கொண்ட மாத வருமானம் 2500/= - 3500/=) கோயில், வைத்தியசாலை, bus stand 2 நிமிடமும் banks/ foodcity/ S.market செல்ல 5 நிமிடமும், திறை tank motor வசதிகளுடன்.

தொடர்புகளுக்கு:-0777368020.

## தவக்காலச் சிந்தனை



### ஆலயம் ஆராதனைக்கா? அலங்காரத்திற்கா?

ஒரு நகரில் ஞாயிறு தினங்களில் இரண்டு திருப்பலி நடைபெறும். முதல் திருப்பலி அதிகாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும். இது ஏழைகளின் திருப்பலி என்று அழைக் கப்பட்டது. காரணம் பழைய, கிழிந்த துணிகளை உடுத்தும் ஏழைகள் இருட்டோடு இருட்டாக ஆலய திருப்பலிக்கு வந்துவிட்டு திரும்புவார்கள். இரண்டாவது திருப்பலி காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும். இது பணக்காரர்களின் திருப்பலி என்று அழைக்கப்பட்டது. இத்திருப்பலியில் நகைக்கடை, ஜவுளிக்கடை கண்காட்சியைப் பார்க்கலாம். ஆனால் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் அருவருக்கத்தக்கதே. ஆதிக்கிறிஸ்தவர்கள் ''எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்த னர். நிலபுலனும், பிற உடைமைகளையும் உடையோர் அவற்றை விற்று அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்ப பகிர்ந்தனர் என்று திருத்தூதர் பணிகள் (2:44-45) பகுதியில் பார்க்கின்றோம். இதுதான் ஏற்றத்தாழ்வற்ற கிறிஸ்தவ வாழ்க்கை.

கங்கேரி நாட்டு எலிசபெத் அரசியாக முடிசூட்டப்பட்ட பின் தேவாலயத்துக்கு நன்றி கூறி செபிக்க வந்தாள். வாயில் படியில் நின்று பார்க்கும்போதே எதிரே பாடுபட்ட இயேசுவின் சுருவத்தைக் கண்டாள். எலிசபெத் அரசி உடனே தன் பொன் கிரீடத்தை அகற்றி மிகவும் தாழ்ந்து பணிந்து வணங்கினாள். அருகில் நின்ற அரசியின் தாய் மகளைப் பார்த்து ஏன் பொன் கிரீடத்தை அகற்றினாய்? நீ அரசியல்லவா என்றாள். அப்பொழுது எலிசபெத் தன் தாயிடம் அரசருக்கெல்லாம் அரசராகிய என் தெய்வத்துக்கு முள்முடி சூட்டப்பட்டிருக்கும்போது நான் எப்படி பொன் முடி சூடிக்கொண்டு ஆலயத்துக்குள் செல்ல முடியும்? என்று பதிலுரைத்தாள். இந்த அரசியே பிற்காலத்தில் புனிதையாக அறிவிக்கப்பட்டாள். இன்று திருப்பலிகளுக்கும் ஏனைய வழிபாடுகளுக்கும் வரும் மக்கள் பட்டாடைகள் உடுத்தி, பல ஆபரணங்களை அணிந்து பகட்டுடன் தலை நிமிர்ந்து நடந்து தங்கள் செல்வச் செருக்கை வெளிப்படுத்த ஆலயத்தை ஒரு கருவியாக பயன்படுத்துகின்றார்கள். ஆனால் திருத்தூதர் பவுலோ ''கடவுளுக்கு உகந்த தூய, உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள் இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு'' (உரோ 12:1) என்று எமக்கு கற்றுத்தருகின்றார்.

க. அருள்நேசன், குருநகர்.

## அந்தியேட்டி கிரியை அழைப்பு



திருமதி
### செல்வநாதன் செல்வநந்தினி

தோற்றம்:
24.09.1969

மறைவு
01.03.2011

கடந்த 01.03.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப குலவிளக்கு திருமதி செல்வநாதன் செல்வநந்தினி அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியை இன்று (30.03.2011) புதன்கிழமை கன்னியாவிலும், வீட்டுக் கிருத்திய கிரியைகள் நாளை (31.03.2011) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 04, கோணேசபுரம்,
உவர்மலை,
திருகோணமலை.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/577051) (38)

## மரண அறிவித்தல்

### இரத்தினம் நவரத்தினம் (திருநாவுக்கரசு)

**(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)**

பிரம்படி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் நேற்று (29.03. 2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தனபாக்கியவதி அம்மாவின் அன்புக் கணவரும் இரத்தினமலர், ரஞ்சிதமலர், வசந்தமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் இராமகிருஷ்ணன், சுந்தரலிங்கம், ரஞ்சித் ஆகியோரின் மாமனும் பிரண்ணா, சாயிரஞ்சினி, ருக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மன்னார் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

S.S இராமகிருஷ்ணன்,
3ஆம் குறுக்குத் தெரு,
சின்னக்கடை, மன்னார்.

தகவல்:
*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

(40-19-20)(2708)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org